2009 மே 19ஆம் திகதி வன்னிப் போர் முடிவுற்ற நாள் அல்ல பக். 12

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

33°c - 26°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 112 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 04, வியாழக்கிழமை 16.03.2016

# மின் விநியோகம் இன்று வழமைக்கு

## மின்சக்தி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 17
நாடு முழுவதிலும் நடைமுறைப் படுத்தப்பட்ட சுழற்சிமுறை மின் வெட்டு முடிவுக்கு கொண்டு வரப் பட்டு, இன்று வியாழக்கிழமை முதல் சீரான மின் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும், மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம் பலாப்பிட்டிய அறிவித்துள்ளார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதிலும் திடீர் மின்தடை ஏற்பட்டது. சுமார் 8 மணி நேரத் துக்குப் பின்னரே, மின்தடை பக். 25

# முல்லைத்தீவுக்கு திடீரென வந்தார் ஞானசார தேரர்

## விகாரை அமைப்பு, சிங்களக் குடியேற்றம் குறித்து ஆராய்வு



யாழ்ப்பாணம், மார்ச் 17
பொதுபல சேனாவின் பொதுச் செயலாளரும் சர்ச்சைக் குரிய பௌத்த தேரராக சித்திரிக்கப்படுபவருமாகிய கல கொட அத்தே ஞானசார தேரர், முல்லைத்தீவு மாவட்டத் தின் கொக்கிளாய் பிரதேசத்துக்குக் கடந்த திங்கட்கிழமை திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.
கொக்கிளாயில் அமைக்கப்படும் விகாரை மற்றும் முகத் துவாரப் பகுதியில் சிங்கள மக்களுக்காக முன்னெடுக்க முயற்சிக்கப்படும் வீட்டுத் திட்டம் தொடர்பி லேயே, இந்தப் பயணத்தின்போது அவர் பக். 23

# இ.போ.ச. முகாமையாளருக்கு மேல்நீதிமன்றம் எச்சரிக்கை

## போக்குவரத்துச் சிக்கலை உடனே தீர்க்குமாறும் நீதிபதி அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 17
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாணச் செயற்பாட்டு முகாமையாளர் யாழ்.மேல்நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு, போக்கு வரத்தில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க ஒத்துழைக்காது இருந்தமைக் காக, யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதியால் திறந்த நீதிமன்றில் நிற்க வைத்து கேள்வி மேல் கேள்வி கேட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.
தவிர போக்குவரத்தில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இதனைச் பக். 24

# கிளிநொச்சியில் புதிதாகப் புத்தர்



கொழும்பு, மார்ச் 17
கிளிநொச்சியில் புதிதாகப் புத்தர் சிலையுடன் கூடிய பௌத்த வழிபாட்டு இடம் ஒன்று இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
அனுராதபுரத்தில் உள்ள ஜெயசிறி மகாபோதி வெள்ளரச மரத் தின் கிளையொன்று, கிளிநொச்சிப் படைகளின் தலைமையகப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் நடப்பட்டது.
அந்த இடத்தில், புதிதாகச் சமாதி நிலைப் புத்தர் சிலையுடன் பௌத்த வழிபாட்டு இடம் ஒன்று இராணுவத்தின் 11 ஆவது பொறி யியல் படைப் பிரிவினரால் குறுகிய காலத்தில் கட்டப்பட்டுள்ளது. பக். 23

முச்சந்தி முரளி



அப்ப இங்கயும் குழப்பப் போறார் போல....

# சுமந்திரனின் சட்டவரைவு; ஆராய வரவில்லை விக்கி

யாழ்ப்பாணம், மார்ச் 17
நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் தனிநபர் சட்டவரைவை, அவருடன் கலந் தாலோசித்தே திருத்தம் மேற் கொள்ளவேண்டும் என்று முத லமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மாகாண சபையில் வைத்துத் தெரிவித்திருந்தார்.
எனினும், இது தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் பக். 24

# தெஹிவளை வீடொன்றில் நான்கு பேர் சடலமாக மீட்பு

## நச்சு வாயுத் தாக்கமே உயிரிழப்புக்குக் காரணம் என்கிறது மருத்துவ அறிக்கை

கொழும்பு, மார்ச் 17
தெஹிவளை – கவுடான வீதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து நான்கு பேரின் சடலங்கள் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளன.
அந்த வீட்டில் வசிக்கும் வர்த்தகர், அவருடைய மனைவி, மகள் மற் றும் உறவினரின் மகள் ஆகியோரே உடல்கள் கறுப் படைந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். பக். 23

## முல்லைத்தீவில் சிங்கள மீனவர்கள் தொழில் செய்ய ராணுவமே காரணம்

வடக்கு மாகாண ஆளுநரிடம் முறைப்பாடு

பக். 04

# 55 மில்லியன் டொலரில் யாழ். நகரம் அபிவிருத்தி

## திட்ட அறிக்கையை இறுதியாக்க உலக வங்கிப் பிரதிநிதிகள் வருகை

யாழ்ப்பாணம், மார்ச் 17
55 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் முன்னெடுக்கப்பட வுள்ள யாழ்.நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பான திட்ட அறிக் கையை இறுதி செய்யும் கலந் துரையாடல் நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.
யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலில் உலக வங்கிப் பிரதிநிதிகளும் மாவட்ட பொதுத்துறைப் பிரதிநிதி களும் கலந்து கொண்டனர்.
குறித்த திட்டத்துக்காக, உலக வங்கி 55 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.
குறித்த கலந்துரையாடல் தொடர் பில் யாழ். அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில் ,
இந்தத் திட்டம் தொடர்பான அறிக்கை தயாரிக் கப்பட்ட போதும், பக். 23

# 'குருடீ' பெயருடன் பொட்டு

## தமிழகத்தில் வாழ்கிறார் என்கிறது சிங்கள ஊடகம்



கொழும்பு, மார்ச் 17
தமிழீழ விடுதலைப் புலி கள் அமைப்பின் புல னாய்வுத்துறைப் பொறுப் பாளர் பொட்டு அம்மான் 'குருடீ' என்ற பெயருடன் தமிழ்நாட்டில் தலை மறைவாக வாழ்ந்துவரு கிறார்.
இவ்வாறு சிங்கள ஊட கம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
எனினும், இதுபற்றி எந்தவித கருத்தையும் வெளியிட முடியாது என்று இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். பக். 23

SRI LANKA'S MOST ACCEPTED BRITISH MBA PROGRAMME
Cardiff Metropolitan University
MBA
Master of Business Administration
ICBT CAMPUS JAFFNA
www.icbt.lk
580, Hospital Rd., Jaffna | Tel: 0214 777 888
0769 289 784
0769 289 810

Digitized by Noolaham Foundation

# துணுக்காய் கல்விப் பணிப்பாளரை உடனடியாக இடமாற்றம் செய்யுங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 17

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலினி வெனிற்றனை இடமாற்றம் செய்யவேண்டும் அல்லது அந்த வலயத்தில் உள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் இடமாற்றம் வழங்கிச் சுதந்திரமாக மாணவர்களுக்குக் கல்வி புகட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரித் துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் ஒன்றுதிரண்டு நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக ஒன்று திரண்ட துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த 350 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் சுகவீன விடுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் பங்கு கொண்ட ஆசிரியர்களே மேற்கண்டவாறு தமது ஆதங்கங்களை ஒருமித்த குரலில் வெளிப்படுத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் "செய்யாதே..! செய்யாதே..! கல்வி அமைச்சே ஆசிரியர் எமக்கு துரோகம் செய்யாதே", "எங்கே எங்கே நடந்த விசாரணைக்கு பதில் எங்கே...?", "பதில் சொல் பதில் சொல் மாகாண அரசே ஆசிரியர்களுக்கு தீர்வைச் சொல்", "துடிக்காதே துடிக்காதே பழி வேண்டத் துடிக்காதே" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் தொடர்பில் ஆசிரியர் நவநீசன் கருத்துரைக்கையில்,

வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எதிராக - அவரது முறைகேடுகள் தொடர்பாக முப்பதுக்கும் மேற்பட்ட எழுத்து மூல ஆவணங்கள், ஆதாரங்கள் வழங்கப்பட்டும் இன்றுவரை எவ்வித நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மேற்கொள்ளவில்லை.

இது அவர்களுக்கும் வலயக் கல்விப்பணிப்பாளருக்கும் இடையிலான ஏதோ ஓர் தொடர்பைக் காட்டுகின்றது.

வலயக் கல்விப் பணிப்பாளரை இடமாற்றம் செய்யவேண்டும். இடமாற்றம் செய்யும் வரை தொடர்ந்து சுகவீன லீவுப் போராட்டத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். இதில் எந்த மாற்றமுமில்லை.

துணுக்காய் வலயத்தில் உள்ள பாடசாலையான விநாயகபுரத்தில் தற்போது மூன்றாவது பாடசாலையாகக் கடமையாற்றுகின்றேன். 2011 ஆம் ஆண்டு முதல் நியமனத்தைக் கற்சிலைமடு அ.த.க பாடசாலையில் பெற்றுக் கொண்டேன். அதன்பின் எனக்குத் திட்டமிட்ட முறையில் 2013 ஆம் ஆண்டு ஒதியமலை ஆரம்ப நிலைப் பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கினார். அங்கு எனக்குரிய பாடத் தெரிவு இன்மையால் மீண்டும் இடமாற்றம் வேண்டி மூன்றாவது பாடசாலையில் கடமையாற்றுகிறேன்.

இவ்வாறு திட்டமிட்ட முறையிலே இடமாற்றங்களைப் பொருத்தமின்றி வழங்கி ஆசிரியர்களின் வினைத்திறனான கல்வி வழங்கல் செயற்பாடுகளில் இடையூறுகளை ஏற்படுத்துகின்றார்.

இதேபோன்று குழந்தை கிடைத்த பெண் ஆசிரியை ஒருவருக்கு இரண்டு வருடங்களுக்கு அவரது வீட்டுக்கு அருகாமையில் உள்ள பாடசாலையில் கடமையாற்ற அனுமதியை வழங்க முடியும். ஆனால் ஓரு ஆசிரியை இடமாற்றம் கேட்டதற்கு அதே பாடசாலையில் தான் கடமையாற்ற வேண்டும் என்று கண்டிப்பாகத் தெரிவித்ததுடன், 25 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கிண்ணியன்குளம் பாடசாலைக்கு இடமாற்றம் கொடுத்துவிட்டார்.

இது தொடர்பில் ஆசிரியர் சங்கம் போராடி நியாயம் பெற்றுக் கொடுத்த போதும் அந்த ஆசிரியையைப் பழிவாங்கும் வகையில் ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுக்காமல் தாமதப்படுத்தினார்.

இவ்வாறான பல பிரச்சினைகள் அங்கே இருந்து வருகின்றன. இவை தான் போராட்டங்களாக விஸ்வரூபம் எடுத்திருக்கின்றன-என்றார்.

மல்லாவி மத்திய கல்லூரி ஆசிரியர் ஒருவர் கருத்துரைக்கையில்,

கடந்த இரண்டு வருடகாலமாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எதிராகவும், அவர் செய்துவருகின்ற அடக்குமுறைகளுக்கு எதிராகவும் பல தடவைகள் எழுத்து மூலமான முறைப்பாடுகளையும் ஆதாரங்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கிறோம்.

அது தொடர்பில் எல்லோருடனும் கதைத்திருக்கிறோம். இருந்தபோதும் இந்த நிமிடம் வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு சரியான தீர்வைப் பெற்றுத்தரவில்லை. கல்விப் பணிப்பாளரின் மாற்றம் உறுதிப்படுத்தப்படும் வரை தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்போம் - என்றார்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தமது பிரச்சினை தொடர்பில் பேசித் தீர்ப்பதற்குக் கல்வி அமைச்சரைச் சந்திப்பதற்குப் பொருத்தமான நாள் புதன்கிழமை எனக் கருதி கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாகக் கூடியபோதும் கல்வி அமைச்சர் அங்கு இருக்கவில்லை. இதேபோன்று முதலமைச்சர் அலுவலகத்துக்கு ஆசிரியர்கள் சென்ற போதும் முதலமைச்சரும் அங்கு இருக்கவில்லை.

செட்டிகுளத்தில் இடம்பெறும் நடமாடும் சேவையில் அவர் கலந்து கொண்டுள்ளதாகத் தெரியப்படுத்தப்பட்டபோதும். உண்மையில் அவர் அங்கு இருக்கவில்லை என்று ஆசிரியர்கள் குறிப்பிட்டனர்.

(து-ஐ-4-ரி2)

# எட்கா ஒப்பந்தத்துக்கு வைத்தியர்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

தனியார் வைத்தியக் கல்லூரி நிறுவுதல் மற்றும் இலங்கை - இந்தியா தொழில்நுட்ப ஒப்பந்தம் (எட்கா) ஆகியவற்றுக்கு எதிராக வடக்கு மாகாண வைத்தியர்களால் வவுனியாவில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



வவுனியா மருத்துவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டம், வவுனியா வைத்தியசாலையில் ஆரம்பமாகி மீளவும் வைத்தியசாலையை வந்தடைந்தது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் வைத்தியர்கள் விடுதியில் ஒன்று கூடிய வைத்தியர்கள் கலந்துரையாடல் நடத்தினர். பின்னர் 12 மணியளவில் அங்கிருந்து பேரணியாக ஏ - 9 வீதியூடாக மணிக்கூட்டுச் சந்தியை வந்தடைந்தனர். பின்னர் பசார் வீதியூடாக மீண்டும் வவுனியா பொது வைத்தியசாலையை வந்தடைந்தனர்.

இந்தப் போராட்டத்தின் போது சிங்கள மொழியில் எழுதப்பட்ட பதாகைகளையே வைத்தியர்கள் அதிகம் பிடித்திருந்தனர். இதில் இலங்கையில் நிறுவப்படவுள்ள தனியார் வைத்தியக் கல்லூரிக்கு எதிரான சுலோகங்கள் மற்றும் இந்திய - இலங்கைத் தொழில் நுட்ப ஒப்பந்தத்துக்கு எதிரான சுலோகங்கள் அடங்கியிருந்தன.

போராட்டம் குறித்து அரச மருத்துவர் உத்தியோகத்தர் சங்கத்தின், பிராந்திய இணைப்பாளர் காண்டீபன் தங்கராஜா கருத்துத் தெரிவிக்கையில், தனியார் மருத்துவக் கல்லூரியானது இலங்கை மருத்துவ சபையின் அனுமதி பெறாமல் ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஆரம்பித்திலிருந்து இலங்கை மருத்துவ உத்தியோகத்தர் சங்கமானது எதிர்த்து வந்தது. இதனை கவனத்தில் எடுக்காது தற்போது குறித்த கல்லூரியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைச் சேர்த்துள்ளார்கள். ஒரு மாணவனிடம் ரூ.65 லட்சம் தொடக்கம் 135 லட்சம் வரை அறவிட்டுள்ளார்கள். மில்லியன் கணக்கான பணத்தை சேர்த்திருக்கிறார்கள். இவர்களைப் படிப்பிக்க வைத்தியசாலை இல்லை. இதற்காகவே வைத்தியசாலையொன்றை கட்டினார்கள். எனினும் இந்த வைத்தியசாலைக்கு பொதுமக்கள் செல்வது குறைவு. இதனையடுத்து சுகாதார அமைச்சின் அனுமதியுடன் அவிசாவெல பகுதியில் பொது வைத்தியசாலையில் கற்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த விடயமும் தவறானது இதற்கு எதிராகவும் நாம் இந்தப் போராட்டத்தில் பங்கெடுக்கின்றோம்- என்றார். (கு-ஐ-5-21-402)

# ஆஸ்திரேலியத் தூதுவர் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம்,மார்ச் 17

ஆஸ்திரேலியத் தூதுவர் பிரைஸ் ஹட்செசன் அடங்கிய குழுவினர் நேற்றுப் புதன்கிழமை யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்தனர்.

இதன்போது, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்குச் சென்ற இந்தக் குழுவினர் ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண மக்களின் பிரச்சினைகள் மற்றும் அரசியல் சூழ்நிலைகள் பற்றி இவர்கள் ஆராய்ந்தனர். அதன் பின்னர் யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகனை யாழ். மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது இறுதிப் போர் பற்றியும், பொதுமக்களின் இழப்பீடுகள் உட்பட வடக்கு மாகாண மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் பற்றியும் இவர்கள் ஆராய்ந்தனர்.

இன்று வியாழக்கிழமை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(து-ஐ-106)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் வீரர் அடித்துக் கொலை; 3 குற்றவாளிகளுக்கு 10 வருட சிறை

## யாழ். மேல் நீதிமன்று நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணம் செங்குந்தா மைதான கிரிக்கெட் வீரர் கிறிஸ்தோபர் பிரேமன் அடித்துக் கொலை செய்யப்பட்ட வழக்கில், 3 எதிரிகளுக்கு தலா 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது யாழ்.மேல்நீதிமன்று.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் அந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட ஏழு எதிரிகளில், முதலாம், இரண்டாம், ஏழாம் எதிரிகளான அருளானந்தம் சோபஸ், இராஜகுலேந்திரன் நிசாந்தன், உமாகாந்தன் கிரிகேசன் ஆகிய மூவருக்குமே இவ்வாறு கடூழியச் சிறைத் தண்டனையும், தலா பத்தாயிரம் ரூபா தண்டமும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

தலைமறைவாகியுள்ள ஏழாம் எதிரி உமாகாந்தன் கிரிகேசன், இல்லாமலேயே வழக்கு விசாரணை நடைபெற்றுள்ளது. எனவே, சர்வதேச பொலிஸாரின் துணையுடன் குறித்த எதிரியைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலையாக்குமாறு, பொலிஸ்மா அதிபருக்கு யாழ். மேல் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் செங்குந்தா விளையாட்டு மைதானத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியின்போது, கிறிஸ்தோபர் பிரேமன் என்ற 21 வயது கிரிக்கெட் விளையாட்டு வீரர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, அருளானந்தம் சோபஸ், இராஜகுலேந்திரன் நிசாந்தன், வீரையா ஜெயப்பிரகாஷ், ஜெயலத் எமில்டன், இராஜேஸ்வரன் சப்தஸ்வரன், அமிர்தலிங்கம் விதன், உமாகாந்தன் கிரிகேசன் ஆகிய 7 எதிரிகளுக்கு எதிராகச் சட்டமா அதிபரினால் யாழ்.மேல் நீதிமன்றத்தில் பொது எண்ணத்துடன் கொலை செய்ததாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கில் எதிரிகள் ஏழு பேரும், சட்டவிரோதக் கூட்டம் கூடி, பொது எண்ணத்துடன் ஒன்று சேர்ந்து, கிறிஸ்தோபர் பிரேமனைக் கொலை செய்துள்ளார்கள் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் அரச தரப்பில் முதலாவது சாட்சியாக சாட்சியமளித்த இராமகிருஸ்ணன் அகில்ராஜ், முதலாம் எதிரி சோபஸ் கொல்லப்பட்ட பிரேமனுக்குக் கறுப்புக் கொட்டன் பொல்லால் தலையில் அடித்ததையும், ஏழாம் எதிரி கிரிகேசன் இறந்த பிரேமனுக்கு விக்கெட்டால் வயிற்றில் அடித்ததையும் நேரில் கண்ணால் கண்டதாக தனது சாட்சியத்தில் தெரிவித் தார்.

அடிபட்ட பிரேமன், காயமடைந்து நிலத்தில் சரிந்தார். மைதானத்தில் விழுந்து கிடந்த அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு முயற்சித்தபோது, அந்த வழியால் முதலில் வந்த இரண்டு முச்சக்கர வண்டிகள், அவரை ஏற்றிச் செல்ல மறுத்துவிட்டன. பின்னர் வயோதிபர் ஒருவருடைய முச்சக்கர வண்டியிலேயே, அடிகாயங்களுக்கு ஆளாகிய பிரேமனை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அனுமதித்தேன் எனச் சாட்சி குறிப்பிட்டுள்ளார். ஏழு நாள்கள் கோமா நிலையில் இருந்த பிரேமன் 21 ஆம் திகதி உயிரிழந்தார்.

விசாரணைகளின் முடிவில், நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் முதலாம் எதிரி சோபஸ், இரண்டாம் எதிரி நிசாந்தன், ஏழாம் எதிரி கிரிகேசன் ஆகியோரை நீதிமன்றம் குற்றவாளிகளாகக் கண்டுள்ளது என்று நீதிபதி இளஞ்செழியன் அறிவித்தார்.

அதனடிப்படையில், மூன்றாவது எதிரி ஜெயப்பிரகாஷ், நாலாம் எதிரி எமில்டன், ஐந்தாம் எதிரி சப்தஸ்வரன், ஆறாம் எதிரி விதன், ஆகிய நான்கு பேருக்கும் எதிராக வழக்குத் தொடுநர் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் கொலைக் குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறியுள்ளார். எனவே, அவர்கள் நால்வரையும் இந்த நீதிமன்றம் விடுதலை செய்கின்றது.

முதலாம் எதிரி சோபஸ், இரண்டாம் எதிரி நிசாந்தன், ஏழாம் எதிரி கிரிகேசன் இந்த மூவரும் பொது எண்ணத்துடன் ஒன்று சேர்ந்து பிரேமன் என்பவரை ஆள் கொலை புரிந்துள்ளார்கள் என்பது விசாரணைகளின் மூலம் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இறந்தவரை எதிரிகள் இருவர் தாக்கியபோது, அங்கிருந்த பிரேமனின் அணி உறுப்பினர்கள் அவரைக் காப்பாற்றுவதற்காக, அவருக்கு அருகில் செல்ல அனுமதிக்காத வகையில், இரண்டாம் எதிரி நிசாந்தன் அந்த உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். அதே நேரம் சோபஸும் கிரிகேசனும் இறந்தவரைத் தாக்கியபோது, நிசாந்தன் அதனைத் தடுக்கவில்லை.

நிசாந்தனே, முதலில் மைதானத்திற்குள் சென்று விக்கெட்டைத் தட்டிவிட்டு, பிரச்சினையை ஆரம்பித்தவராவார். எனவே, மூன்று எதிரிகளும் பொது எண்ணத்துடன் பிரேமனைக் கொலை செய்தார்கள் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

குறித்த 3 எதிரிகளுக்கு தலா 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிப்பதுடன் மூவரும் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகசெலுத்தவேண்டுமெனவும் நீதிமன்று உத்தர விடுகிறது என நீதிபதி தீர்ப்பளித்தார்.

விளையாட்டில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு விளையாட்டு வீரனுக்கும், விளையாட்டுச் சம்பந்தமான தரமான மனப்பான்மை இருக்க வேண்டும். கிரிக்கெட் விளையாட்டு என்பது கனவான்களின் விளையாட்டாகும்.

விளையாட்டுவிளையாட்டாகவே இருக்கவேண்டும். விளையாட்டு எப்போது விபரீதமாக மாறுகின்றதோ அப்போது, வன்செயல் தலைவிரித்தாடும். அத்தகைய வன்செயலில்பங்குபற்றியஅனைவரும் குற்றம் புரிந்தவர்களாகவே கருதப்படுவார்கள் என்று நீதிபதி தெரிவித்தார். (து-வ-4)

# பிரதான சந்தேகநபரை கைது செய்ய நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு

## தட்டாதெரு வாள்வெட்டுடன் தொடர்புடைய வழக்கு நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்.தட்டாதெருச் சந்தியில் மாணவன் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், ஏற்கனவே 2 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளரான பெண்ணும் பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

அத்துடன், வழக்கின் பிரதான சந்தேகநபரைக் கைது செய்து மன்றில் நாளை முற்படுத்துமாறு நீதிமன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

குறித்த சம்பவத்தில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளதனால், அவர்கள் பற்றிய விடயத்துக்காக யாழ்.இந்துக் கல்லூரி அதிபரை நாளை நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவர், வலயக் கல்வித்திணைக்களம் ஒன்றில் பணிபுரியும் பணிப்பாளரின் மகன் என்றும் கூறப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, அவர்கள் 18 ஆம் திகதி வரை (நாளைவரை) விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அத்துடன், குறித்த சம்பவத்தில் பிரதான சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்யாது, பக்கச்சார்பாக நடந்து கொள்வதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் குற்றஞ்சுமத்தினார். இதனையடுத்து வழக்கில் பிரதான சந்தேகநபராகக் கூறப்படும் இரட்ணசிங்கம் செந்தூரனைக் கைது செய்து நீதிமன்றில் நாளை முற்படுத்துமாறு நீதிமன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

மோட்டார் சைக்கிள் உரிமையாளரான பெண், யாழ். போதனா வைத்தியசாலை பணியாளர் என்று கூறப்பட்டுள்ளது. அவர் முன்னரே மோட்டார் சைக்கிள் வாங்கி குறித்த சந்தேக நபருக்குக் கொடுத்துள்ளார் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது. குறித்த பெண் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டார். அவர் மீதான வழக்குத் தொடரவுள்ளது.

தவிர சந்தேகநபர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லாதிருக்க, குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்குக் கட்டளை பிறப்பிக்குமாறு பொலிஸார் கோரிய விண்ணப்பத்தை நீதிமன்று ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த வழக்கு நாளை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (து-வ-4,103)

# சிறுமி வன்புணர்வு; தீர்ப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

பதின்ம வயதுச் சிறுமி வன்புணரப்பட்ட வழக்கின் தீர்ப்பு யாழ்.மேல்நீதிமன்றில் நேற்று வழங்கப்படவிருந்த நிலையில் வன்புணர்ந்தார் என்று கூறப்படும் நபர் உயிரை மாய்க்க நஞ்சருந்தி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு இன்னும் விடுதலையாகாததால் அவர் மீதான தீர்ப்பு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி மூத்தவிநாயகர் கோயிலடியைச் சேர்ந்த 69 வயதுடைய வயோதிபரே அவ்வாறு நஞ்சருந்தி சிகிச்சை பெற்று வருகிறார் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பதின்ம வயதுச் சிறுமி மாலை கட்டுவதற்கு பூ பிடுங்குவதற்காகச் சென்றபோது அவருக்கு கட்டாயப்படுத்தி மயக்க மருந்து கலந்த மென்பானம் வழங்கி சிறுமி மயங்கிய பின்னர் சிறுமியை வன்புணர்ந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அது பற்றிய விசாரணை யாழ்.மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்தநிலையில், அதன் தீர்ப்பு கடந்த திங்கட்கிழமை வழங்கப்படும் எனக் கூறப்பட்டு யாழ். மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் குறித்த சந்தேகநபர் நீதிமன்றுக்கு வராது இருந்துள்ளார். அதனால் அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மேல்நீதிமன்று திறந்த நீதிமன்றில் வழக்கு நடத்தியபடி பிடியாணை விடுத்திருந்தது. அதன்பின்னர் குறித்த சந்தேக நபர் நஞ்சருந்திய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதனால் அவர் மீதான தீர்ப்பு நேற்று வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் குறித்த சந்தேக நபர் நேற்றும் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. அவர் இன்னமும் பருத்தித்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று நீதிமன்றில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. மருத்துவ அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனால் அவர் மீதான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அவரை வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டு அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு பருத்தித்துறை நீதிவானுக்கு யாழ். மேல்நீதிமன்று நேற்றுப் பணித்தது. குறித்த சந்தேகநபர் சிறைச்சாலை உத்தியோகத்தரின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

(து-4)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2751 திகதி 16.03.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
23 41 55 58 C
போனஸ் இல. 19
சனிக்கிழமை ஜக்பொட்
ரூ. 10,000,000/-
2016.03.19 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.

Galaxy Star
வெற்றி வாரம் 043 திகதி 16.03.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
10 18 26 49 56
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 24,90,740/-

British College of Higher Studies
BCHS
வழங்கும் இலங்கை நிர்வாக சேவைக்கான வகுப்புகள்
SLAS/SLEAS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
(Open/ Limited)
வகுப்புகள் யாவும் பிரபல விரிவுரையாளர்களினாலும்
துறைசார் அனுபவமிக்கவர்களால்
100% வெற்றியை இலக்காகக் கொண்டு நடத்தப்படுகிறது
Batch I : 19/03/2016 Batch II : 20/03/2016
@10.00am
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913, 0770365728, 0773776770

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் சிங்கள மீனவர்கள் தொழில் செய்ய ராணுவமே காரணம்

## வடக்கு மாகாண ஆளுநரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 17

முல்லைத்தீவில் சிங்கள மீனவர்கள் தொழில் செய்வதற்கு இராணுவத்தினரே காரணம் என்று, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத்தினர், வடக்கு மாகாண ஆளுநரிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வடக்கின் ஒவ்வொரு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் பிரதிநிதிகளும் பல்வேறு முறைப்பாடுகளை இதன்போது தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் மீனவர் அமைப்புக்களுக்கும், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் பாதுகாப்புத் தரப்பினர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட பிரதிநிதி மரியதாசன் குறிப்பிடுகையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் தென்னிலங்கை மீனவர்களைக் கொண்டு வந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடவைத்தவர் 511 ஆவது படைப் பிரிவின் தளபதி. மீனவர் சங்கங்களின் தெரிவின் போதும், இராணுவத் தளபதி தனக்கு இசைவானவர்களையே தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டார். இதன் மூலம் அத்துமீறிய தென்னிலங்கை மீனவரின் மீன்பிடிக்குக் களம் அமைத்துக் கொடுத்தார்.

தென்னிலங்கை மீனவர்கள் சட்டவிரோதமான முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு எதிராகச் சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுக்க முன் வரும் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. நாம் சிங்கள மீனவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல. எமது மாவட்டத்தில் ஆயிரத்து 200 படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கொக்குத்தொடுவாயில் உள்ள சிங்கள மக்களின் 200 படகுகள் மாவட்டத்தின் பதிவில் உள்ளன. கொக்குளாயில் வலைப்பாடு செய்த தமிழர்கள் போரின்போது விரட்டப்பட்டனர். இங்கு 8 வலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது இந்த அனுமதியைப் புயன்படுத்திச் சிங்கள மீனவர்கள் தொழில் புரிகின்றனர். எனவே முன்பு தொழில்புரிந்த வர்களுக்கு குறித்த அனுமதி பெற்றுத் தரப்படவேண்டும்.

எமது மாவட்டத்துக்கு அரசு உதவி புரியாது விட்டாலும், நாம் வாழ்வோம். ஆனால் சட்டத்தைச் சரியாக நடைமுறைப்படுத்தினாலே எமது மாவட்ட மீனவர்கள் தன்னிறைவோடு வாழ்வார்கள் - என்றார்.

யாழ்.மாவட்டப் பிரதிநிதி பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கையில்; அதிகாரிகள் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து தீர்மானங்களை மேற்கொள்ளாது மீனவர் பிரதிநிதிகளையும் அழைத்துக் கருத்துக்களை கேட்டறிய வேண்டும்.

தற்போது வடக்குப் பகுதியில் பெரும் பிரச்சினை இந்திய மீனவர்களின் எல்லை தாண்டல் விடயமே. இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் தீர்வு கிட்டும் என்று எதிர்பார்த்துள்ளோம்.

கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சி செய்த அரசுகள் முழுப் பணத்தையும் போருக்கே செலவு செய்தன. இதனால் எமக்கு எந்தவித மானியமும் கிட்டவில்லை.

காக்கைதீவில் மாநகர சபையினர் மனிதக் கழிவுகளைக் கொட்டுவதால் அங்குள்ள மீனவர்கள் பெரும் தாக்கத்துக்கு உள்ளாகுகின்றனர்.

இதனைத் தடுக்குமாறு பிரதேச செயலாளர் மற்றும் மாவட்டச் செயலாளர்களிடம் முறையிட்டால், இது நீதிமன்றத்தில் உள்ள விடயம் நாம் தலையிட முடியாது என்கின்றனர். அதேபோல் கடற்கரைகள் ஆக்கிரமிக்கப்பட்டுக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. இவற்றுக்கு உரிய தீர்வை வழங்கவேண்டும்- என்றார். மன்னார் மாவட்டப் பிரதிநிதி ஆலம் தெரிவிக்கையில்,

தென்னிலங்கை மீனவர்கள் கொட்டிலாக இருந்த வாடிகளைத் தற்போது கல்லால் கட்டுகின்றனர். இது ஓர் நில அபகரிப்போ என்ற ஐயம் ஏற்படுகின்றது. மன்னார் மாவட்டத்துக்கு என்று ஓர் இறங்குதுறை இன்றுவரை கிடையாது.

இங்கு ஓர் இறங்குதுறை உடன் அமைக்கப்பட வேண்டும். காப்புறுதித் திட்டம் ஆண்டுகள் கால அளவில் நடைமுறைப்படுத்தப் படுகின்றது இதனை ஆயுள் காப்புறுதியாக நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார். கிளிநொச்சி மாவட்டப் பிரதிநிதி பிரான்சிஸ் கருத்துத் தெரிவிக்கையில், கிளாலிக் கடற்பரப்பில் கரையை அண்மித்து மட்டுமல்லாது நடுக்கடலிலும் தடி மூலம் வலைவீசப் படுகின்றது.

இதேபோன்று இரணைதீவு, பாலைதீவை அண்டிய பிரதேசங்களில் இரும்புப் பைப்புகள் ஒட்டப்பட்டு அவற்றைக் கொண்டு வந்து கடலில் நட்டு யாழ்ப்பாண மீனவர்கள் தொழில் புரிகின்றனர். இவை தடை செய்யப்பட்ட முறைமை இவற்றை உடன் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது இதற்கான அனுமதியை எமக்கும் வழங்க வேண்டும் - என்றார். (த-ஐ-5-101-106)

NOTIFICATION
ST.JOHN'S COLLEGE JAFFNA
OLD BOYS' ASSOCIATION
100 th ANNUAL GENERAL MEETING

The 100 th Annual General Meeting of the Old Boys' Association will be held on Saturday 9th April 2016 at 9.30 a.m in the College Auditorium.

Members who wish to submit resolutions are kindly requested to do so in writing on or brfore 31st March 2016.

The Programme for the day would be published in due course.

Breakfast & Lunch Tickets are available at the college from 21 st March 2016 till 8th April 2016

A.T.Aravinthan
Secretary.

மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச திருமணம்

இடம் :- அச்சுவேலி இராசமாணிக்கம் மண்டபம்
காலம் :- 27.03.2016 ஞாயிற்றுக்கிழமை

காதலிக்கும் மற்றும் திருமணம் செய்ய நிச்சயித்திருக்கும் மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பிக்கலாம்.

தாலி திருமணத்துக்கான கூறை - வேட்டி. வாழ்வாதார உதவிகள், வீட்டுத்தளபாடம் என்பன அன்பளிப்பாக வழங்கப்படும்.

20.03.2016 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் கீழ்க் காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

வீடியோ கலாமினி
இராசமாணிக்கம் மண்டபம், அச்சுவேலி.
077 305 3080

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம்:- 12
ஆதன இலக்கம்:- 41 (புதிய இலக்கம்)
நவாலி வீதி,
கிராமசேவையாளர் பிரிவு :- J/135 நவாலி

வட்டாரம் 12, நவாலி வீதி, ஆதன இலக்கம் 41(புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று நவாலி இறை " ஒற்றிகொண்டானும் இலகடியும் " என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 குளி 15¾ கொண்ட) இவ்வாதனமானது நவாலி, தற்போது பரிஸ் நாட்டில் வசிக்கும் அருள்சோதிரத்தினம் வினோபாவும் நவாலியைச்சேர்ந்த அருள்சோதிரத்தினம் கைம்பெண் தேவராணி ஆகிய இருவரும் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி அபர்ணா ஜனார்த்தனன் அவர்களால் எழுதப்பட்ட 349 ஆம் இலக்க 2015.12.21 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நிலஅளவையாளர் திரு.அ.அருள்நேசன் அவர்களால் வரையப்பட்ட 2306 ஆம் இலக்க நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " ஒற்றிகொண்டானும் இலகடியும் " நிலப்பரப்பு 02 குளி 15¾ கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அருள்சோதிரத்தினம் வினோபா என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.



கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவப் பொங்கலுக்கான



நேர்த்திப் பொருள் வழங்கும் அடியவர்களுக்கான அறிவித்தல்

மேற்படி நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா 23.03.2016 புதன்கிழமை நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கான நேர்த்திப் பொருள் வழங்கும் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர், விசுவமடு, புன்னை நீராவி, பிரமந்தனாறு, உடையார்கட்டு, சுதந்திரபுரம் பகுதி அடியவர்களிடம் இன்று 17.03.2016 தொடக்கம் ஆலயத்தில் இருந்து நேர்த்திப் பொருள் சேகரிக்கும் தொண்டர்கள் உழவு இயந்திரங்களில் வருகை தரவுள்ளனர் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம். நேர்த்திப் பொருள்கள் கொடுத்து எல்லாம் வல்ல நாகதம்பிரான் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டக்ளஸ் மீதான வழக்கு: 24 ஆம் திகதி விசாரணை

கொழும்பு, மார்ச் 17
முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா மீதான கொலைக் குற்றச்சாட்டு வழக்கு விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
டக்ளஸ் தேவானந்தா மீதான கொலைக் குற்றச்சாட்டு வழக்கு சென்னை 4 ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.
இந்த வழக்கு கடந்த 5 ஆம் திகதி காணொலியூடாக விசாரிக்கப்பட்டது.
அப்போது, டக்ளஸ் தேவானந்தா இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தில் முன்னிலையாகி, காணொலி மூலம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
இந்த வழக்கு நீதிவான் எம். சாந்தி முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசு தரப்புச் சாட்சிகள் எவரும் மன்றில் முன்னிலையாகவில்லை.
அப்போது, டக்ளஸ் தேவானந்தா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஆர்.ராஜன், காணொலி மூலம் டக்ளஸ் தேவானந்தாவிடம் விசாரணை நடத்தவேண்டும் என்றால் சனிக்கிழமை தான் வசதியாக இருக்கும். எனவே, இந்த வழக்கு விசாரணையைச் சனிக்கிழமை நடத்த வேண்டும் என்று வாதிட்டார்.
அரசு தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி எம்.பிரபாவதி, இந்த வழக்கு 30 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. வழக்கை விரைவாக விசாரணை நடத்த வேண்டும். அரசு தரப்புச் சாட்சிகள் 40 பேரில் 2 பேர் இறந்து விட்டனர். 38 சாட்சிகளைத் தேடி பிடித்து முன்னிலைப்படுத்த தயாராகப் பொலிஸார் உள்ளனர் - என்றார்.
இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிவான் விசாரணையை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார். (த-ஜ-5)

**விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த பிரபல விளையாட்டு பொருள் விற்பனை நிலையம் ஒன்றினை கைவிட்டுள்ளதால் அதன் அனைத்து விளையாட்டு உபகரணங்களையும் மலிவான விலையில் விற்கவுள்ளனர். பார்வையிடும்
நேரம் : முற்பகல் 10.00 மணி - மாலை 4.00
2016.03.23 ஆம் திகதியும் 2016.03.27 ஆம் திகதியும்
இடம் : தொட்டிலடி, சங்கானை. (69996) (14,17,20)
077 489 7969/ 077 071 6838

**வேலையாள்கள் தேவை**

நெல்லியடியில் இயங்கும் ஹொட்டேல் ஒன்றுக்கு சமையலாளர், ரொட்டி மேக்கர், உணவு பரிமாறுபவர் உடன் தேவை. (68533)(12.17)
077 260 0678

# 2020 இல் புகை பிடிக்கத் தடை

கொழும்பு, மார்ச் 17
எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் புகைப்பிடித்தலை முற்று முழுதாகத் தடை செய்ய சுகாதார, சுதேச வைத்திய மற்றும் போசாக்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. சுகாதார அமைச்சின் பணிப்பாளர்நாயகம் மருத்துவர் பாலித மகிபால இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
கொழும்பு சுகாதார கல்விக் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இருதய நோய்கள், உயர் குருதி அழுத்தம், புற்று நோய் உள்ளிட்ட பல்வேறு தொற்றாத நோய்கள் பரவுவதற்குக் காரணமாகிய புகைப்பிடித்தலை முற்றாகத் தடை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.
புகைப்பிடித்தலை முற்று முழுதாகத் தடை செய்யும் யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.
தொற்றா நோய்கள் இலங்கையில் துரித கதியில் அதிகரித்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புகைபிடித்தலுக்குத் தடை விதிக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.
மேலும், பொலனறுவை உள்ளிட்ட அரச வைத்தியசாலைகள் சிலவற்றில் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவுகள் உருவாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை - புகைப்பிடித்தலுக்கு முற்று முழுதாகத் தடை விதிக்கும் திட்டம் பற்றிய விவரங்களை அவர் வெளியிடவில்லை.
நடைமுறைச் சாத்தியப்பாட்டுடன் இந்த புகைப்பிடித்தலுக்கான தடையை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது, அது வெற்றியளிக்கக் கூடிய சாத்தியம் உண்டா என்பது பற்றிய விளக்கத்தைப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் மகிபால தெளிவுபடுத்தவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (த-ஜ-5)

**உதவியாளர் தேவை**

கந்தரோடை, சுன்னாகத்திலே வதியும் வயோதிபத் தம்பதியினருடன் தங்கியிருந்து பணிபுரிய 35 வயதுக்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு : 077 754 2174

**காணி விற்பனைக்கு**

உசன், மிருசுவிலில் செபமாலை தாசர் ஆச்சிரமத்திற்கு அருகில் 5 ½ பரப்பு அளவுடைய ஒரு சதுரவடிவான இருபக்கமும் ஒழுங்கைகள் அமைந்த காணி ஒன்று விற்பனைக்குண்டு. (68981) (14,18,20)
071 139 8753/ 076 678 6314

**தவறவிடப்பட்டுள்ளது**

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி ஜசோதினி றதீஸ்கரன் என்பவரது வங்கிப் புத்தகங்கள் அவரது உறவினரான மாதி சண்முகம் என்பவரது தேசிய அடையாள அட்டை (476663423V) மேலும் முக்கிய ஆவணங்களுடன் கறுப்பு நிறப் பேர்ஸ் ஒன்று கடந்த புதன்கிழமை 09.03.2016 கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டு எடுத்தவர்கள் கலை ஒளி வீதி, சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு : 077 698 7826

# மணிவிழா அழைப்பு

## திரு.கந்தையா வாமதேவன்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)



இடம்: மட்டுவில் மத்தி, பொதுநோக்கு மண்டபம்
காலம்: இன்று (17.03.2016) வியாழக்கிழமை
நேரம்: பி.ப.2.00 மணி

தலைவர்: ச. உமாமகேஸ்வரன் அவர்கள் (ஆசிரியர் - கிளி/பரமங்கிராய் அ.த.க. பாடசாலை)
பிரதம விருந்தினர்: திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் அவர்கள் (பிரதேச செயலர் - தென்மராட்சி பிரதேச செயலகம்)
சிறப்பு விருந்தினர்: திரு. ந.சர்வேஸ்வரன் அவர்கள் (அதிபர் - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)
கௌரவ விருந்தினர்: திரு.பாலித்த மெனிக்கே அவர்கள் (தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி பொலிஸ் நிலையம் - சாவகச்சேரி)

வாழ்த்துரை:
திரு.க. துரைரத்தினம் அவர்கள் (ஓய்வுபெற்ற அதிபர்)
திரு.B.B.அன்ரன் அலோசியஸ் அவர்கள் (கிராம அலுவலர் - மட்டுவில் மத்தி)
திரு.சி.மதியழகன் அவர்கள் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம், பண்டாரவளை)
திரு.க.ரஜனிகாந்தன் அவர்கள் (சமுதாயம் சார் சீர்திருத்த உத்தியோகத்தர் நீதிமன்றம், சாவகச்சேரி)
திரு.க.அருந்தவபாலன் அவர்கள் (தலைவர் - இலங்கை தமிழரசுக்கட்சி, சாவகச்சேரி)
திரு.கே.சயந்தன் அவர்கள் (மாகாணசபை உறுப்பினர் - வட மாகாணம்)

*மட்டுவில் மத்தியில் இருபத்திரண்டு வருடகாலம் மக்களை நாடிச் சென்று மக்கள் குறை தீர்த்து மகத்தான பணிசெய்து மங்காத புகழ்பெற்ற மணிவிழா நாயகனே வாழ்க வாழ்க உங்கள் புகழ் பல்லாண்டு காலம் வாழ பணிந்து நிற்கின்றோம் பரமனை*

Congratulation

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*
மட்டுவில் வாழ் மக்கள் சார்பாக ம. மகேந்திரலிங்கம்

விளம்பர அனுசரணை: தவம்போட்டோ & கலர்லாப் 362, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பியகம மின்மாற்றி வெடிப்பே மின்சாரத் தடைக்குக் காரணம்

## ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, மார்ச் 17
பியகம மின் விநியோக நிலையத்தில் காணப்படும் 30 வருடங்கள் பழைமையான மின்மாற்றி வெடித்தமையினாலேயே, நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்சாரத் தடை தொடர்பில் மின்சக்தி மற்றும் சக்தி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்றுக் காலை கையளிக்கப்பட்டுள்ளது. அமைச்சின் செயலாளர் பேராசிரியர் சுரேன் பட்டகொடவினால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் கையெழுத்துடன், ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், பியகம மின் விநியோக நிலையத்தில் காணப்படும் மின்மாற்றி சுமார் 30 வருடங்கள் பழைமை வாய்ந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மின்மாற்றியை, முழுமையாகப் பழுதுபார்க்க வேண்டியுள்ளது. இது தொடர்பில், பழுதுபார்க்கும் நிறுவனத்துக்கு கடந்த 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மின்சார சபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த மின்மாற்றியை ஏன் முழுமையாகப் பழுது பார்க்கவில்லை என்பது பிரச்சினைக்குரிய விடயமாகவே உள்ளது. இவ்வாறு பழுதுபார்க்காமையே, அது வெடிப்புக்கு உள்ளாகக் காரணமாகியிருக்கலாம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-5)

## மின்சார அமைச்சரின் வெளிநாட்டுப் பயணம் ரத்து

கொழும்பு, மார்ச் 17
மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை ஜனாதிபதி மைத்திரிபால இடைநிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரம் அமைச்சர் தனிப்பட்ட ரீதியில் வெளிநாட்டு சுற்றுப் பயணமொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த நிலையிலேயே இவரது பயணம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள மின்சாரப் பிரச்சினையால் இதற்கு பொறுப்பான அமைச்சர் நாட்டை விட்டு வெளியில் செல்வது சிறந்த தொன்றல்ல என்று - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தனது வெளிநாட்டுப் பயணத்தை இடைநிறுத்தியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (த-ஜ-5)

## மின்சார நிலையக் கட்டமைப்புக்களில் முப்படையினரும் பாதுகாப்புப் பணி

கொழும்பு, மார்ச் 17
அனைத்து மின்சார நிலையக் கட்டமைப்புக்கள் மற்றும் உப மின்நிலையங்களிலும், முப்படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 6 மணி தொடக்கம், இராணுவம், கடற்படை, விமானப் படை என்பவை சகல மின்சார சபை நிலையங்களிலும் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரித்துள்ளார்.

அனைத்து மின்சாரசபை நிலையங்களிலும் பாதுகாப்புப் பணியை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டிருந்தார்.

பியகமவில் மின்மாற்றி ஒன்று வெடித்து, நாடு முழுவதிலும் மின்சாரத் தடை ஏற்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், ஏழரை மணிநேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ஜ-5)


### கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் பிரதித்திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றும்
திருமதி செல்வராணி நிக்கொலஸ்பிள்ளை அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் நாராயணபிள்ளை திருநாவுக்கரசு**
அவர்கள் 11.03.2016 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
மாவட்ட திட்டமிடல் செயலக உத்தியோகத்தர்கள்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

### கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் கடமையாற்றும்
**திரு.ஆ.சிவலட்சணம்**
அவர்களின் அன்புத் தாயார்.
**திருமதி இராசமணி ஆறுமுகம்**
அவர்கள் 10.03.2016 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
மாவட்ட திட்டமிடல் செயலக உத்தியோகத்தர்கள்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

### கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் பிரதேச செயலகத்தில் அபிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி பன்னீர்ச் செல்வம் உமயாள்
அவர்களின் பாசமிகு மாமியார்
**செல்லையா சரஸ்வதி**
அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு கோப்பாய்.

பிறப்பு 14.06.1936 இறப்பு 12.03.2016

### கண்ணீர் அஞ்சலி



புகையிரத வீதி கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டவரும் எமது ஆலய கொடியேற்ற உபயகாரரும், ஆலயத்தைச் சார்ந்த குடும்பத்தவருமாகிய
**திருமதி நாகேஸ்வரி ஆறுமுகம்**
அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபையினர் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல புதுக்கோயில் முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகள் பரிபாலன சபை.
(69530)(2.9.20)

### 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 06 . 1942
மறைவு 17 . 03 . 1997

**அமரர் செல்லையா சீவரத்தினம்**
திதி :நவமி
கண்மணி போல் காத்தவரே
எங்கள் அன்பான அப்பாவே
மண்ணில் இருக்கும் வரை
மறப்போமா உங்கள் நினைவை.
விளாத்தியடி லேன்,
உரும்பிராய் வடக்கு.
குடும்பத்தினர்.

### எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



நிஜமாக 29 . 09 . 1941
நிழலாக 15 . 03 . 2008

அமரர்
**ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம் (மணியம்)**
விநாயகர் ஸ்ரோர்ஸ் (முன்னாள் பங்குதாரர் - குகன் ஸ்ரோர்ஸ், குகன் எரிபொருள் நிலையம், மீனாட்சி அரிசி ஆலை)
என்றும் எங்கள் புன்னகை மாறாமல்
இருப்பதற்காய் தவமாய் காத்திருக்கும்
எங்கள் காவல் தெய்வமே!!!
நீங்கள் நிழலாய் போன பின்னே நிஜ வாழ்வின்
நிஜம் விளங்குகின்றது
இதய தெய்வமே!!!
நீங்கள் நிழல் ஆனாலும்
நீங்களே எங்கள் சாமி!!!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!
144/3, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
என்றும் அன்புடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.
(69974) (13.18.20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் சந்தைக்கு பிறந்தது விடிவு காலம்

## 80 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்ய முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 17

பாவனையாளரினதும், வியாபாரிகளினதும் வசதி கருதி மானிப்பாய் மத்திய சந்தை பல மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

முதற்கட்டமாக நெல்சிப் திட்டத்தின் கீழ் சுமார் 80 லட்சம் ரூபா செலவில் சகல வசதிகளுடன் கூடிய நவீன முறையில் மீன் சந்தை அமைக்கப்படவுள்ளது. இதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள ஏழு சந்தைகளில் மானிப்பாய் மத்திய சந்தை முன்னணி வகிப்பதுடன் பிரதேச சபைக்கு அதிக வருமானத்தையும் ஈட்டிக் கொடுக்கிறது.

சிறிய நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்தச் சந்தை வளாகத்தில் மரக்கறி விற்பனை நிலையம், கடலுணவு விற்பனை நிலையம், வர்த்தக நிலையங்கள் ஆகியவை அமைந்துள்ளன. இந்தச் சந்தைக்குத் தினசரி அயற் கிராமங்களிலிருந்து பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்வதற்கு வருகிறார்கள்.

> "வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள ஏழு சந்தைகளில் மானிப்பாய் மத்திய சந்தை முன்னணி வகிப்பதுடன் பிரதேச சபைக்கு அதிக வருமானத்தையும் ஈட்டிக் கொடுக்கிறது"

இந்த நிலையில் சந்தையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் மானிப்பாய் வர்த்தகர் சங்கம், பல வருடங்களுக்கு முன்னர் மேற்படி சந்தைக்குப் பின்புறமாகவுள்ள 4 பரப்புக் காணியை பல லட்சம் ரூபாவுக்கு வாங்கிப் பிரதேச சபைக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

இந்தச்சந்தையிலுள்ள மீன் விற்பனை நிலையம் வசதியீனங்கள் மத்தியில் சிறிய கட்டடத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு முரணாகப் பல வருடங்களாக இயங்கி வருகின்றது. குட்டை நாய்கள் படுத்துறங்கும் தரையில் வைத்துக் கடலுணவுகள் விற்பனை செய்யப்படுவது குறித்து விசனம் தெரிவித்துள்ள பாவனையாளர்கள், இது குறித்து பிரதேச சபையின் கவனத்துக்குத் தெரியப்படுத்திய போதும் நிதியின்மை காரணமாக சந்தையை அபிவிருத்தி செய்வதிலும் காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

தற்பொழுது குறித்த சந்தையை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாகச் சந்தைக்குப் பின் புறமாகவுள்ள வர்த்தக சங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் நெல்சிப் திட்டத்தின் கீழ் சுமார் 80 லட்சம் ரூபா செலவில் சகல வசதிகளுடன் கூடிய நவீன மீன் சந்தை அமைக்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேசசபை மேற்கொண்டுள்ளது. சந்தைக்கான கட்டுமானப் பணிகள் இந்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் கட்டுமானப் பணிகளை கண்காணிப்பதற்காக 10 பேர் கொண்ட குழுவும் செயலாளரால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (த-ஐ-115)

## பாசையூர் இறங்குதுறையை அமைச்சர் நேரில் பார்வை



யாழ்ப்பாணம், மார்ச் 17

பாசையூர் மீன்பிடி இறங்குதுறையின் புனர்நிர்மாணப் பணி தொடர்பில் வடக்கு மாகாண மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் கடந்த வெள்ளிக்கிழமை இறங்கு துறையை நேரில் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாசையூர் மீன்பிடி இறங்குதுறையைப் புனரமைக்கும் செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பாசையூர் மீனவர்களுக்கான சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தினூடாக, மீன்பிடிப் படகு நங்கூரமிடும் தளத்தின் மீள் கட்டுமானப் பணிகள் ஆஸ்திரேலியன் ஏ.ஐ.டி நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் புனரமைப்புப் பணிகளின் மேலதிக தேவைகள் தொடர்பில் ஆராய்வதற்காகக் கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் இ.ஆனோல்ட் ஆகியோர் குறித்த பகுதிக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அங்குள்ள சில புனர்நிர்மாணப் பணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. மேலும் அமைச்சரது இந்தப் பயணத்தில் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகியோரும் இணைந்திருந்தனர். (த-ஐ-ரி5)

## யாழ். விவசாய பீடத்தின் வெள்ளிவிழா சனியன்று

யாழ்ப்பாணம்,மார்ச் 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வு கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் முன்கற்றோர் அவையும், விவசாய பீட மாணவர் ஒன்றியமும் இணைந்து இந்த விழாவை ஒழுங்கு செய்துள்ளன.

வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் சிறப்பு அம்சமாக விவசாய பீடத்தின் கடந்த கால நினைவலைகள், அனுபவங்கள், சிறப்புச் செயற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய விழா மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

விழாவில் கலந்து கொள்ளுமாறு யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் அனைத்து உறவுகளுக்கும் விழாக் குழுவினர் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளனர். (த-ஐ)

## விளையாட்டுக் கழகங்களுக்கு பொருள்கள் சில கையளிப்பு

சாவகச்சேரி,மார்ச் 17

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு வழங்கவென ஒரு தொகுதி விளையாட்டுப் பொருள்கள் மாகாண விளையாட்டுத் துறை அமைச்சினால் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 2014, 2015 ஆகிய வருடங்களில் பிரதேச செயலகம் மற்றும் பொது அமைப்புக்களால் விளையாட்டுப் பொருள்கள் பெற்றுக் கொள்ளாத விளையாட்டுக் கழகங்களுக்கு இந்த விளையாட்டுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதென பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் தெரிவித்தார். (த-ஐ-9)

## மன அழுத்தத்துக்கு மத்தியிலேயே கல்வி கற்கின்றார்கள் மாணவர்கள்

### அச்சுவேலிப் பங்குத் தந்தை தெரிவிப்பு

அச்சுவேலி, மார்ச் 17

"கற்றல் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மகிழ்ச்சியான சூழல் தேவை. எமது பிரதேசத்தில் மகிழ்ச்சியான கலாசார சூழல் இல்லை. மாணவர்கள் பல்வேறு மன அழுத்தங்களுக்கு மத்தியிலேயே கல்வியைத் தொடர்கின்றனர். மன அழுத்துங்கள் இல்லாத நிலையை உருவாக்கி இயல்பான கற்றல் நடைபெறுவதற்கு வசதிகள் செய்யப்பட வேண்டும்." -இவ்வாறு அச்சுவேலி பங்குத் தந்தை வணபிதா சீ.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், இந்தக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றும் போது காலமான அருட்சகோதரி மரிய றொசாரியோவின் மணிவிழாவும், கல்லூரியின் புதிய அதிபர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்டு வணபிதா சீ.ஜெயக்குமார் அடிகளார் தொடர்ந்து உரையாற்றும்போது,

மாணவர்கள், ஆசிரியர்கள் தேடல் உள்ளவர்களாக இருக்க வேண்டும். வாசித்தோம், யோசித்தோம் என்று இருக்கவேண்டும். அந்த நிலை இன்று குறைவடைந்து செல்கின்றது.

எமது நேரத்தில் பெரும்பகுதி தொலைபேசி உரையாடலிலும், தொலைக்காட்சிப் பெட்டியுடனும் செலவாகின்றது. இந்த நிலை எமது வாழ்க்கையில் இயல்பான நிலையை குழப்புவதுடன் வாசிப்பதையும் குறைவடையச் செய்கின்றது.

ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழலை குழப்பமடையச் செய்துள்ளது. அலைபேசிப் பாவனை மூலம் தமது நேரத்தில் பெரும் பகுதியைச் செலவு செய்வதால் தேடலை விடுத்து அலைபேசியைப் பயன்படுத்துவதில் நேரத்தைச் செலவு செய்கின்றனர்.

மகிழ்ச்சியான சூழ்நிலை உள்ள நாடுகளில் பின்லாந்து முன்னணியில் உள்ளது. நாம் பயன்படுத்தும் அலைபேசி "நொக்கியா" பெருமளவில் பின்லாந்து நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது.

எல்லோரது வீடுகளிலும் நூல் நிலையம் இருக்கவேண்டியது மிக மிக அவசியம். எங்களுடைய சமூகச் சூழலில் எத்தனை பேரின் வீடுகளில் நூல் நிலையம் இருக்கின்றது என்பதை மதிப்பீடு செய்யின் பெரும்பாலான வீடுகளில் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். ஒவ்வொரு வீடுகளிலும் தமது வசதிக்கு ஏற்ப நூல்களைச் சேகரித்து வைத்து நாளாந்தம் வாசிக்கின்ற பழக்கத்தை ஏற்படுத்த முன்வர வேண்டும் எனக் கூறினார்.

மறைந்த அதிபரை நினைவு கூரும் வகையிலும் பாடசாலையின் 70 ஆவது ஆண்டு வளர்ச்சியை எடுத்துக்காட்டும் வகையிலும் "திரேசியன் பிளவர் 3" மலர் வெளியிடப்பட்டது. நூலை யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராசா வெளியிட்டு வைத்தார். நூலின் மதிப்பீட்டு உரையைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் நிகழ்த்தினார்.

கோப்பாய்க் கோட்ட கல்வி அதிகாரி ஏ.எஸ்.சற்குணராசா, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி இ.இராசநாயகம் உட்படப் பலர் உரையாற்றினர். (த-ஐ-11)

## மணிவிழா

சாவகச்சேரி,மார்ச் 17

மட்டுவில் பிரதேசத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற கந்தையா வாமதேவனுக்கு மட்டுவில் வாழ் மக்கள் நடத்தும் மணி விழா நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் மத்தி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் ச.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரனும், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி பாலித்த மெனிக்கே ஆகியோரும் கலந்துகொள்வர். (த-ஐ-9)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் 2016 - 2017 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அழகரத்தினம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையின் 180 ஆவது வருட நிறைவைக் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படவுள்ளதால், கூட்டத்தில் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (த-ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளம்பிலில் 30 ஏக்கர் காணியை அபகரிக்கப் படையினர் முயற்சி

## அப்பகுதிப் பொது அமைப்புக்கள் கடும் விசனம்

முல்லைத்தீவு, மார்ச் 17
முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் எந்தவிதமான அறிவித்தல்களோ, அனுமதியோ இன்றி 30 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட மக்களுடைய பயிர்ச் செய்கைக் காணிகளை அபகரிக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

படையினரின் இந்தச் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தி மக்களின் காணிகளை மக்களுக்கே வழங்குமாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த பொது அமைப் புக்கள் கோரியுள்ளன.

இதேவேளை, காணி அபகரிப்புக் குறித்த விவரங்களை அறிந்த பின்னரே சரியாகக் கூற முடியும் என்கிறார் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர்.

அளம்பில் 6 ஆம் கட்டையிலிருந்து மேற்குப் பக்கமாக முறிப்பு கிராமம் வரை செல்லும் கெனடியன் வீதியில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள செம் பூமி தோட்டத்துக்கு அருகே உள்ள சுமார் 30 ஏக்கர் காணியை இந்த மாத ஆரம்பத்திலிருந்து படையினர் கனரக வாகனங்கள் மூலம் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் காணிகள் 1980 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரசால் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகள். போர் ஆரம்பமான கால கட்டத்தில் காணிகளுக்கு அருகே பெரும் காடு அமைந்திருந்த காரணத்தால் பாதுகாப்பற்ற சூழ் நிலையைக் கருத்தில் கொண்டு மக்கள் அங்கி ருந்து வெளியேறியிருந்தனர்.

> அளம்பில் 6 ஆம் கட்டையிலிருந்து மேற்குப் பக்கமாக முறிப்பு கிராமம் வரை செல்லும் கெனடியன் வீதியில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள செம்பூமி தோட்டத்துக்கு அருகே உள்ள சுமார் 30 ஏக்கர் காணியை இந்த மாத ஆரம்பத்திலிருந்து படையினர் கனரக வாகனங்கள் மூலம் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மீள் குடியமார்வின் பின்னர் மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியமை காரணமாகக் காணிகளைத் துப்புரவு செய்யத் தவறிவிட்டனர். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட படையினர் காணி அமைச்சினதோ, அல்லது சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பினதோ அனுமதி எதுவுமின்றி குறித்த காணிகளை அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் காணி அபகரிப்பு தடுத்து நிறுத்தப்பட்டு மீளவும் மக்களுக்குக் காணிகளை வழங்குமாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் க. சிவநேசனும் குறித்த காணி அபகரிப்பை உறுதிப் படுத்தியதோடு, இது தொடர்பாக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவதாகக் கூறினார்.

காணி அபகரிப்புத் தொடர்பாகக் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் குணபாலனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இதுவரை தனக்கு அது குறித்து எந்த அறி வித்தல்களும் வழங்கப்படவில்லை எனவும், படையினர் காணிகளைத் துப்புரவு செய்கின்றார்கள் என்பதை எவரும் தன்னிடம் இதுவரை தெரியப்படுத்தவில்லை எனவும், தான் இது தொடர்பாக விவரங்களை அறிந்த பின்னர் உண்மைத்தன்மை பற்றிக் கூறுவதாகவும் தெரிவித்தார். (த-ஐ-21-102)

# குளங்கள், வீதிகளை புனரமைக்க ரூபா 4,414 மில்லியன் தேவை

முல்லைத்தீவு,மார்ச் 17
முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் விவசாய வீதிகளைப் புனரமைப்பதற்கு 4,414 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி தேவையாக உள்ளது என முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மக்கள்பெருமளவானவர்கள் விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்டிருப்பதால் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாவட்டத்தில் உள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் விவசாய வீதிகள் என்பவை அவசியமாக புனரமைக்கப்பட வேண்டியுள்ளன.

எனவே முல்லை மாவட்டத்தில் 81 சிறிய நீர்ப்பாசனக் குளங்களை புனரமைப்புச் செய்வதற்கு 414 மில்லியன் ரூபா உடனடியாக தேவையாக உள்ளது.

கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலி ஓயா, புதுக்குடியிருப்பு ஆகிய ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைப்புச் செய்வதற்கே இந்த 414 மில்லியன் தேவைப்படுகிறது எனக் கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான விவசாய வீதிகளைப் புனரமைக்க 4000 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி தேவையாக உள்ளது எனவும் குறித்த திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன்கட்டு, உடையார்கட்டு, வவுனிக்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகள் மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. இந்த வீதிகள் பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்துள்ளன.

எனவே இந்த வீதிகளைப் புனரமைக்க 4000 மில்லியன் ரூபா தேவை எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-ஐ-21-500)

# தனது கடற்பரப்பைத் தருமாறு கடற்றொழிலாளி போராட்டம்

கிளிநொச்சி,மார்ச் 17
பரம்பரை பரம்பரையாகக் கடற்தொழிலில் ஈடுபட்ட கடற்பரப்பை (பாடு) அட்டை வளர்ப்புக்கு எனக் கூறி தனியார் நிறுவனத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். அதனை விடுவிக்குமாறு கோரியபோது என்னைத் தாக்கினர். இதுகுறித்து அதிகாரிகளும் கண்டு கொள்ளவில்லை.

இவ்வாறு தெரிவித்து கடற்றொழிலாளி ஒருவர் தனது குடும்பத்துடன் நேற்று முன்தினம் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் பூநகரி கிரவன் குடா கடற்கரைக்கு அருகில் குறித்த கடற்றொழிலாளி தனது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட கிராஞ்சிக் கடற்பரப்பில் பரம்பரை பரம்பரையாகத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, 2014 ஆம் ஆண்டு கடல் அட்டை வளர்க்கப் போகின்றோம் என்று தெரிவித்து தனியார் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் எனது கடற்பரப்பில் (பாடு) கூடு அடைத்து அட்டையை விட்டு வளர்த்தார்கள்.

அதனால் தொழில் செய்வதற்கு வழி எதுவும் இன்றி பெரும் கஷ்டங்களை எதிர் கொண்டேன். பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு வசதியின்றிச் சிரமப்பட்டேன். எனது கடற்பரப்பை விடுவிக்குமாறு சம்பந்தப் பட்டவர்களிடம் கேட்டபோது என்னைத் தாக்கினார்கள். இதற்கு அதிகாரிகளும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. - என்று அந்தக் கடற்றொழிலாளி தெரிவித்தார்.

வேறு வழியின்றி இந்த முடிவை எடுத்துள்ளேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, 2014ஆம் ஆண்டுகுறித்த தொழிலாளியினுடைய சம்மதத்துடனேயே அந்த நிறுவனத்தினர் குறித்த பகுதியில் அட்டை வளர்க்க ஆரம்பித்தார்கள். அன்றில் இருந்து இன்று வரை அட்டை வளர்ப்பைத் தடை செய்யுமாறு கோரியோ, அவரது கடற்பிரதேசத்தை மீளக் கையளிக்குமாறு கோரியோ எந்த விதமான அறிவித்தல்களையும் எமக்கு அவர் தெரிவிக்கவில்லை- என்று தெரிவித்தார். கடற்றொழில் தான் செய்ய வேண்டும் என்றால், ஏராளமான பகுதிகள் உள்ளன. அங்கே சென்று அவர் தொழிலை மேற்கொள்ளலாம் அதற்கு எந்தத் தடையும் இல்லை. இவ்வாறு திடீரென குறித்த நபர் உணவு தவிர்ப்பில் ஈடுபடுவதற்கான காரணம் புரியவில்லை. திடீரென அட்டை வளர்க்கும் இடத்தைத் தரச்சொல்வது நியாயமானது அல்ல. அது பற்றிச் சிந்திக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.
(த-ற-ஐ-21-ரி3)

## புதுக்குடியிருப்பில் இன்று மகளிர் தினம்

முல்லைத்தீவு,மார்ச் 17
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 'மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனை அற்ற நிலையான எதிர்காலத்துக்கு வலுவான பெண்கள்' என்னும் தொனிப்பொருளிலான மகளிர் தின நிகழ்வுகள் இன்று முற்பகல் 10 மணிக்குப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் மதுப் பழக்கத்துக்கு உள்ளான கணவர்களுடன் வாழும் பெண்கள், தனித்து வாழும் பெண்கள், பல்வேறு பிரச்சினைகளின் மத்தியில் வாழத் துடிக்கும் பெண்கள் பற்றிய கதைகளை கூறும் சமூக நாடகங்களான 'மதுவும் பெண்களும்;', 'விடியுமா சமூகம்' ஆகிய நாடகங்களும் இடம் பெறவுள்ளன. நிகழ்வில் விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கணேசமூர்த்தி ஜெயபவானி, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி துயாயினி, தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர் நடராசா சுகிர்தா ஆகியோர் கலந்து கொள்வர். (த-ஐ-21)

# மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாத நிலைமை

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் பின் சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

மன்னார்,மார்ச் 17
மக்களின் பிரச்சினைகள் குறித்து மக்கள் பிரதிநிதிகளினால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்படுகின்ற பல்வேறு கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியாத ஒரு துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டுள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரி வித்தார். கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், அது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தின் வீதிகள், உட்கட்டமைப்பு, மீள் குடியமர்வு, மின்சாரம், போக்குவரத்து உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி தேவைப்படுகின்றது. ஆகவே இதனைப் பூர்த்தி செய்து அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு மத்திய அரசிடம் இருந்து போதியளவான நிதி இந்த மாவட்டத்தின் அபிவிருத்திக்கு கிடைக்கவில்லை என்பது ஒரு விடயம்.

மேலும் இந்த மாவட்டத்தில் சில நிர்வாக ரீதியான சிக்கல்கள் காணப்படுகின்றன. மாவட்டத்தின் பாதைகள் புனரமைப்பதற்காக அதிகளவான கிரவல் மண் தேவைப்படுகின்றது. மணல் மண் தேவைப்படுகின்றது. கிராம வீதிகள் புனரமைப்பதற்குக் கிரவல் மண் எடுப்பதற்காகக் கடந்த மாதம் இடம்பெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டு அதற்கான நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் எந்தவித நடவடிக்கைகளும் இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு மக்களின் பிரச்சினைகள் குறித்து மக்கள் பிரதிநிதிகளினால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்படுகின்ற பல்வேறு கோரிக்கைகளையும் நிறைவேற்றமுடியாத ஒரு துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டுள்ளது -என்றார். (த-ஐ-21-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் தொடர்பில் சிலரிடம் மேலதிக விசாரணைகள்

சாவகச்சேரி,மார்ச் 17

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பிரதிநிதிகளால் நடத்தப்பட்ட விசாரணைகளில் கலந்து கொண்ட சிலரிடம், மேலதிக விசாரணைகள் ஆணைக்குழுவின் ஆய்வு அலுவலர்களால் பிரதேச செயுலகத்தில் கடந்த இரு தினங்களாக நடத்தப்பட்டன.

> கடந்த பெப்ரவரி மாதம் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளின்போது தென்மராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்டோர் சாட்சியமளித்திருந்தனர்.

விசாரணைகளின்போது தமது பிள்ளை அல்லது உறவுகள் காணாமற்போனமை தொடர்பாக அவர்களைப் பிடித்துச் சென்றவர்கள் மற்றும் வாகனங்களில் ஏற்றிச் சென்றதை நேரில் கண்டமை மற்றும் படையினரிடம் தமது உறவுகளைக் கையளித்தமை தொடர்பான சாட்சியங்களை வழங்கியோரிடம் அது பற்றிய மேலதிகத் தகவல்கள் பெறவும், பொறுப்புக் கூறல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் நான்கு பேர் கொண்ட ஆய்வு அலுவலர்கள் நேரடியாக வாக்கு மூலம் பெற்றனர்.

கடந்த பெப்ரவரி மாதம் பிரதேச செயலகத்தில் நடை பெற்ற காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளின் போது தென்மராட்சி மற் றும் வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்டோர் சாட்சியமளித்திருந்தனர்.

சாட்சியத்தைப் பதிவு செய்தவர்களால் வழங்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் அவற்றை உறுதிப்படுத்தும் வகையில் ஆய்வு அலுவலர்களால் மீண்டும் வாக்குமூலம் பெறப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பான அறிவிப்புக்கள் மிக இரகசியமாக மேற்கொள்ளப்பட்டுச் சுதந்திரமான முறையில் வாக்குமூலம் தமிழ் ஆய்வு அலுவலர்களால் பதிவு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. (த-ஐ-9)

# பனிக்கன்குளம் வீட்டுத் திட்டத்தில் குடியமர்வதற்கு ஒருமாத காலக்கெடு

## இல்லையேல் அவை அரசுடமையாக்கப்படும்

முல்லைத்தீவு, மார்ச் 17

முல்லைத்தீவு பனிக்கன் குளத்தில் உள்ள அரச வீட்டுத்திட் டத்தில் பயனாளிகள் ஒரு மாதத்துக்குள் காணிகளைத் துப்புரவு செய்து குடியமராவிட்டால் குறித்த காணிகள் அரச உடமையாக்கப்படும் என மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பனிக்கன்குளம் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்திலேயே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உத்தியோகத்தர்களாகிய உங்களுக்குச் சமூகப் பொறுப்பு பொது மக்களை விட அதிகம் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

உத்தியோகத்தர் என்பது மாவட்ட அரச அதிபரும், பிரதேச செயலாளரும் மாத்திரமல்ல நீங்களும் தான். உங்களுக்கு வழங்கப்பட்ட இடத்தில் சமூகச் சீர்கேட்டுச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

அவ்வாறான சம்பவங்களுக்கு நீங்கள் தான் பொறுப்பாளிகள் என்பதோடு, அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு நீங்கள் தூண்டுகோலாக அமைகிறீர்கள்.

பெறுமதியான ஓர் இடத்தில் காணிகளுடன் வீடுகள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அரச உத்தியோகத்தர்கள் அந்த இடத்தில் இருப்பீர்கள் என்ற உறுதிப்பாட்டுடனேயே காணிகள் வழங்கப்பட்டன.

எனவே அந்த வீடுகளில் நீங்கள் இருக்கவேண்டும். அல்லது அந்த வீடுகளை நல்ல முறையில் வைத்திருக்கவேண்டும். முடியாவிட்டால் வீடு தேவையில்லை எனில் வீட்டைப் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை காணி இல்லாததால், வீடு இல்லாத எத்தனையோ பேர் இருக்கின்றனர். அவர்களுக்கு இந்தக் காணிகளை வழங்க முடியும்.

இவ்வாறிருக்க அதிகாரிகளான நீங்கள் வேறு இடங்களில் காணிகளை வைத்துக்கொண்டு வீட்டுத்திட்டத்தையும்பெற்றுக் கொண்டிருப்பதாக நான் அறிகிறேன் இன்னும் ஒருமாத காலத்துக்குள் உங்கள் காணிகளை துப்புரவு செய்து குடியிருக்காத காணிகள் அரச உடமையாக்கப்படும் எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (த-ஐ-21)

### அலுமாரிக்குள் கருநாகம்; அலுவலர்கள் சிதறி ஓட்டம்

சாவகச்சேரி,மார்ச் 17

தென்மராட்சி கல்வி வலய அலுவலக அலுமாரிக்குள் கருநாகம் புகுந்ததால் அங்கு கடமையிலிருந்த உத்தியோகத்தர்கள் சிதறி ஓடினர். இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றது.

அலுவலகத்தில் புதிதாக வைக்கப்பட்டிருந்த அலுமாரியில் கோவையொன்றை எடுக்கச் சென்ற பெண் உத்தியோகத்தர், அதற்குள் பாம்பு நெளிவதைக் கண்டு கத்தியவாறு ஓடவே ஏனைய பெண்களும் அலுவலகத்துக்கு வெளியே ஓடினர். அங்கு நின்ற ஆண் உத்தியோகத்தர்கள் பாம்பை வெளியே துரத்த முயற்சிகள் எடுத்தபோதிலும் அது வெளியே வராமையால் அலுமாரியின் பின்பக்கப் பலகை அகற்றப்பட்டுப் பாம்பு வெளியே துரத்தப்பட்டது. கடந்த வாரம் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தின் வெளியே வெள்ளை நாகம் காணப்பட்டு துரத்தபட்டமை தெரிந்ததே.

தற்போது நிலவும் வெப்ப நிலை காரணமாகப் பற்றைகளுக்குள் குடிகொண்டிருந்த பாம்புகள் குடியிருப்புக்களுக்குள் நிழல் தேடி உட்புகுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-ஐ-9)

### அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணம் ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்துப் பெற்றோரும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரிறொசாந்தி அறிவித்துள்ளார். (த-ஐ-ரி4)

# செயற்பட்டு மகிழ்வோம் போட்டி முடிவு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 17

வலிகாமம் கல்வி வலயத்தின் உடுவில் கோட்ட மட்ட "செயற்பட்டு மகிழ்வோம்" எனும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி முடிவுகள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.சண்முககுலகுமரனால் அறிவிக்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில்கடந்த10ஆம்திகதிமூன்றுபிரிவுகளாக நடைபெற்றிருந்த போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தரம் 3 மாணவர்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தைச் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை ஈவினை அ.த.க.பாடசாலையும், மூன்றாம் இடத்தை ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயமும், இணுவில் மத்திய கல்லூரியும் பெற்றுள்ளன.

தரம் 4 மாணவர்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தைச் புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயமும் பெற்றுள்ளன.

தரம் 5 மாணவர்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தைச் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை சுன்னாகம் ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையும், மூன்றாம் இடத்தை புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயமும் பெற்றுள்ளன.(த-ஐ)




| சாதாரண சேமிப்புகள் (ரூ.) | நிலையான வைப்புகள் (ரூ.) | பரிசுகள் |
|---|---|---|
| 10,000 - 24,999 | —— | சுவர்க் கடிகாரம் |
| 25,000 - 49,999 | 100,000 - 249,999 | பிரயாணப் பை |
| 50,000 - 99,999 | 250,000 - 499,999 | அயர்ன் பொக்ஸ் |
| 100,000 - 249,999 | 500,000 - 999,999 | கேஸ் குக்கர் |
| 250,000 - 499,999 | 1,000,000 - 1,999,999 | மிக்சர் கிரைண்டர் |
| 500,000 - 999,999 | 2,000,000 - 4,999,999 | மைக்ரோவேவ் |
| 1,000,000 க்கு மேல் | 5,000,000 க்கு மேல் | 32" LED TV |
| சிறுவர் சேமிப்பு கணக்குகள் | ரூ. 5,000 க்கு மேல் | கலர் பெட்டி |

யூனியன் வங்கியுடன் சேமித்து பெறுமதியான பரிசுகளைப் பெற்று புத்தாண்டை மகிழ்ச்சியாக கொண்டாடுங்கள்

- பெப்ரவரி 15 முதல் உங்கள் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
- பரிசுகள் அங்கீகரிக்கப்பட்ட முகவரால் வழங்கப்படுவதுடன் ஒரு வருட உத்தரவாதமும் வழங்கப்படும்.
- 2016 ஏப்ரல் 15 வரை மட்டுமே.
- இம் மட்டுப்படுத்தப்பட்ட சலுகை இருப்பு தீரும் வரை மட்டுமே.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

0115 800 800
UNION BANK
பிரதான காரியாலயம் : 64, காலி வீதி, கொழும்பு 03 | www.unionb.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசுக்கு ஆதரவான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆர்ப்பாட்டம் நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரதமர் ரணிலும் பங்கேற்றார். (கு)

# போர்ட்சிற்றி நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க சீனாவுக்கு அழைப்பு

## அமைச்சரவை அனுமதி வழங்கியமையை அடுத்து

கொழும்பு, மார்ச் 17

கொழும்பு, காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்பட்டு பின்னர் இடைநிறுத்தி வைக்கப்பட்ட துறைமுக நகர் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க சீன முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசு உத்தியோக பூர்வ அனுமதியை வழங்கியுள்ளது.

மகிந்த அரசின் காலத்தில் சீனாவினால், கொழும்பு, காலி முகத்திடலை நிரவி, துறைமுக நகர் நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர், துறைமுக நகர் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இடைக் காலத் தடை விதிக்கப்பட்டிருந்தது. சுற்றுச்சூழல் தொடர்பான அறிக்கை முரண்பாடு காரணமாக, இந்தத் திட்டம் கடந்த ஒரு வருட காலமாக முன்னெடுக்கப்படாமல் இருந்து வந்தது. இந்த நிலையில் இந்தத் திட்டத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கு கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், துறைமுகக் கப்பல்துறை அமைச்சு, இந்தத் திட்டத்தை மீளவும் ஆரம்பிக்குமாறு சீன முதலீட்டாளர்களுக்கு உத்தியோக பூர்வ அழைப்பு அனுப்பியுள்ளது.

துறைமுக நகர் நிர்மாணம் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நிர்மாணத்தின் மூலம் 80 ஆயிரம் பேருக்குத் தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-ற-ஜ-5)

31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
02.02.1948



மறைவு
16.02.2016

கடந்த 16.02.2016 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர் தனலட்சுமி புஸ்பராசா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.03.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சித்தங்கேணி வீதி,
பண்டத்தரிப்பு.

(66973) (13.17)

குடும்பத்தினர்.
தொ.பே. 076 6879874

# கபில கொலை; நடந்தது என்ன?

கொழும்பு, மார்ச் 17

மாதாந்தம் கப்பம் கோரி வந்தமையினாலேயே 'நேவி கபிலவை' கொலை செய்யத் திட்டம் தீட்டப்பட்டது. இதற்காகச் சம்பவ தினத்தன்று மூன்று உயர்ரக மதுபானத்துடன் உணவையும் தயார் செய்து, மதுவில் மாத்திரைகளைக் கலந்து 'நேவி கபிலவின்' குழுவினருக்கு அருந்தக் கொடுத்தோம். அதன் பின்னர் ஒவ்வொருவராக சிறுநீர் கழிக்கவரும்போது இரும்புக் கம்பியால் தலையில் தாக்கிக் கொலை செய்தோம். இவ்வாறு தங்கொட்டுவச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய் யப்பட்டுள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் பொலிஸாருக்கு வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

### கருகிய சடலங்கள்

நீர்கொழும்பு தங்கொட்டுவ பிரதேசத்தில் எரிந்த வாகனம் ஒன்றிலிருந்து 5 பேர்களது உடல்கள் கருகிய நிலையில் மீட்கப்பட்டிருந்தன. மீட்கப்பட்ட 5 சடலங்களில் 'நேவி கபில' எனப்படும் கபில செனரத் பண்டாரவின் சடலம் அடையாளம் காணப்பட்டது. கபிலவின் மனைவியும், அவரது உறவுக்கார இளைஞர் ஒருவரும் குறித்த சடலத்தை நீர் கொழும்பு வைத்தியசாலையில் வைத்து அடையாளம் காட்டியுள்ளனர். கபிலவின் வலது காலில் உள்ள உபாதை தொடர்பில் செய்யப்பட்ட சத்திர சிகிச்சையின்போது வைக்கப்பட்ட தகடு மற்றும் அவரது கழுத்தில் இருந்த வெள்ளிச் சங்கிலி ஆகியவற்றைக் கொண்டே சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தங்கொட்டுவ ஐவர் படுகொலை தொடர்பில் பிரபல வர்த்தகர் ஒருவர் உள்ளிட்ட ஐந்துபேர் கைதாகியுள்ள நிலையில், கொலையுண்டவர்கள் தொடர்பிலான உடற்கூற்றுப் பரிசோதனைகள் நீர்கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் இடம்பெற்றன.

### டி.என்.ஏ. சோதனை

கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ள ஐவரின் சடலங்களையும் ஸ்கான் பரிசோதனை ஒன்றுக்கு உட்படுத்தி அடையாளம் காண்பது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. கருகியுள்ள உடலங்களில் இருந்து டி.என்.ஏ. மூலக்கூறுகளைப் பெற்று கொலையுண்டனர் என்று கருதப்படும் நபர்களின் உறவினர்களின் டி.என்.ஏ. உடன் ஒப்பீடு செய்து அது தொடர்பில் உறுதியான முடிவுக்கு வருவது குறித் தும் பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர். கடந்த 11 ஆம் திகதி திங்களன்று எரிந்த வாகனத்தில் இருந்து ஐந்து சடலங்கள் மீட்கப்பட்டன. வாகனத்தின் இலக்கத்தை மையப்படுத்திய விசாரணைகளில் 'நேவி கபில' என்பவரின் கட்டுப்பாட்டிலேயே குறித்த வாகனம் இறுதியாக இருந்தமை உறுதியான நிலையிலும், கபிலவின் மனைவியின் முறைப்பாட்டுக்கு அமைவாகவும் விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டன.

### சிக்கிய வர்த்தகர்

நேவி கபிலவின் தொலைபேசி அழைப்புப் பட்டியலைப் பொலிஸார் சோதனைக்கு உட்படுத்தினர். இந்தக் கொலை இடம் பெற்றதாக நம்பப்படும் இரவு, இறுதியாக நேவி கபிலவுடன் தொடர்பில் இருந்தோர் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவதானம் செலுத்தினர். இதன்போது தங்கொட்டுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருடன் இறுதியாக நேவி கபில தொடர்பு கொண்டுள்ளமையும், அந்தத் தொலைபேசி உரையாடலின்போது அந்த வர்த்தகர் தங்கொட்டுவ பகுதியிலேயே இருந்துள்ளமையும் உறுதியானது.

குறித்த வர்த்தகரைப் பொலிஸார் கைது செய்யத் தயாரான வேளையில், அவர் பன்னல பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். அதையடுத்து அவரைப் பொறுப்பேற்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினர். கொலையின்போது உதவிய சமிந்த என்ற சந்தேக நபர் உள்ளிட்ட நால்வரையும் கைது செய்தனர்.

### கப்பம் கோரினார்

சம்பவ தினம் இரவு (10 ஆம் திகதி) முதலில் நேவி கபிலவே குறித்த வர்த்தகருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்துள்ளார். இதன்போது இரவு மதுபான விருந்தொன்றை ஏற்பாடு செய்யுமாறு அவர் கூறியுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேக நபரான வர்த்தகர் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கியுள்ள ஒப்புதல் வாக்குமூலத்தின்படி, நேவி கபில மாதாந்தம் 30 முதல் 40 ஆயிரம் ரூபாவை அவரிடம் கப்பமாகப் பெற்று வந்துள்ளார் என்று தெரிய வந்துள்ளது. இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாமலேயே கொலைத் திட்டத்தைத் தீட்டியதாகச் சந்தேக நபரான வர்த்தகர் தெரிவித்துள்ளார். சம்பவ தினத்துக்கு முன்னைய தினமும் கபில 70 ஆயிரம் ரூபா கப்பம் கோரினார் என்றும், அதனை எடுத்துச் செல்லவரும்போதே மது விருந்துக்கு ஏற்பாடு செய்யுமாறு தொலைபேசியில் கூறினார் என்றும், அதன் பின்னரேயே தனது நண்பனான சமிந்தவுடன் சேர்ந்து கொலைத் திட்டத்தைத் தீட்டியதாகவும் வர்த்தகர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

### கம்பியால் தாக்கினோம்

மூன்று உயர்ரக மதுபானத்துடன் உணவையும் தயார் செய்து மதுவில் மாத்திரைகளைக் கலந்து நேவி கபிலவின் குழுவினருக்கு அருந்தக் கொடுத்தோம். அதன் பின்னர் ஒவ்வொருவராகச் சிறுநீர் கழிக்க வரும்போது இரும்புக் கம்பியால் தலையில் தாக்கிக் கொலை செய்தோம் என்று குறித்த வர்த்தகர் வாக்கு மூலமளித்துள்ளார். இந்தச் சம்பவத்தின்போது சத்தம் வெளியே கேட்காமல் இருக்க வாகனத்தின் ஒலிபரப்புச் சாதனத்தில் பாட்டுச் சத்தத்தைக் கூட்டி வைத்திருந்தோம் என்றும் அவர் விசாரணைகளில் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் சடலங்களை மாக்கந்தரப்பகுதிக்கு சந்தேக நபர்கள் எடுத்துச் சென்று அங்கு கைவிட்டுச் செல்ல முனைந்துள்ளனர். எனினும் அங்கு சென்று சடலங்களை வைத்த பின்னர் பொலிஸாரிடம்சிக்க நேருமோ என்ற அச்சம் ஏற்பட்டதால், மீண்டும் சடலங்களை வாகனத்தில் போட்டு தங்கொட்டுவ பகுதியின் பாழடைந்த வீதியில் வைத்து எரித்துள்ளனர்.

மாக்கந்தர பகுதியில் சந்தேகத்துக்கு இடமான குருதிக்கறைகள் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளன. (ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆயுதம் விற்கிறது பாகிஸ்தான்

## இலங்கைத் தூதுவருடன் பேச்சு

கொழும்பு, மார்ச் 17

போர் முடிந்து 7 ஆண்டுகள் முடிவடையும் நிலையில், கனரக ஆயுதங்களை இலங்கைக்கு விற்பனை செய்வதற்கான முயற்சிகளைப் பாகிஸ்தான் மேற்கொண்டுள்ளது.

> பாகிஸ்தானிடம் இருந்து கனரக ஆயுதங்களை வாங்குவதற்கு இலங்கைக்குத் தடையாக இருக்கும் நிதிப் பிரச்சினைக்கான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவர் மேஜர் ஜெனரல் ஜெயநாத் லொக்குஹேத்தாகொடகே, பாகிஸ்தானின் பாதுகாப்பு உற்பத்தி அமைச்சர் ராணாதன்வீர்ஹசைனை நேற்று முன்தினம் சந்தித்து நடத்திய பேச்சுக்களின்போதே இதற்கான உடன்பாடு காணப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் எப்போதுமே, இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பைக் கொண்டிருந்துள்ளது. உயர்வலு பாதுகாப்புத் தளபாடங்களை இலங்கைக்கு விநியோகிக்கின்ற பெரிய விநியோகத்தராகவும் இருக்கிறது.

இலங்கையில் தீவிரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு, பாகிஸ்தான் முக்கிய பங்காற்றியிருக்கிறது என்று பாகிஸ்தானின் பாதுகாப்பு உற்பத்தி அமைச்சர் ராணா தன்வீர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுக்களின் போது, பாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்பட்ட பாதுகாப்புத் தளபாடங்கள்பெருமளவானவற்றை இலங்கைக்கு வழங்குவது குறித்துக் கலந்துரையாடப்பட்டது. சிறிய ஆயுதங்கள் தொடக்கம் கனரக ஆயுதங்கள் வரை விநியோகிப்பது, இந்த ஒத்துழைப்புத் திட்டத்தில் அடங்கியுள்ளது.

பாகிஸ்தானிடம் இருந்து கனரக ஆயுதங்களை வாங்குவதற்கு இலங்கைக்குத் தடையாக இருக்கும் நிதிப் பிரச்சினைக்கான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதற்கு கடன் அடிப்படையில் இவற்றை வழங்குவது மற்றும் சில நிறுவனங்களின் இலகு கடன்களின் மூலம், வாங்குவது என்று பாகிஸ்தான் அமைச்சர், இரண்டு தீர்வுகளையும் முன்வைத்திருந்தார்என்பதுகுறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)




# வீதியில் குவியும் குப்பைகள்





சங்கிலியன் வீதியையும், சட்டநாதர் வீதியையும் இணைக்கும் அரச வீதியில் பண்டாரிக்குளம் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் வீதியின் இரு பக்கமும் பொதுமக்களால் குப்பைகள் கொட்டப்படுகின்றன.

வீட்டுக் கழிவுகள்,பொலித்தீன் பைகள், நோயாளிகள், வயோதிபர்கள் குழந்தைகளுக்குப் பாவிக்கப்பட்ட நப்கின்கள் (மலக்கழிவுகள்) மற்றும் இறைச்சிக்காக வெட்டப்பட்ட கோழி, ஆடு, மாடு போன்றவற்றின் கழிவுகள் போன்றவையும் இவ்விடத்தில் கொட்டப்படுகின்றன.

இவற்றை நாய்கள் இழுத்துச் சிதறுவதால் வீதியிலும் அயல் வீடுகளிலும் குப்பைகள் காணப்படுகின்றன. பலரும் பயன்படுத்தும் இந்த வீதியால் செல்லமுடியாத அளவில் துர்நாற்றம் வீசுகின்றது. (த-ஐ)



# மைத்திரியின் தடையையும் மீறி பேரணியில் சு.கவின் எம்பிக்கள்

## பங்கேற்பர் என்கிறார் ரஞ்சித் டி சொய்சா

கொழும்பு, மார்ச் 17

கொழும்பில் இன்று நடைபெறவுள்ள கூட்டு எதிரணியின் ஆர்ப்பாட்டப் பேரணியில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் எதிரணியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்பார்கள் என்றும், இதை எவராலும் தடுக்க முடியாது என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

தேசிய அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து கூட்டு எதிரணியினர் ஏற்பாடு செய்துள்ள இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் தமது கட்சி உறுப்பினர்கள் எவரும் பங்கேற்கக்கூடாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த ஆலோசனையின் பிரகாரம் கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் துமிந்த திஸா நாயக்க, சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுக்குக் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

கட்சியின் இந்த உத்தரவை மீறும் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்குரிய அதிகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே, தமக்கு இப்படியானதொரு கடிதம் கிடைத்திருந்தாலும் கட்டாயம் கூட்டத்தில் பங்கேற்போம் என்றும், மகிந்த தலைமையில் எதிரணிப் பக்கமுள்ள 40 சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்வார்கள் என்றும் ரஞ்சித் டி சொய்சா கூறியுள்ளார். (த-ஐ-5)

# பேரணியில் பங்கேற்றால் உறுப்புரிமை இழப்பீர்கள்

## எஸ்.பி. திசநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 17

கூட்டு எதிர்க் கட்சியினர் இன்று நடத்தவுள்ள பேரணியில், பங்கேற்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது உறுப்புரிமையை இழக்கும் நிலை ஏற்படும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும், அமைச்சருமான எஸ்.பி.திசநாயக்க எச்சரித்துள்ளார். இது குறித்துஅவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைமையின் உத்தரவை மீறிச் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டால், நாடாளுமன்ற ஆசனத்தையும் இழக்க நேரிடும்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த காமினி திசநாயக்க, லலித் அத்துலத்முதலி போன்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்களை அப்போது கட்சியின் தலைவராக இருந்த ஆர்.பிரேமதாச கட்சியில் இருந்து நீக்கினார். அப்போது, கட்சியை விட்டு நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற ஆசனத்தை இழக்க நேரிடும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

கூட்டு எதிர்க்கட்சியினர் நடத்தும் பேரணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், நாட்டுக்கும் விரோதமானது. இந்தப் பேரணியில் பங்கேற்பவர்களுக்கு எதிராக கட்சித் தலைமை ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-ஐ-5)

# ஜி.எஸ்.பி. பிளஸ் இலங்கைக்கு கிடைப்பதற்கு வாய்ப்பில்லை

## ஐ.நா. ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையானது இலங்கைக்கு இந்த ஆண்டுக்குள் கிடைக்கும் சாத்தியம் இல்லை என்பதை ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதார கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக்கான ஆணையாளர் நிவின் மிமிசா மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய பணிமனை பிரிட்டன் தூதரக வளாகக் கட்டடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்ட நிகழ்வையடுத்து ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்றது.

இதில் பங்கேற்ற வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கருத்து வெளியிடுகையில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகள் வலுவடைந்து வருவதாகக் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதா என்பது தொடர்பான விவாதங்களும், அது குறித்த சர்வஜன வாக்கெடுப்பொன்றும் நடத்தப்படவுள்ள நிலையில், பிரிட்டன் தூதரக வளாகத்தில் அமைந்துள்ள கட்டடத்தில் ஐரோப்பிய ஒன்றியப் பணிமனை அமைக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியானது - என்றார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்பதற்காக வருகை தந்திருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேசக் கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக்கான ஆணையாளர் நிவின் மிமிசா, இலங்கையில் ஜனநாயகம் - நல்லிணக்கம் ஆகிய விடயங்களில் உணர்ந்து கொள்ளக்கூடிய வகையிலான கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இலங்கையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றீர்கள். அப்படியானால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்குவதற்கு இன்னமும் எவ்வளவு காலம் எடுக்கும் என்று ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு, இலங்கை தற்போது சரியான தடத்தில் பயணிக்கின்றது. இந்த முன்னேற்றங்களைக் கண்டுணரக்கூடியதாக உள்ளது.

இந்தத் தடத்தில் பயணிக்கையில் மீளவும் திருப்பிவிட முடியாத முன்னேற்றங்களாக இவற்றை மாற்றிக் கொள்ள வேண்டும். மனித உரிமைகள் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயக மறுசீரமைப்பு நல்லிணக்கம் ஆகிய விடயங்களில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை எய்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் ஜி.எஸ்.பிக்கு விண்ணப்பிக்க முடியும். இலங்கை அரசு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை மீளப்பெறுவதற்காக இன்னமும் விண்ணப்பிக்கவில்லை. அப்படி விண்ணப்பித்ததும் விண்ணப்பத்தை ஆராய்ந்து அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு இன்னமும் 8 முதல் 10 மாதகாலப் பகுதி செல்லும் - என்றார். (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மக்களின் உரிமைகளை தட்டிக் கழிக்க முடியாது அரசே...

ஐக்கிய இலங்கைக்குள் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ற பலமான உணர்வையும் நிலைப்பாட்டையும் மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டும். போர் முடிவுக்கு வந்துள்ள இந்த வேளையில், பக்கச்சார்பான அரசியல் பிடியில் இருந்து நாடு விடுபட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, எமது தேசத்துக்கான புதிய அரசமைப்பை உருவாக்குவது அவசியம்.

மேற்போந்த கருத்தை, வெளிப்படுத்தி உள்ளார், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்களது கருத்தை அறியும் குழு, அவரைச் சந்தித்த வேளையில் மேற்கண்ட தமது நிலைப்பாட்டை ஜனாதிபதி வெளிப்படுத்தி உள்ளார்.

நாட்டின் நாடாளுமன்றம் தற்போது அரசமைப்புச் சபையாக மாற்றப்பட்டுள்ள நிலையில், அது வெளிப்படையாகச் செயற்பட வேண்டும். மக்களுக்கு நன்மை தரும் வகையில், அவர்களுக்கு ஏற்புடையதாகவும், வெளிப்படையாகவும் செயற்படுவது தவிர்க்க முடியாததும், கட்டாயமானதும் ஆகும்--என்றும் ஜனாதிபதி வலியுறுத்தி உள்ளார்.

அத்தோடு, புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள், கூச்சலிடுவோர் தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும்-ஜனாதிபதி அழுத்திக் கூறியுள்ளார்.

நாட்டில், நல்லிணக்கம் மற்றும் அதன் ஒருமைப்பாட்டைச் சிதறடிப்பதற்குச் சிலர் முயற்சிப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியதோடு--

அதனைப் பொருட்படுத்தாது செயற்படுமாறும்-மக்கள் கருத்து அறியும் குழுவை உசார்ப்படுத்தி, ஊக்கமுறச் செய்துள்ளார்.

இலங்கைக்குப் பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் கிடைத்த எட்டு வருடங்களில் (1956 ஆம் ஆண்டில்) அறிமுகப்படுத்தப்பட்ட, ஒப்பேற்றப்பட்ட, சிங்களம் மட்டும் சட்டத்தின் பின்னூட்டல்களாகப் புகுத்தப்பட்ட சட்டங்களும், விசாரணை ஆணைக்குழுக்களும்--

காலம் கடத்தும் உத்தியாகவும், யுக்தியாகவுமே அமைந்தன என்பது ஆட்சியியல் சாபக்கேடு எனலாம். ஆனால், பிரச்சினைகள் முற்றிப்பழுத்த நிலையில், அவை (குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரம்) அனைத்துலக மயப்பட்டமையால்--

இப்போதைய அரசின் தலைவர் என்ற வகையில், இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வு ஒன்றை வகுத்து, வழங்க வேண்டிய கட்டாயம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குச் சுமையாகி உள்ளது.

எனினும், இனப்பிரச்சினை விவகாரம், "மணி விழாக்" கண்டு கடந்தேகிய நிலையில், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் குறித்து, நியாயமான தீர்வு ஒன்றுக்கு வழி சமைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில், அவர்களின் வாக்கு ஆதாரத்துடன் பதவிக்கு வந்த நல்லாட்சி அரசு உள்ளது.

அதன்பொருட்டு, மைத்திரிபால சிறிசேன அரசு, மனப்பூர்வமாக செயற்பட வேண்டிய, இலகுவில் தட்டிக்கழிக்க முடியாத தேவையாக, பணியாக, ஓங்கி, உயர்ந்து, எழுந்தும் நிற்கிறது!

ஒட்டுமொத்தத்தில்--

நல்லாட்சி அரசு தனது இந்தக் கடப்பாட்டில் உணர்வுபூர்வமாகச் செயற்படத் தவறுமானால்--

நல்லாட்சியையும், நல்லிணக்கத்தையும் பெறுவதற்குத் துடித்துக் கொண்டிருக்கும், ஏங்கிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களையும்--

அவற்றை வாஞ்சையுடன் எதிர்பார்க்கும் அனைத்துலக நாடுகளையும்--

நட்டாற்றில் வீழ்த்தி மூழ்கடித்துவிடும், சிதைத்துவிடும் ஒவ்வாத நிலையே உயரும்!

# 2009 மே 19ஆம் திகதி வன்னிப் போர் முடிவுற்ற நாள் அல்ல

அலெக்ஸ் பரந்தாமன்

2009 ஆம் ஆண்டில் வன்னிப் பெருநிலப் பரப்பு மீதான போர் நடவடிக்கைகள் முடிவடைந்த தினம் குறித்து, தற்போது அரசியல் உயர் மட்டங்களிடையே, குறிப்பாக சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே ஒருவித சர்ச்சை உருவாக்கியுள்ளதைக்காணமுடிகிறது. 2009 மே மாதம் 19 ஆம் திகதி போர் முடிவடைந்ததாக நாடாளுமன்றத்தில் அன்றைய ஆளுந் தரப்பினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, சுமார் ஏழு வருடங்கள் கழிந்த நிலையில், அந்தப் போருக்குத் தலைமையேற்று வழி நடத்தியவரான, இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அந்தக் குறிப்பிட்ட தினத்தில் போர் முடிவடையவில்லை எனத் தற்போது நாடாளுமன்றத்தில் மறுத்துரைத்திருக்கின்றார்.

மேற்குறிப்பிட்ட காலத்தில் சிங்கள இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட வன்னிமண் மீதான போர் நடவடிக்கை உண்மையில்எப்போதுமுடிவடைந்தது? இது குறித்து அப்போதைய களயதார்த்தத்தைச் சற்றுச் சுருக்கமாகஉற்றுநோக்கியபடி நகருவோம். அப்போதுதான் உண்மை நிலவரம் புரிபடத் தொடங்கும்.

விடுதலைப் புலிகளின் ஆளுகைக்குட்பட்ட வன்னிப்பெருநிலப் பரப்பை, என்ன விலை கொடுத்தேனும்மீட்டே ஆகவேண்டும் என்ற மேலிடத்தின் உத்தரவுக்கமைய மன்னார் மற்றும் மாவிலாறு ஆகிய இடங்களில் இருந்து தனது படை நட வடிக்கைகளை ஆரம்பித்தது சிங்கள இராணுவத் தலைமை அலுவலகம்.

முதலில் மன்னாரில் இருந்து எறிகணைத் தாக்குதல்களோடு புறப்பட்ட இராணுவத்தினர் பல இழப்புக்களைச்சந்தித்து அதேசமயம், பொதுமக்களின் வாழ்வாதாரங்களையும் சிதைத்த வண்ணம், கிளிநொச்சி நகரை வந்தடைந்தனர். அதன்பின் ஏ-9 பாதையூடாக பரந்தன் சந்தியை வந்தடைந்தவர்கள், அங்கு நிலையெடுத்திருந்த பிற்பாடு, கிழக்குத் திசைநோக்கி பரந்தன் வீதியூடாக புதுக்குடியிருப்பைக் கைப்பற்றும் நோக்குடன் தங்கள் நகர்வை ஆரம்பித்திருந்தனர்.

ஏற்கனவே இடம்பெயர்ந்து வந்து பரந்தன்-புதுக்குடியிருப்பு வரையுள்ள பிரதான வீதியின் இருபக்கங்களிலும் தற்காலிக கூடாரங்களை அமைத்திருந்த பொதுமக்கள், மீண்டும் இராணுவத்தினர் தம்மை நோக்கி வருவதைக் கண்டதும், திரும்பவும் இடம்பெயரத் தொடங்கினார்கள்.

### மக்களின் வெளியேற்றம்

முரசுமோட்டை, கண்டாவளை, புளியம்பொக்கணை, தருமபுரம் போன்ற பகுதிகளைவிட்டு வெளியேறி விசுவமடு மற்றும் புதுக்குடியிருப்பு ஊடாக மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் போன்ற பகுதிகளை நோக்கிப் பொதுமக்கள் நகர்ந்தார்கள். இவர்கள் நகர நகர இராணுவத்தினரும் தாக்குதல்களைத் தொடுத்தபடி இவர்கள் பின்னே தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள்.

> "இடம்பெயர்ந்து வந்து பரந்தன் புதுக்குடியிருப்பு வரையுள்ள பிரதான வீதியின் இருபக்கங் களிலும் தற்காலிக கூடாரங் களை அமைத் திருந்த மக்கள்,மீண்டும் இராணுவத்தினர் தம்மை நோக்கி வரு வதைக் கண்டதும், திரும்பவும் இடம்பெயரத் தொடங் கினார்கள்."

இதேவேளை-மாங்குளத்தில் இருந்து இன்னொரு படையணி ஒட்டுசுட்டான் வீதியை மையமாக வைத்து, புதுக்குடியிருப்பை நோக்கி நகர்ந்த நிலையில், பரந்தனில் இருந்து வந்த இராணுவத்துடன் இணைந்து கொண்டது. பின்னர் அங்கிருந்தவாறே இரு பிரிவினரும் இணைந்து கொண்டு எறிகணைத் தாக்குதல்களை நடத்தத் தொடங்கினர். இதன் காரணமாக புதுக்குடியிருப்பு இரணைப்பாலை மற்றும் கோம்பாவில் வாழ்பகுதி மக்களும் இடம் பெயரத் தொடங்கினார்கள்.

இவர்கள், ஏற்கனவே இடம் பெயர்ந்து வந்திருந்த மக்களோடு மக்களாகத் தம்மையும் இணைத்துக்கொண்டு, மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், வட்டுவாகல் மற்றும் முள்ளிவாய்க்கால் போன்ற இடங்களில் தஞ்சமடைந்தனர்.

ஏற்கனவே மாவிலாற்றில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினரும் தங்கள் நகர்வில் முன்னேற்றம் கண்ட நிலையில், முல்லைத்தீவைக் கைப்பற்றி, அடுத்த கட்டமாக முள்ளிவாய்க்காலை நோக்கி முன்னேற ஆரம்பித்தார்கள்.

இந்த நிலையில்தான், மக்களுக்கு ஓடித்தப்ப முடியாத ஓர் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. கிழக்குப் பக்கம் உப்புக்கடல் விரிந்து கிடந்தது. வடதிசையில் இராணுவம் நிலையெடுத்திருந்தது. மேற்குப் புறத்தில் உள்ள இரணைப்பாலைக்குள் பெருமளவு இராணுவம் தரை இறங்கி யிருந்தது. தெற்கிலும் அதே நிலைமை தென்பட்டதால் மீண்டும்போர்க்களம் புதியவேகம் கொள்ளத் தொடங்கியது.

நிலைமைகள் அந்தக் கணத்தில் இவ்வாறிருக்க, இரணைப் பாலையில் இருந்த இராணுவத்தினர், 2009 ஏப்ரல் 9 ஆம் திகதி திங்கட்கிழமை நள்ளிரவுக்குப் பின்பு மாத்தளன் சந்தியை நோக்கிய தமது நகர்வை எறிகணை வீச்சுக்களுடன் ஆரம்பித்தனர். இராணுவமும் தம்மிடம் சரணடைபவர்களை உள்வாங்கிக் கொண்டு இன்னமும் கைப்பற்றப்படாத பகுதிகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தோடு, எறிகணைகளை ஏவியபடி நகரத்தொடங்க, முள்ளிவாய்க்காலின் எங்கோ இன்னொரு மூலையில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இந்தச் சம்பவம் மே மாதம் 16 ஆம், 17 ஆம், 18 ஆம் திகதிகளில் நடைபெற்றுக் கொண் டிருக்கும்போது, 19 ஆம் திகதி போர் முடிவுக்கு வந்துவிட்ட தென நாடாளுமன்றில் அறிக்கை விட்டமையை மிகப்பெரியதொரு கேலிக்கூத்தாகவே கொள்ளமுடியும்.

### மே 19க்குப் பிறகும் போர்

மே 19 க்குப் பின்னரான 20 ஆம், 21ஆம்நாள்களிலும்அங்கு போர் நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவே வவுனியா-செட்டிகுளம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் பலரும் கூறிக்கொண்டார்கள்.

உண்மையில் 2009 மே 19 ஆம் நாள் போர் முடிவுற்றது என்ற அறிவிப்பு தவறானது. ஏனெனில், கள நிலவரங்களின்படி குறிப்பிட்ட தினத்துக்குப் பிற்பாடு, அங்கு எஞ்சியிருந்த போராளிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் சமர் நடைபெற்றிருந்திருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.உமாசுதன்

# விவேகமற்ற செயற்பாடுகள்

இலங்கையிலே நல்லாட்சி என்ற அரசு குறித்து மக்கள் மத்தியிலான கருத்துருவாக்கத்தின் பயணத்திலே ஓராண்டு முற்றாக நிறைவடைந்து விட்டது. நல்லிணக்கம் என்ற செயலற்ற சொல்லின் நகர்வு நிகழ்வுகளுக்கூடாக வடக்கின் தமிழர் அதிகம் செறிவு கொண்டுள்ள யாழ்ப்பாணத்தை நோக்கி நகர்த்தப்படுகின்றது.வார்த்தைகளின் கூட்டிணைவில் மட்டும் நல்லிணக்கம், நல்லியக்கம் பெற்று தனது ஆரம்ப நிலையினுள் மீண்டும் ஒளிந்து கொள்கின்றது.செயற்பாடுகளில் வலுவின்றிச் சோர்ந்து கிடக்கின்றது. இந்த நிலையிலே வலிகாமம் பிரதேசம் வாழ் மக்களின் மீள்குடியமர்வுகள் சாத்தியப்படவில்லை.மாறாக இராணுவத் தேவை கருதிய நில அபகரிப்பு நடவடிக்கைகள் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. இந்தச் செயல் நிலைகளின் பின்னணியில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், மனித உரிமைகள் சபையின் 31ஆவது அமர்வில் தமது ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றும் போது, வழக்கமான பாணியில் தமிழர் தரப்பு விடயங்களைத் தொட்டுக் காட்டியிருக்கின்றார்.மீள் குடியமர்வு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் விவகாரம் ஆகியவற்றில் இலங்கை அரசு மந்தகதியிலேயே நகர்கிறது. அவை விரைவுபடுத்தப்பட வேண்டியவை.தமிழ் மக்களுடனான இன ரீதியான நல்லிணக்கங்களையும்,சமத்துவங்களையும் முன்னிறுத்துவதற்கான அடிப்படைகள் அவைதான் என்பதனை தன் பங்குக்கு ஒப்புவித்திருக்கின்றார்.

**சுவாரஸ்யங்கள்**

இதற்கு நேர் மாறாக இலங்கை நாடாளுமன்றத்திலும் அண்மைய நாள்களில் சில சுவாரஸ்யங்கள் இடம்பெற்றிருக்கின்றன.கடந்த அரசு மேற்கொண்ட மிகப்பெரிய மனித குலத்துக்கு எதிரான, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை தொடக்கம் மேற்குலக நாடுகளிடையே ஓர் பேசுபொருளாகவும் தமிழர் தொடர்பான கரிசனைக்குரிய விடயமாகவும் பார்க்கப்பட்ட போது மௌனமாக பாதுகாக்கப்பட்ட,மூடி மறைத்து அடைகாக்கப்பட்ட பல விடயங்களின் தொகுப்பு தற்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.இந்த விடயங்கள் பாதிக்கப்பட்ட தமிழர் தொடர்பான, அவர்களுக்கான ஆத்மார்த்தமான தீர்வுக்கான அணுகுமுறையாக அன்றி, வெறுமனே அரசின் அரசியல் நகர்வுகளுக்கிடையேயான திட்டமிட்ட திணிப்பாகவும், மேற்குலகின் பரந்த இராஜதந்திர வெளியிடையேயான அரசின் புதுவித காய் நகர்த்தலாகவும் உருட்டி விடப்பட்டிருக்கின்றன.

இந்த இராஜதந்திர நகர்வை முன்னாள் இராணுவத் தளபதியும்,கடந்த அரசில் புலிகளுக்கெதிரான போரை குறிப்பாக 2009 களில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போருக்குத் தலைமை தாங்கி நகர்த்திச் சென்றவரான சரத் பொன்சேகா மூலம் மேற்கொண்டுள்ளனர்.கடந்த அரசில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வேண்டி ஆயுதம் ஏந்திப் போராடிய ஓர் மக்கள் இயக்கத்துக்கு எதிரான போர் வெற்றிக்கு காரணமானவரெனப் போற்றப்பட்ட பொன்சேகா ஆரம்பத்தில் தலையில் தூக்கி வைத்து கொண்டாடப்பட்டார். பின்னர் அவரது இராணுவ ரீதியான உயர் பதவிகளை பறித்தெடுத்ததுடன், வெற்றி நாயகன் என்ற நாமத்தைக் களைந்து சிறையிலும் அடைத்து விட்டனர். பல்வேறு வழிகளில் அழுத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டார்.

> கடந்த அரசில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வேண்டி ஆயுதம் ஏந்தி போராடிய ஓர் மக்கள் இயக்கத்துக்கு எதிரான போர் வெற்றிக்கு காரணமானவரெனப்போற்றப்பட்ட பொன்சேகா ஆரம்பத்தில் தலையில் தூக்கி வைத்து கொண்டாடப்பட்டார்.

**தார்ப்பரியங்களின் பின்னணி**

இத்தகைய தார்ப்பரியங்களின் பின்னணியில், கடந்த அரசில் ஆரம்பத்தில் வெற்றி நாயகனாகவும், பின்பு கைதியாகவும் வழி நடத்தப்பட்ட ஓர் மனிதரை, தற்போதைய அரசுதான் பதவி ஏற்று நல்லாட்சி என்ற நாமம் கொண்டு நகர்த்தி வருகின்ற அரசின் ஓராண்டு பூர்த்தி முடிவுறுத்தப்பட்ட நிலையிலே, மிகப் பிரதானமான அவையினுள்,நாடாளுமன்ற சபையினுள் ஓர் அமைச்சராக முன்னிறுத்தியிருக்கின்றது. தமது கன்னி உரையிலும், தமிழர் தரப்பு என்ற பிரதான உருண்டையை பேசுபொருளாகக் கொண்டு திட்டமிட்ட தந்திரங்களை லாவகமாக உருட்டிவிளையாடியிருக்கின்றார் அவர். குறிப்பாக 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி, இறுதிக்கட்டப் போர் உச்சமடைந்து ஓய்ந்த பின்னர் தமிழீழ தேசியத் தலைவர் உயிருடன் இருந்தார்,போர் முடிவடைவதற்கு முன்பே மகிந்தர் மண்ணை முத்தமிட்டு போர் வெற்றியை உலகத்துக்கு எடுத்துரைத்தார்,கடற்புலிகளுக்கு படகு வாங்க 200 மில்லியனை மகிந்தவின் சகோதரர் பசில் வழங்கினார்,வெள்ளைக் கொடி தொடர்பான விசாரணைகள் அவசியம், தற்போது ஐ.நா மனித உரிமைகள் சபை பரிந்துரைத்த சர்வதேச நீதி விசாரணையாளர்களின் பங்குபற்றுதலுடன் அவர்களின் ஆலோசனையும் பெறப்பட வேண்டும் என்பதான விடயங்களை ஓர் தரப்பைக் குறிவைத்துத் தாக்கும் விதமாக போட்டு உடைத்திருக்கின்றார்.மாறாக தமிழர் தொடர்பான நேர்முகப் பார்வையோடும், அவர்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பரிகாரங்களின் ஆத்மார்த்தமான வெளிப்பாடாகவும் இவை அமையவில்லை. உண்மையில் இந்த விடயங்களில் பெரும்பாலானவை ஆச்சரியப்படத்தக்கவை அல்ல. போர் முடிவடைந்த காலத்தின் பின்னான தமிழ்மக்கள் சார்ந்து பேசப்பட்டு வந்த, நியாயப்படுத்தப்பட்டு வந்த விட யங்கள் தான் இவை.ஆனால் விடுதலைப்புலிகள் தொடர்பில் சொல்லப்பட்ட படகு கொள்வனவு,200 மில்லியன் ரூபா பணப்பரிமாற்றம் என்பவை கதையாடல்களின் வழி பரப்பி விடப்பட்டுள்ள ஓர் தந்திரமே.விசாரணைப் பொறிமுறை என்பதான ஒன்று முன்னிறுத்தப்படும்போது, ஒரு தரப்பின் மீதான அழுத்தம் என்பதில் இருந்து மற்றைய தரப்பைச் சூசகமாக உள்ளீர்த்துவிடுவதற்கான அடித்தளமே.விசாரணைகளின் திசைகளை மாற்றிவிடுவதற்கான ஆரம்பப் புள்ளியே.

**பரப்புரைகள்தான் இவை**

வேறு திசையில் திசைமுகப்படுத்தப்பட்ட மில்லியன் ரூபாக்கள் கணக்கான பணப்பரிமாற்றங்களையும், போருக்கான ஆயுதக்கொள்வனவுகள் என்ற போர்வையில் தனிநபர் சார்ந்து உள்ளீர்க்கப்பட்ட பண சுவீகரிப்புக்களையும், மேற்கொண்ட குடும்ப ஆட்சியின் பிரகிருதிகள் என்பதனை அடிப்படையில் வைத்துக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பரப்புரைகள்தான் இவை.

## கவனிக்குமா நகரசபை?

மன்னார் நகரசபையின் கீழ் இயங்கும் பொதுநூலகம் மிகவும் நல்லமுறையில் இயங்கி வருகிறது. இருப்பினும் அங்கு நிலவும் ஒருசில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவது அவசியமாகின்றது. எல்லாவிதமான பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், குறைவின்றி வாசகர்கள் படித்துப் பயனடைய மிகவும் உதவியாக இருக்கின்றன. ஆனால் மாணவர்கள் என்ற போர்வையில் கையில் சில கொப்பிகளைப் பிடித்தபடி இங்கு வரும் சில இளைஞர்கள், பத்திரிகைகளின் பக்கங்களைக் கிழித்து எடுத்துப் போவதும், சஞ்சிகைகளில் வரும் பெண்களின் படங்களில் ஆபாசப் படங்கள் வரைவதும், பேனாவால் ஓட்டை போடுவதும், கூடியிருந்து கைத்தொலைபேசியில் பார்வையிடுவதும் (என்னத்தைப் பார்க்கிறார்களோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்) அன்றாடம் நடக்கும் சம்பவங்களாகும். நூல் நிலைய காப்பாளருக்குரிய இடம் அங்கு எப்போதும் வெறுமையாக இருக்கின்றன. காப்பாளர் தனக்குரிய இடத்தில் இருந்தால் இவைகளைத் தடுக்கலாம். குறிப்பாக, மெட்ரோ, மித்திரன், குமுதம் போன்ற பத்திரிகைகள்தான் இவர்களின் முக்கிய இலக்காக இருக்கின்றது. எனவே நிர்வாகம் இவர்களுக்கு (மாணவர்கள்) பிறிதொரு இடத்தைக் கொடுக்க வேண்டும். அல்லது காப்பாளர் தனக்குரிய இடத்தில் இருந்து இவர்களைக் கண்காணிக்க வேண்டும். இதுவும் ஒரு வகையில் சமூக விரோதச் செயற்பாடுதான். எனவே நிர்வாகத்தைக் குறை சொல்லுவதாக நினைக்காமல், நிர்வாகிகள் இதை உடன் கவனத்தில் எடுத்தால் வாசகர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் உதவியாக இருக்கும். நூலகம் என்பது கல்வி அறிவையும், நற்பண்புகளையும், நல்ல சமுதாயத்தையும் உருவாக்கும் ஓர் இடம் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இல்லை. எனவே நிர்வாகம் இதைக் கவனத்தில் எடுத்து இந்தச் சீர்கேட்டை நிவர்த்தி செய்தால் அனைவருக்கும் நன்மையே!

மா.குலேந்திரன்
மூர்வீதி, மன்னார்

## மக்களைச் சிரமத்தில் ஆழ்த்தி வரும் மூளாய் பித்தனை இந்து மயான வீதி

மூளாய் தண்ணித் தொட்டியடியில் ஆரம்பித்து பித்தனை இந்து மயானம்வரை செல்லும் வீதி புனரமைக்கப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுவதால் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியின் ஒரு பகுதி தார் இடப்பட்ட நிலையிலும், பெருமளவு பகுதி கற்கள் கிளம்பிய நிலையிலும் காணப்படுகின்றன. மூளாயில் சாவு அடைந்தவர்களின் இறுதிக் கிரியைகளை நிறைவேற்றுவதற்கு இந்த வீதியைத்தான் இந்தப் பகுதி மக்கள் பயன்படுத்துகின்றனர். மழை காலத்தில் வெள்ளநீர் இந்த வீதியூடாகவே சென்று குளத்தை அடைந்து பின்னர் கடலில் கலக்கின்றது. பெருமழை பெய்யும்போது வெள்ளநீர் ஆறு போன்று பெருக்கெடுத்து ஓடுவதால் மயானத்துக்குச் செல்பவர்கள் அனுபவிக்கின்ற அவலங்கள் சொல்லிமாளாதவை. அத்துடன் இந்தப் பகுதியில் மேய்ச்சலுக்கென விடப்படுகின்ற கால்நடைகளின் நிலையும் அபாயக் கட்டத்தை எட்டி நிற்கின்றது. சில வேளைகளில் ஆடுகள் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்படுவதும் உண்டு. ஆகவே வீதியைத் திருத்தி வெள்ள நீர் ஊடறுத்துச் செல்லும் இடத்தில் மதகு ஒன்று உடனடியாக அமைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் வீதியும் புனரமைக் கப்பட்டு மழைகாலத்தில் இலகுவான நடமாட்டத்துக்கு வழி வகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கண்மணி

## முன்பள்ளிக் கட்டடம் அமையுமா?

ஓமந்தைப் பிரதேசத்தில் அரசமுறிப்பு, பெரிய விளாத்திக்குளம் ஆகிய இரண்டு கிராமங்களில் சிறுவர் கல்விக்கென முன்பள்ளி இருந்தும், தனியான கட்டட வசதி இன்றிப் பொதுநோக்கு மண்டபத்தில் இயங்கி வருவது யாவரும் அறிந்த விடயமாகும். கடந்த மாகாண சபைத் தேர்தல் பரப்புரையின்போது வேட்பாளராகப் போட்டியிட்ட எஸ்.உதயராசா, முன்பள்ளிக்குக் கட்டடம் கட்டித்தருவதாக கிராம மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்.அத்திபாரத்துக்கான கல் பொது நோக்கு மண்டபக் காணிக்குள் பறிக்கப்பட்டு அத்திபாரமும் இடப்பட்டதுடன் அவர் தனது நடவடிக்கைகளை நிறுத்திவிட்டார். எமது கிராமத்தைச் சேர்ந்த வசதி படைத்த மக்கள், வவுனியா நகரில் வசிக்கின்றார்கள். தற்போது குடியிருக்கும் மக்கள் அன்றாடம் காய்ச்சிகள் என்பது நிதர்சனம். எமது கிராமத்தில் தீராத பற்றுக்கொண்ட உங்களுடைய செயற்றிறனால் வடமாகாண முதலமைச்சர், கல்வி அமைச்சர் ஆகியோரது அனுசரணை பெற்று எமதுசொந்த மழலைச் செல்வங்கள் கல்வியை, ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ள வசதியாக முன்பள்ளி அமைத்துத் தருவீர்களா?

மக்கள் சார்பாக த.மகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTH
Twitter : UTHAY



ஸ்பெயினில் இருந்து சீனாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பழங்கள் அனைத்தும் சோதனைக்குட்படுத்தப்படாத காரணத்தால் அழிக்கப்பட்டன. தரக்கட்டுப்பாட்டுப் பரிசோதனையினூடாக பழங்கள் இறக்குமதி செய்யப்படாததை அடுத்தே, அந்த நாட்டு அரசு குறித்த அதிரடி முடிவை எடுத்துள்ளது. நேற்றுமுன்தினம், ரியான்ஜின் மாகாணத்தில் சோதனைக்குட்படுத்தப்படாத பழங்கள் அனைத்தம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன. (து-ரி4)

# பாரி

## குற்ற

## ஒருவர்

புருசெல்ஸ், மார்ச் 17
பாரிஸில் இடம்பெற்ற
தாக்குதலுடன் தெ
போராளிகள் பெல்ஜிய
நகரில் குடியிருப்பதா
அறிந்த பொலிஸார் அ
தலை நடத்தினர்.
இந்தச் சம்பவத்தில் கு
எனச் சந்தேகிக்கப்பட்ட
வர் கொல்லப்பட்டது
தப்பியோடியுள்ளனர்.
மீதும் அதிரடியாகப்
துப்பாக்கிப் பிரயோகம்
பொலிஸாரால் அவர்கள்
வீட்டுக் கதவின் அ
அழுத்தப்பட்டதுடன்,
துப்பாக்கிப் பிரயோகச்
இந்தத் தாக்குதலில் 4
யோகத்தர்கள் காயமடை
என அதிகாரி ஒருவர்
தாக்குதலை அடுத்து
யில் இருந்த முன்பள்ள
யாக விடுமுறை வழங்க
னால் பதற்றத்தில் இரு
தமது பிள்ளைகளை
சென்றுள்ளனர். தாக்கு
லப்பட்டவரின் விவரங்க
வில்லை. ஆனால், தே

## பாகிஸ்தானில் அரச பணியாளரை இலக்குவைத்து குண்டுத் தாக்குதல்

### 15 பேர் சாவு; 30 பேர் காயம்



இஸ்லாமாபாத், மார்ச் 17
பாகிஸ்தானில் பேஷ்வார் மாநிலத்தில் அரச பணியாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்தில் நேற்று குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.
இந்த குண்டுவெடிப்பில் 15 பேர் உயிரிழந்ததுடன், 30 பேர்காயமடைந்துள்ளனர். மர்தானில் இருந்து புறப்பட்ட பேருந்து பேஷ்வாரை வந்தடைந்தபோது அதில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்தது. அரச பணியாளர்களைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருப்பதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
மேலும், குண்டுவெடிப்பு நிகழும்போது 50 பேர் பேருந்தில் இருந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 2 பெண்களும் ஒரு சிறுவனும் அடங்குவர்.
இந்தக் குண்டு வெடிப்புக்கு 8 கிலோ வெடிபொருள்பயன்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.
சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 8 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
இந்தத்தாக்குதலுக்குப்பிரதமர்நவாஸ் ஷெரிப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். குண்டுவெடிப்பில்உயிரிழந்தவர்களுக்கு தனது அனுதாபத்தையும் அவர்தெரிவித்துள்ளார். (து-ரி4)

# ஜேர்மனில் ஓடும் காரில் வெடிகுண்டுத் தாக்குதல்



பேர்ளின், மார்ச் 17
ஜேர்மனியில் பேர்ளின் நகரில் சாலையில் சென்றுகொண்டிருந்த காரில் குண்டு ஒன்று வெடித்தது. இதில் சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தத் தாக்குதல் மாபியாவால் நடத்தப் பட்டது எனப் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். பிரதான நகரான பேர்ளினில், நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் இந்தக் குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது. காரை ஓட்டியவர் துருக்கியைச்சேர்ந்தவர் எனப்பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.
அவர் வசித்த இல்லத்துக்கும் குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்துக்கும் அதிக தூரம் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதற்கு முன்னர் இவர் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர், போதைப் பொருள் விற்பனை, கள்ளப்பணம் போன்ற விடயங்களில் பாதாள உலகக் கும்பலுடன் தொடர்பு டையவர் எனப் பொலிஸாரால் கண்காணிக்கப்பட்டவர். ஜேர்மனியில் பாதாளக் கும்பலினால் கொடுமையான வன்முறைச் சம்பவங்கள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பேர்ளின் நகரில், ஆயிரக்கணக்கான ரஷ்யர்கள் வசிக்கின்றனர், அவர்களில் சிலர் குற்றச் செயல்களுக்குக் காரணமாக உள்ளனர். குண்டுவெடிப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மூத்த பொலிஸ் அதிகாரியால்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெடி குண்டுத் தாக்குதலுக்கான காரணங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. இது ஒரு கொலை முயற்சி என நாம் சந்தேகிக்கிறோம் என அந்த அதிகாரி தெரிவித்தார்.
இந்தக் குண்டுவெடிப்பில் வேறு எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்பட வில்லை. சம்பவ இடத்துக்கு விரைந்த வெடிகுண்டு நிபுணர்கள் வேறு வெடிப்புகளுக்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என சோதனை யிட்டுள்ளனர். அந்தப் பகுதியில் சில காலமாக வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதுடன், போராட்டக் குழுக்களின் தாக்குதலும் இடம்பெறுவதால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். (து-ரி4)

# முதியோரைப் பராமரிக்க ஜப்பானில் ரோபோக்கள்

டோக்கியோ, மார்ச் 17
முதியவர்களைப் பராமரிப்பதற்காக ரோபோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
முதியவர்களுடன் நேரம் செலவிட, அவர்களின் கருத்துகளுக்கு செவிமடுக்க இளைய தலைமுறையினர் தயாராக இல்லை என்பதால், இவ்வாறான ரோபோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஜப்பானில் 25 சதவீதமானோர் 65 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். முன்னதாகச் சில வேலைகளைச் செய்யக் கூடிய ரோபோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
ஆனால், தற்போது அவற்றைவிட அடுத்த கட்டமாக துணையாக இயங்கக் கூடிய ரோபோக்களின் உற்பத்தி அதிகரித்துள்ளது. வீட்டில் அன்றாடப் பாவனைக்கான ரோபோக்களின் சந்தை 2020 ஆம் ஆண்ட ளவில் 17.4 பில்லியன் பவுண்டகளை எட்டும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை, மனித உருக்கொண்ட இவை முரட்டுத்தனமாக மாறவும் வாய்ப்புள்ளது. இவற்றை இயந்திர மொழி மூலம் இயங்கச் செய்வதால் அவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அதன் இயங்கு திறனை மாற்ற முடியும். (து-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரிஸ் தாக்குதலுடன் தொடர்புடைய ...ற்றவாளிகள் மீது அதிரடித் தாக்குதல்

## ...வர் சாவு; 2 பேர் தப்பியோட்டம்





...ார்ச் 17
...பெற்ற வெடிகுண்டுத் ...ன் தொடர்புடைய ...பெல்ஜியத்தின் புரூசல் ...இருப்பதாகத் தகவல் ...லிஸார் அதிரடித் தாக்கு ...ர்.
...த்தில் குற்றவாளிகள் ...க்கப்பட்ட மூவரில் ஒரு ...ப்பட்டதுடன், இருவர் ...ள்ளனர். பொலிஸார் ...யாகப் போராளிகள் ...யோகம் நடத்தினர்.
... அவர்கள் தங்கியிருந்த ...ின் அழைப்பு மணி ...துடன், உள்ளிருந்து ...யோகச் சத்தம் கேட்டது. ...தலில் 4 பொலிஸ் உத்தி ... காயமடைந்துள்ளனர். ... ஒருவர் தெரிவித்தார். ...அடுத்து அந்தப் பகுதி ...முன்பள்ளிக்கு உடனடி ...ற வழங்கப்பட்டது. இத ...தில் இருந்த பெற்றோர் ...ளைகளை கூட்டிச் ...ர். தாக்குதலில் கொல் ...விவரங்கள் வெளியாக ...னால், தேடப்பட்டு வரும் முக்கிய குற்றவாளி அவர் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். தப்பிச் சென்ற இருவர் குறித்து பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர்.

தாக்குதல் நடத்தப்படுகையில் கட்டடத்துக்கு மேல் ஹெலிகொப்டர் ஒன்று சம்பவ இடத்தை நோட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஆனாலும், எஞ்சிய இருவர் இந்தக் கண்காணிப்புக்களையும் மீறித் தப்பித்துச் சென்றுள்ளனர். இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவரின் உடல்கள் அவர்கள் வசித்தகட்டடத்துக்கு அண்மையில் இருந்த மீட்கப்பட்டது. அவர்கள் வசித்த வீடு, பாரிஸுக்கு செல்லும் ரயில் நிலையத்துக்கும், ஔடி கார் தொழிற்சாலைக்கும் அண்மையில் அமைந்துள்ளது.

பாரிஸ் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், அவர் ஐரோப்பாவில் வசிப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (த-ரி4)

> இந்தத் தாக்குதலில் 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்தனர் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தாக்குதலை அடுத்து அந்தப் பகுதியில் இருந்த முன்பள்ளிக்கு உடனடியாக விடுமுறை வழங்கப்பட்டது. இதனால் பதற்றத்தில் இருந்த பெற்றோர் தமது பிள்ளைகளை கூட்டிச் சென்றுள்ளனர்.

## ...ல் ...தல்



...ு முன்னர் ...ம் போன்ற ...ப்பட்டவர். ...ள்ளப்பட்டு ...ார் குற்றச் ... பொலிஸ் ...ணங்கள் ... அதிகாரி

... விரைந்த ...ன யிட்டுள் ...ட்க் குழுக் (த-ரி4)

## ...கள்

...போக்களின் ...தை 2020 ...ந்துள்ளனர். ...ளது. ...டுத்துவதன் (த-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ராகு கேது
## பெயர்ச்சிப் பலன்கள்




*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் துலாம் ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள்)*

### துலாம்

மற்றவர்களின் வலி, வருத்தங்களை அறிந்து ஆறுதல் சொல்பவர்களே! அப்படிப்பட்ட உங்களுக்கு 08.01.2016 முதல் 25.07.2017 வரை உள்ள காலகட்டத்தில் இந்த ராகுவும், கேதுவும் என்ன செய்யப் போகிறார்கள் என்று பார்ப்போம்.

**ராகுவின் பலன்கள்:**
இதுவரை உங்களின் ராசிக்கு பன்னிரண்டாம் இடத்தில்நின்றுக்கொண்டுதிடீர்பயணங்களையும், சேமிக்க முடியாதபடி செலவினங்களையும், தூக்கமின்மையையும் தந்துக் கொண்டிருந்த ராகுபகவான், இப்போது உங்கள் ராசிக்கு லாப வீட்டுக்குள் அமர்வதால் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும். திடீர்யோகம், பணவரவு என்பவை உண்டாகும். நீங்கள் உழைத்த உழைப்பு, சிந்திய வியர்வைக்கெல்லாம் நல்ல பயன் கிடைக்கும். தொழிலதிபர்களின் நட்புக் கிட்டும். எங்கு சென்றாலும் நல்ல வரவேற்புக் கிடைக்கும். மகிழ்ச்சியான சம்பவங்கள் குடும்பத்தில் நடக்கும். முன்பு சவாலாகத் தெரிந்த சில விடயங்கள் இப்போது சாதாரணமாக முடிவடையும். நிலம், வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். மகளின் திருமணத்தைச் சிறப்பாக நடத்துவீர்கள். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் உயர்கல்வி, உத்தியோகம் அமையும். சொந்த, பந்தங்களின் சுயரூபம் அறிந்து செயற்படத் தொடங்குவீர்கள். வெளி இடத்தில் இருந்து உங்களை நம்பி பெரிய பதவிகள், பொறுப்புகள் தருவார்கள்.
கடன் பிரச்சினைகள் ஒரு பக்கம் விரட்டினாலும் இங்கிதமாகப் பேசி வட்டியைத் தருவீர்கள். கறாராகவும், கண்டிப்பாகவும் பேசுவதைத் தவிர்த்து கனிவாகப் பேசுவீர்கள். பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். கோயில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளின் திறமைகளை இனங்கண்டறிந்து வளர்ப்பீர்கள். அயல்நாடு செல்ல நுழை விசைவு கிடைக்கும்.
நீங்கள் வெகுநாள்களாக மனதுக்குள்ளேயே கட்டிவைத்திருந்த கனவு வீட்டை, இப்பொழுது நிஜமாகக் கட்டும் வாய்ப்பு அமையும். பழைய வழக்கில் வெற்றி பெறுவீர்கள். அரச காரியங்கள் சுமுகமாக முடியும். அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். பங்குச் சந்தை மூலமாக பணம் வரும். சிலர் சொந்தத் தொழில் தொடங்க வாய்ப்பிருக்கிறது. மலையாளம், கன்னடம் பேசுபவர்களால் நன்மை உண்டாகும்.

**இராகுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்களின் லாபாதிபதியான சூரியனின் உத்திரம் நட்சத்திரம் முதல் பாதத்தில் 08.01.2016 முதல் 10.03.2016 வரை ராகுபகவான் சென்றதால் இக்காலகட்டத்தில் வசதி, வாய்ப்புகள் பெருகவும் எங்கு சென்றாலும் முதல் மரியாதைக் கிடைக்கவும் வாய்ப்புக் கிட்டியிருக்கும். மனைவிவழியில் உங்களைப் பற்றிய அந்தஸ்து ஒருபடி உயர்ந்திருக்கும். அறிஞர்கள், நண்பர்கள் சிலரின் கருத்துக்களை கேட்டு அதன்படி நடந்துக்கொள்வீர்கள். வேலைக்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்புவரும்.
ராகுபகவான் உங்கள் ராசிநாதனும்–அஷ்டமாதிபதியுமானசுக்கிரனின்பூரம்நட்சத்திரத்தில் 11.03.2016 முதல் 15.11.2016 வரை செல்வதால் அரைகுறையாக நின்ற வேலைகள் முடிவடையும். பழுதாகிக் கிடந்த வாகனத்தைச் சீர் செய்வீர்கள். சமையலறையை நவீனமாக்குவீர்கள். பணவரவு இருந்தாலும் ஒருபக்கம் செலவுகளும் இருந்துக்கொண்டேயிருக்கும். என்றாலும் பயணங்களால் அலைச்சல் இருக்கும். எதிர்காலம் பற்றிய பயம் வந்துப் போகும். வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும்.
கேதுவின் மகம் நட்சத்திரத்தில் 16.11.2016 முதல் 25.7.2017 வரை ராகுபகவான் செல்வதால் முன் யோசனையுடன் செயற்படுவது நல்லது. எந்த விடயமாக இருந்தாலும் ஆற அமர யோசித்துக் களம் இறங்கப் பாருங் கள்.

**மாணவ-மாணவிகளே!**
படிப்பில் மதிப்பெண் கூடும். நண்பர்களுடன் இருந்த கருத்து மோதல்கள் சரியாகும். போட்டித் தேர்வுகளில் வெற்றி உண்டு. உயர்கல்வி எதிர்பார்த்த கல்விப் பிரிவில், எதிர்பார்த்த நிறுவனத்தில் கிடைக்கும்.

**கன்னிப் பெண்களே!**
நிஜம் எது, நிழல் என்பதை தெளிவாக உணர்வீர்கள். காதல் குழப்பங்கள் நீங்கும். உயர்கல்வியில் வெற்றி கிட்டும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். திருமணத் தடைகள் நீங்கும்.

(தொடரும்)

# வீதி விபத்துச் சாவுகளைத் தடுத்து வாழ்வோம்

அரியாலையூர்
மிஷாந்தி செல்வராஜா

இன்றைய காலகட்டத்தில் எமது குடாநாட்டில் நாளுக்கு நாள் விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம்தான் என்ன? என சற்று நாம் ஆழமாகச் சிந்திப்போமாக...
விபத்து என்பது எதிர்பாராமல் நிகழும் சம்பவம் என்பது நாம் அறிந்த உண்மையே. ஆனால், எமது குடாநாட்டில் நாளுக்கு நாள் விபத்துக்கள் அதிகரித்தபடியே இருக்கின்றன என்றால் அவையெல்லாம் எதிர்பாராமல் நடக்கின்ற ஒரு சம்பவங்களா என்ன? இன்றைய விபத்துக்கள் எல்லாம் சாரதிக்குச் சாரதி போட்டி போடுதல், வீதி விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமை, அவதானமின்மை, நிதானமின்மை, வாகனம் செலுத்தும்போது கைத்தொலைபேசிப் பாவனை, புலன்களை வேறு இடத்தில் செலுத்தல் போன்ற பல்வேறு காரணிகளால் ஏற்படுபவை ஆகும். இதற்கெல்லாம் தீர்வு தான் என்ன?
சாரதிகளுக்கான அறிவுறுத்தல்கள், எழுத்துப் பரீட்சைகள், செயன்முறைப் பரீட்சைகள் எவ்வளவுதான் பயிற்சிகள் கொடுத்தாலும் பயிற்சிகளில் சித்தி பெற்று சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின் சுயமாக வாகனம் ஓட்டும்போது எல்லா விதிமுறைகளையும் மீறிவிடுகின்றோம். மறந்தும் விடுகின்றோம். நானே ராஜா, நானே மந்திரி, என்னை எவன் கேட்கப் போகின்றான்? என்ற அச்சமின்மையே இதற்குக் காரண மெனலாம். வாகனம் ஓட்டும்போது வேகத்தைக் காட்டுவது முக்கியமல்ல, விவேகத்தைக் காட்டுங்கள். உங்கள் விவேகத்தைக் காட்டி, வாகனம் ஓட்ட முயற்சி செய்யுங்கள். எமது குடாநாட்டில் சாவு என்பது விதியால் ஏற்படுவது

> இன்றைய விபத்துக்கள் எல்லாம் சாரதிக்குச் சாரதி போட்டி போடுதல், வீதி விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமை, அவதானமின்மை, நிதானமின்மை, வாகனம் செலுத்தும்போது கைத்தொலைபேசிப் பாவனை, புலன்களை வேறு இடத் தில் செலுத்தல் போன்ற பல்வேறு காரணிகளால் ஏற்படுபவையாகும்.

என்பது குறைந்து விபத்தால் அதிகரிக்கின்றது என்றால் அது பொய்யாகாது. தெருவுக்குச் சென்று பயணங்கள் செய்வதன் மூலமே எமது நாளாந்த கடமைகளை, தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடிகின்றது. தேவைகள் என்பது மனித வாழ்வில் இன்றியமையாதவை. இதனை நிவர்த்தி செய்யப் பயணங்கள் மேற்கொள்வது மிகுந்த சிரமமாக இருக்கின்றது. ஏனெனில் அவசரம். எதற்கெடுத்தாலும் அவசரம். அலுவலகத்துக்குப் போவதென்றாலும் அவசரம், ஆலயத் துக்குச் செல்வதென்றாலும் அவசரம், எல்லாவற்றுக்கும் அவசரமே காரணம். இதனைத் தடுக்க நேரம், இன்றியமையாதது. நேரவரன்முறையைப்பின்பற்றிச்செயற்பாடுகளைச் செய்வோமானால் மனித இனத்தை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம். அவசர குணத்தால் மனிதன் நிதானமிழந்து போகின் றான். சரியாகச் சிந்தித்துச் செயலாற்றத் தவறுகின்றான். சிந்தனைகளை அலை பாய விட்டு வாகனங்களை ஓட்டுதலால் தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன. மற்றும் சில இளைஞர்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியாமையாலும், வயதுக்கு மீறிய செயற்பாடுகளாலும், அளவுக்கு மீறிய வசதி வாய்ப்புக்களைப் பெற்றோர் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதாலும், குறைந்த வயதில் வாகனம் செலுத்தித் தம் உயிரையும் நீக்கித் தெருவில் பயணிக்கும் பிறரது உயிரையும் நீக்கி விடும் அளவுக்கு உடல் நசிந்து, மீறிய இரத்தப் பெருக்குடன் தெருக்களில் சாவடைகின்றனர். இவைகளெல்லாம் தேவைதானா என்ன? சாவு என்பது வீதியில் தான் என்ற எண்ணம் எமது குடாநாட்டு மக்களின் மன நிலையில் ஆழமாகப் பதிந்துள்ளதால் தெருக்களில் பயணம் செய்யப் பயம் கொள்கின்றார்கள். அதாவது தெருவோரமாக நடந்து செல்லவோ, மோட்டார் சைக்கிள்களில் பயணிக்கவோ, பேருந்துகளில் பயணிக்கவோ பின்னடிப்பதை வாகனத் தரிப்பிடங்களில் நின்று உரையாடும் மக்களின் கருத்துக்கள் மூலம் அவதானிக்க முடிகின்றது. அதாவது மினிபஸ்களில் பயணம் செய்யும் பயணிகள் ஒரு சிலர், குறிப்பிட்ட பேருந்துகளில் பயணம் செய்யப் பின்னடித்து ஏறத் தயங்குவதைக் காணலாம். ஏனெனில் குறிப்பிட்ட பேருந்துச் சாரதிகள் போட்டியாகவும், நிதானமின்மையாகவும் வாகனத்தைச் செலுத்துவார்கள் என்ற பயந்த மனோநிலையே இதற்குக் காரணமாகலாம்.
எமது நாட்டில் கடந்த வருடம் அதாவது 2015 ஆம் ஆண்டில் 2,300 வாகன விபத்துக்கள் நடந்துள்ளதாகவும், இந்த விபத்துக்களால் 2,538 பேர் உயிரிழந்துள்ளதாகவும் வீதிப் பாதுகாப்பு தொடர்பாக தேசிய சபையின் தலைவர் மருத்துவர் சிசிர கோத்தாகொட தெரிவித்துள்ளார்.
மேலும், இந்த விபத்துக்களில் 760 பேர் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர் என்றும்– 726 பாதசாரிகளும் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகரித்துச் செல்லும் வாகன விபத்துக்களால் நாளாந்தம் சரா சரியாக ஆறு ஏழு பேர்களென உயிரிழக்கின்றனர் என்றும்– காயமடைபவர்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரிக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாதனையை நிலைநாட்டும் வீதி விபத்துக்கள்

■ சேரலாதன்

குடாநாட்டின் வீதிகளில் பயணிப்பதை நினைத்தாலே குலை நடுக்கம் எடுக்கிறது. அந்த அளவுக்கு அண்மைக்காலத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்து விட்டன. மனிதர்கள் தமக்குத் தாமே அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றனர். விபத்துக்களில் சிக்கி வீதிகளில் கிடப்பவர்களைக் கண்டு கொண்ட பின்னரும்கூட இந்த அறிவுகெட்ட ஜென்மங்கள் திருந்துவதாகத் தெரியவில்லை.

முன்பெல்லாம் உயிர்களை எடுத்துச் செல்வதற்காக எமதர்மராசா எருமை வாகனத்தில் பூமிக்கு வருவதாகக் கூறுவார்கள். கருமை நிறமுடைய எருமை வாகனத்தைப் பூலோக வாசிகள் அச்சத்துடனேயே கற்பனை செய்து பார்த்துக் கொள்வார்கள். ஆனால் எமதர்மராசனையும், எருமை வாகனத்தையும் நேரில் கண்டவர்கள் எவருமில்லை. ஆனால், இன்று நவீனமாக உருவாக்கப்பட்ட யமதர்மனின் எருமை வாகனங்களில் மனிதர்கள் பயணம் செய்து தமது உயிரைத்தாமே மாய்த்துக் கொள்ளுகின்றனர்.

போருக்குப் பின்னரான காலப் பகுதியில், குடாநாட்டின் வாழ்வியலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. வசதியான வீதிகள் உருவாகியமை ஒரு புறமிருக்க, வாகனங்களும் பெருமளவில் பெருகிவிட்டன. வீட்டில் ஆளுக்கொரு வாகனத்தைப் பயன்படுத்துகின்ற நிலையொன்றும் உருவாகிவிட்டது. போர்க்காலத்தில் மனிதர்களைக் காவிச்சென்றசைக்கிள்கள் தேடுவாரற்ற நிலையில் மூலையில் முடங்கிக் கிடக்கின்றன. ஒருசிலர் இவற்றைப் பயன்படுத்தி வந்தாலும், பெரும்பாலானவர்கள் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பதையே வசதியானதாகவும், பெருமைக்குரியதாகவும் கருதுகின்றனர்.

வேலையும், தேவையும் இருக்கின்றதோ, இல்லையோ இளவயதினர் மோட்டார் சைக்கிள்களில் வீதியில் செல்பவர்கள் கலங்கும் அளவுக்கு தலைதெறிக்க ஓடித்திரிகின்றனர். காப்பெற் வீதிகளும் தோதாக அமைந்து விட்டதால், ஜெற் வேகத்தில் இவர்கள் பறக்கின்றனர். ஆனால் இங்குதான் வில்லங்கமே ஆரம்பமாகின்றது. இவர்களுக்கு மோட்டார் சைக்கிளில் வேகமாகச் செல்வதற்குத் தெரிகின்ற அளவுக்கு வீதி நடைமுறைகளும், வீதிகளின் அமைப்பு ரீதியான அறிவும் இருப்பதில்லை. தாம் மிதமிஞ்சிய வேகத்தில் செல்வதை மற்றவர்கள் பெருமையாகப் பார்ப்பதாக எண்ணி மகிழும் இவர்களால் தாம் விபத்தில் சிக்கி உயிரிழந்த நிலையிலோ படுகாயமுற்ற நிலையிலோ கிடக்கும்போது இதே ஆள்கள் பரிதாபமாகப் பார்ப்பதைத் தெரிந்து கொள்ள முடிவதில்லை.



வீதிகளின் நடுவே மஞ்சள் கோடு போடப்பட்டிருப்பதன் தாற்பரியத்தைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாகவோ அல்லது புரிந்து கொள்வதை விரும்பாதவர்களாகவோ பெரும்பாலான வாகனச் சாரதிகள் இருக்கின்றனர். இதனால் தான் மஞ்சள் கோடுகளில் நிகழ்ந்த விபத்துக்களில் நூற்றுக்கணக்கானவர்கள் உயிர்கள் இழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இது எமது நாட்டவரின் விதிகளை மதிக் காத தன்மையைத் துலாம் பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

ஆபத்தான நிலையிலுள்ள ஒருவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதில் அவசரம் காட்டத்தான் வேண்டும். ஆனால் கண்மூடித்தனமாக வாகனங்களைச் செலுத்துவதால் எதிர்மறையான பயன்களே கிடைக்கும். மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படும் போதோ அல்லது மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும்போதோ வாகன விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்புக்கள் ஏற்பட்டதையும் நாமறிவோம்.

பயணிகளை ஏற்றிச் செல்கின்ற பஸ் சாரதிகள், ஏனையவர்களைவிட அதிக கவனத்துடன் வாகனங்களைச் செலுத்துவது மிகவும் அவசியமானதாகும். ஏனென்றால் பலரது உயிர்களைக் காப்பாற்றுகின்ற பெரிய பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஓட்டிச்செல்கின்ற வாகனங்கள் ஏதாவது விபத்தில் சிக்கினால், பலர் பாதிப்புக்களுக்கு ஆளாக நேரிடும் என்பதை இவர்கள் தமது மனதில் எப்போதுமே நினைவில் வைத்திருக்க வேண்டும். ஆனால், இவர்களில்பலர்ஏனோ இதனை மனதில் கொள்வதில்லை. இதன் காரணமாகவே விபத்துக்கள் நிகழ்ந்து பாதிப்புக்களும் ஏற்பட்டு வருகின்றன.

வெளிநாடுகளுடன் ஒப்பிடும் போது, எமது நாட்டில் உள்ள வீதிகள் அகலம் குறைந்ததாகவும், தரம் குறைந்தவையாகவும் காணப்படுகின்றன. இந்த வீதிகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையான வாகனங்களே பயணிக்க முடியும். அத்துடன் வாகனங்கள் செலுத்தப்படுகின்ற வேகமும் மட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆனால், இங்கு எதுவுமே கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படாத நிலையில், தமது விருப்புக்கு ஏற்றாற்போன்று வாகனங்கள் செலுத்தப்படுகின்றன. இதுவும் விபத்துக்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணமாகும்.

இதைவிட முக்கியமான ஒரு விடயத்தை இங்கு கட்டாயமாகக் குறிப்பிட்டாக வேண்டும். வளர்ச்சியடைந்த நாடுகளில் ஓரளவு பழுதடைந்த நிலையில் காணப்படுகின்ற வாகனங்கள் சேவையிலிருந்து நிறுத்தி வைக்கப்படுகின்றன. அங்கு வாகனங்களுக்குத் தரச் சான்றிதழ் வழங்கும் நடைமுறை மிகவும் இறுக்கமான வகையில் கடைப்பிடிக்கப்படுகின்றது. இதனால் நல்ல நிலையில் உள்ள வாகனங்களே வீதிகளில் பயணிக்கின்றன. எமது நாட்டைப் பொறுத்தவரையில் இதற்கு முற்றிலும் எதிர்மறையான நிலையே காணப்படுகின்றது. இயந்திரம் பழுதாகி, கரும்புகையைக் கக்கியவாறு ஏராளமான வாகனங்கள் எமது வீதிகளில் சுதந்திரமாக ஓடித் திரிகின்றன. இவற்றினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது மட்டுமன்றி வீதிகளில் பயணிப்பவர்களின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை காணப்படுகின்றது. வெளியில் செல்பவர்கள் ஒழுங்காக வீடுதிரும்புவார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் காணப்படவில்லை. வீதிகளில்செல்லும்மக்கள்வாகனங்களை அச்சத்துடன் பார்க்க வேண்டியுள்ளது. இந்த நிலை நீடித்துக் கொண்டசென்றால் உலகிலேயே வீதி விபத்துக்களில்அதிகமாகஉயிரிழப்பவர்கள் என்ற சாதனை நாட்டில் நிலைநாட்டப்பட்டுவிடும். ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்திணை – மருதம்



"வணக்கம் குழந்தைகளே! நான்தான் மருத மலர்."

மரத்தின் கிளைகளில் கொத்துக் கொத்தாய் இளம் சிவப்பு நிறத்தில் மருத மலர்கள் பூத்திருந்தன. அந்த மரத்தையோ அல்லது அதன் மலர்களையோ இதற்கு முன்னர் பசுமைப் பாடசாலையின் குழந்தைகள் பார்த்ததே இல்லை.

மாசில் என்கிற சிறுவன் கேட்டான். "மருத மரமே! உன்னில் பலவகை உண்டு என்கிறார்களே! நீ எந்த வகை மருத மரம்?"

"என் பெயர் பூமருது. மருத மரத்தில் பல வகைகள் இருந்தாலும் மருதத் திணைக்குரிய மருத மரம் நான்தான்."

"நானும் மருத நிலத்துக் குழந்தைதான். ஆனால், நான் இதுவரை உன்னைப் பார்த்ததே இல்லையே'' என்றான் மாசில்.

என்ன செய்வது, மருத மரங்கள் அழிந்து வருகின்றன. மருதத் திணையில் முன்பு நீர்மருது மரங்கள் நிறைய இருந்தன. என்னை அழகு மரமாக வளர்ப்பதால், இப்படி எங்காவது ஒன்றிரண்டு பிழைத்துக் கிடக்கிறேன். இன்றைக்குவயல்களுக்கேவாழ்வில்லை. இதில் என்னை மட்டும் எப்படி வாழ வைப்பார்கள்? மருத மரங்கள் நிறைந்திருந்த அந்தக் காலத்தில், வயல்கள் எல்லாம் எப்படி இருந்தன தெரியுமா?"

"எப்படி இருந்தன? எப்படி இருந்தன?" குழந்தைகள் ஆர்வத்துடன் கேட்டனர்.

"அப்போது வயல்களே ஒரு பல்லுயிர் (Biodiversity) மண்டலமாக இருந்தன. வயல்களில் நிரம்பிய நீரில் நன்னீர் மீன்கள் வாழ்ந்தன. அதிலிருந்த உளுவை போன்ற சில மீன் வகைகளை, இப்போது பார்க்கவே முடியவில்லை. நண்டு, நத்தை போன்ற உயிரினங்களும் இருந்தன. இவற்றைத் தின்ன வரும் பறவைகளால், வயல்கள் நிரம்பியிருக்கும். வெளிநாடுகளிலிருந்து வலசைவரும் விருந்தாளிப் பறவைகளும் இவற்றில் அடக்கம். சங்க காலத்தில் வயலில் அல்லி மலர்கள் கூடப் பூக்கும் அளவுக்கு, மருதம் செழுமையாக இருந்திருக்கிறது."

"பின்னர் என்ன ஆயிற்று?"

வளமான வயலில் செயற்கை வேதியல் (இரசாயண) உப்புகளைக் (உரங்களைக்) கொட்டிப் பயிர் செய்யத் தொடங்கினார்கள். இதனால் மண்ணில் இருந்த மண்புழுக்களும் நுண்ணுயிர்களும் அழிந்தன. பிறகு பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை அழிப்பதற்காகப் பூச்சிக் கொல்லியைத் தெளித்தார்கள். இதனால் மருத நிலத்தின் உயிர்ச் சூழலே அழிந்துவிட்டது. மனிதர்கள் செய்த இந்தச் செயல், இன்று மனிதர்களையே திரும்பப் பழிவாங்கிக் கொண்டிருக்கிறது."

"எப்படி?" என்று கேட்டான் மாசில்.

"வேதி உரங்கள், பூச்சிக்கொல்லிகளால் உணவு நஞ்சாகிவிட்டது. நிலத்தடி நீரும் நஞ்சாகிவிட்டது. குடிதண்ணீரில் நைட்ரேட்டின் அளவு அதிகமாகி, மனிதர்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டு நிரந்தர நோயாளிகளாகி வருகின்றனர்."

மருத மலர் மேலும் கேட்டது, "இப்போது சொல்லுங்கள் குழந்தைகளே! இன்று மருதத் திணை என்றால், அது வயலும் வயலைச் சார்ந்த இடமுமா?"

"இல்லை, இல்லை" என வெறுமையுடன் தலையசைத்தனர் குழந்தைகள். "இயற்கை வேளாண்மை செய்வோம். எமக்கு உணவளிக்கும் விளைநிலங்களைக் காப்போம்'' என்றும் உறுதியெடுத்துக்கொண்டனர்.

# ஐசக் நியூட்டன்



1642 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி பிறந்த ஐசக் நியூட்டன் சிறு வயதிலேயே கதிரவனின் நிலையைக் கொண்டு சரியான நேரத்தைக் கூறுவதில் வல்லவராக இருந்தார். இயற்கையின் அதிசயங்களைப் பார்த்து அதிசயித்து அவற்றிலேயே இலயித்து மணிக் கணக்கில் நேரத்தைச் செலவிட்டார். ஈர்ப்புக்கான அவரது விளக்கமும் ஈர்ப்பு விதிக்கான கணிதச் சமன்பாடும், அவரது இயக்க விதிகளும் ஒன்று சேர்ந்து பிரபஞ்சத்தின் அமைப்பையும் வான் பொருள்களின் இயக்கங்களுக்கான புதிய விளக்கத்தையும் தந்துவிட்டன.

அவர் 82 ஆண்டுகள் வாழ்ந்து பல புதிய கண்டு பிடிப்புக்களை இந்த உலகத்துக்கு அளித்தார்.



# வரலாற்றில் இன்றைய தினம்

1861 – இத்தாலியில் முடியாட்சி அறிவிக்கப்பட்டது.

1891 – எஸ்.எஸ்.உத்தோப்பியா கப்பல் எச்.எம்.எஸ். அன்சனுடன் மோதி விபத்துக்குள்ளாகி மூழ்கி 880 பயணிகளில் 562 பேர் சாவு.

1942 – கிழக்கு போலந்திலுள்ள பெல்சேஷக் மரண முகாமில் முதன் முதலாக யூதர்கள் நச்சு வாயு செலுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

1947 – ப-45 குண்டு வீச்சு விமானம் ரொர்னாடோ கன்னிப் பறப்பு.

1948 – நேட்டோ ஸ்தாபிதத்துக்கு முன்னோடியான புரூஸல் ஒப்பந்தத்தில் பிரான்ஸும், ஐக்கிய ராச்சியமும் கைச்சாத்து.

1957 – செபு.பிலிப்பைன்ஸ் விமான விபத்தில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி றேமன் மக்ஸேசேயும் மற்றும் 24 பேரும் சாவு.

1963 – பாலியில் அகுனா எரிமலை வெடித்து 11000 பேருக்கு மேல் சாவு.

1966 – ஸ்பெயினுக்கு அப்பால் மெடிற்றேனியன் கடற்பகுதியில் டி.எஸ்.வி அல்வின் நீர்மூழ்கிக் கப்பல் அமெரிக்காவால் தவறவிடப்பட்ட ஐதரசன் குண்டைக் கண்டுபிடித்தது.

1968 – நரம்புகளைத் தாக்கும் வாயுப் பரிசோதனையின் காரணமாக உத்தாஸ்கல் பள்ளத்தாக்கில் 600 ஆடுகள் இறந்து காணப்பட்டன.

1969 – இஸ்ரேலின் முதல் பெண் பிரதமரானார் கோல்டா மேயர்.

1970 – மைலாய் படுகொலைச் சம்பவம் தொடர்பான செய்திகளை மறைத்தமைக்காக 14இராணுவ படையினர் மீது அமெரிக்கா குற்றச்சாட்டு முன்வைப்பு.

1988 – வெனிசுவேலா எல்லைக்கருகில் கொலம்பிய போயிங் விமானம் 727, மலையில் மோதியதில் 143 பேர் சாவு.

1988 – வளைகுடாப் போரில் ஆயிரம் வரையிலான ஈராக்கிய வீரர்கள் சாவு அல்லது காயம்.

1992 – தென் ஆபிரிக்காவில் இனப்பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவரும் கருத்துக் கணிப்பு. பொதுசன வாக்கெடுப்பில் ஆதரவாக 58.7 வீதமும் எதிராக31.2 வீதமும் வாக்களிப்பு.

2002 – உலகின் சிறந்த தலைவராக தலாய்லாமா தெரிவானார்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் சேவை தரம் III க்கான நியமனம்

இளங்குமரன்
மானிப்பாய்.

கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமான அதிபர் சேவை தரம் III க்கான நேர் முகப் பரீட்சைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையில் இடம் பெற உள்ளன. இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்று வதற்குத் தகைமை பெற்றவர்களில் ஆசிரியர் சேவையில் தரம் 3-I தரம் 2II இல் உள்ளவர் கள் நன்மையடையக்கூடியதாக இருக்கும் நிலையில் ஆசிரியர் சேவையில் தரம் 2I, தரம் 1 ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்குப் பாதக மான நிலை உள்ளமை கவனிக்கத்தக் கது. அரச நிர்வாக சுற்றறிக்கை 03/20'6 இல் நியமனத்தின்போதும் மற்றும் பதவி உயர்வு பெற்றிருந்தால் கிடைக்கும் சம்பளப் படிநிலை கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை (SLPS) ஆனது பொதுச் சேவைகளின் சம்பளக் கட்டமைப்பில் GE4-2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி 01.01.2016இன் பின் நியமனம் பெறும் அல்லது பதவியுயர்வு பெறும் தரம் III அதிபருடைய அடிப்படைச் சம்பளமாக 35,280/= குறிப்பிடப்பட்டுள்ளது. இது 01.01. 2020 இலேயே வழங்கப்படவுள்ளது. இதே சம யம் 01.01.2020 இல் ஆசிரியர் சேவை 2I இல் உள்ள ஒருவருடைய அடிப் படைச் சம்பளமாக 39,175/= குறிப்பிடப் பட்டுள்ளது. இலங்கை ஆசிரியர் சேவையின் SLTS தரங்கள் 2II, 2-I, என்பவை பொதுச் சேவை களின் சம்பளக் கட்டமைப்பில் GE-2-2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய ஆசிரியர் சேவை 2-I மற்றும் தரங்களில் உள்ளவர்கள் அதிபர் சேவை தரம் III ஐப் பொறுப்பெடுக்கும்போது பொருளாதார ரீதி யான சுரண்டலை எதிர்கொள்ள நேரிடும். இது ஒரு கீழுழைப்பு (Under Employment) நிலையை உருவாக்கும்.

இவ்வாறான நிலை 2009 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அதிபர் சேவை தரம் III இனை பெற்றுக் கொண்டவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆசிரியர் சேவையில் ஒரே திகதியில் 1999 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற இருவரில் ஒருவர் தரம் III அதிபர் சேவையை ஏற்காமல் தொடர்ந்தும் ஆசிரியர் சேவையில் கடமை யாற்றி தற்போது அடிப்படைச் சம்பளமாக 20600/= இனைப் பெற்றுக் கொண்டு வரு கிறார்.

அதே சமயம் அதிபர் சேவை தரம் III இனைப் பொறுப்பெடுத்த மற்றவர், தற்போது 18845/= இனையே அடிப்படைச் சம்பளமாகப் பெறக்கூடியதாக உள்ளது. அரச சேவையில் சம்பளங்களின் திருத்தமானது 2020ஆம் ஆண்டிலேயே முழுமை அடையும். அது வரையிலும் வேறு வகையிலான சம்பள அதி கரிப்பு சாத்தியப்பட முடியாது. எனவே 2020 ஆண்டுக்கு முன்னர் ஆசிரியர் சேவையில் தரம்I, தரம் 2I ஆகிய பதவி உயர்வுகளைப் பெறக்கூடிய நிலையில் உள்ளவர்கள் அதிபர் சேவை தரம் III நியமனத்தைப் பெற்றுக் கொள்வது பொருளாதார ரீதியிலான பாதிப் புக்களை ஏற்படுத்தும். அதிபர் சேவையில் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை, இரண்டாம் மொழியில் சித்தி, பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா சித்தியடைதல் போன்ற ஏனைய தேவைப்பாடுகளையும் நிறைவேற்றும் இடத்திலேயே பதவியுயர்வு சாத்தியம் .

தற்போது ஆசிரியர் சேவையில் உள்ள ஒருவர் ஓய்வுபெறும் வரையில் கடமையாற்றி 71,650/= இன்ன அடிப்படைச் சம்பளமாக பெறும் வாய்ப்புள்ள நிலையில், அதிபர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டு, ஓய்வுபெறும்போது 57,005/= என்ற அடிப்படைச் சம்பளப் படிநிலையுடன் ஓய்வுபெற வேண்டிய நிலைமை காணப்படுகிறது. இதன் மூலம் ஓய்வு 14650/= மேற்பட்ட தொகையை இழப்பாக ஏற் படுத்தும். குறைந்த வேதனத்துடன் அதிக அழுத்தத்துடன் மேலதிகமான வேலைப்பளுவைச் சுமக்க வேண்டிய நிலையானது மன உளைச்சலை ஏற்படுத்தும் . இந்த நிலைமையின் சாதக, பாதகங்களை இது தொடர்பாக துறைசார்ந்த நிபுணர்கள், நிர்வாக அதிகாரிகள், அதிபர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள் தெளிவு படுத்துவது ஆசிரியர் சேவையில் சேவைமூப் பில் இருந்து அதிபர் சேவைக்கு செல்ல எத் தனிப்போருக்கு ஒரு சிறந்த வழிகாட்டுதலாக அமையும்.

## கடந்து வந்த பாதையில் நான் எங்கே இருக்கிறேன்?




தவக்காலம் தொடங்கி விட்டால் நாற்பது நாள் கள் உப வாசம் இருப்பதும், திருச்சிலு வைப் பாதை சுற்றுவதும், திருத்தல யாத்திரைகளை, மேற்கொள்வதும், மது அருந்தும் பழக்கம் உடையவர்கள் அதை அருந்தாமல் விட்டுவிடு வதும் என சில வரையறைகளை எமக்குள் வகுத்து வைத்திருக்கின்றோம். இவை அனைத் தும் பாரம்பரியம் தொட்டு எமக்கு பழக்கப்பட்ட தாகிவிட்டன. ஆனால் இவையெல்லாம் உயிர்ப்பு ஞாயிறுடன் சரி. பின்னர் நாம் பழைய படி எப்படியும் வாழலாம் என்ற எண்ணத் துடன் வாழ்கின்றோம்.தவக்காலம் அருளின் காலம். மனமாற்றத்தின் காலம். இறை இரக்கத்தின் அன்பைச் சுவைக்கின்ற காலம். ஒப்புரவின் காலம். இந்தக் காலத்தில் நாம் உண்மை யாகவே செய்ய வேண்டியது என்ன? எங்களு டைய கடந்த கால வாழ்க்கையை ஒருமுறை அலசிப்பார்க்க வேண்டும். கிறிஸ்தவன் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற நான் அதற் கேற்றபடி வாழ்கின்றேனா?

நான், எனது, எனக்கு மட்டும் என்ற குறுகிய வட்டத்துக்குள் வரட்டுக் கௌரவம் பிடித்தவர் களாய் வாழும் எங்களுக்கு எமக்கு அடுத்தி ருப்பவர்களின் துன்பங்கள் தெரிவதில்லை. எமது சிந்தனை, சொல், செயல்களினால் எத் தனை சகோதர சகோதரிகளின் நற்பெயரைக் கெடுத்து அவர்களின் வாழ்வைச் சின்னா பின்ன மாக்கி நடைப்பிணங்களாக்கி இருக் கின்றோம். எனது குடும்பத்தை விட அயல் விட்டார் முன்னே றக் கூடாது. என் வீட்டுப் பிரச்சினைகளைப் பார்ப்பதிலும் அடுத்தவர் வீட்டுக்காரியங்களிலே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றோம்.

கண்ணாடி வீட்டில் வாழுவோர் கவனமாய் இருக்க வேண்டும் என்பதை மறந்து விடுகின் றோம். துன்பத் தைக் குறைப்பதற்குப் பதிலாக அவர்களுடைய முகத்தையே உருக் குலைக்கின்றோம்.

இவற்றுக்கெல்லாம் கார ணம் எம்மில் குடி கொண்டிருக்கும் ஊனியல் பின்செயற்பாடுகள் அல்லவா? ஏனெனில் ஊனி யல்பின் செயற்பாடுகள் மேலோங்கி நிற்கும் போது, ஆவியானவரின் செயற்பாடுகளுக்கு இடமேது? உன்னை நீ அன்பு செய்வது போல உனக்கு அடுத்திருப்பவனையும் அன்பு செய் என்ற கட்டளையை எம்வாழ்வில் கடைப்பிடிக்கி றோமா? கண்ணால் காணும் மனிதனை அன்புசெய்யாமல் புலன்களுக்கு அப்பால் இருக் கும் கடவுளை எப்படி அன்பு செய்யமுடியும்? சின்னஞ்சிறிய சகோதரர்களுக்கு எவற்றை யெல்லாம் நாம் செய்யவில்லையோ அவை யெல்லாம் இயேசுவுக்கே செய்யவில்லை என்பதை உணருவோம்.

பசித்திருப்பவனுக்கு உணவு கொடுப்பதும். ஆடையின்றி இருப்பவனுக்கு ஆடைகொடுப் பதும், சிறையில் வாடுவோரைச் சந்தித்து ஆறு தல் அளிப்பதும் என இப்படியாக இரக்கச் செயல் கள் பல இருக்கின்றன. இரக்கத்தின் ஆண்டில் பயணிக்கின்ற நாம் இரக்கச் செயல்களிலே ஈடுபடுவோம். ஏழைகள், அனாதைகள், ஊன முற்றோர், நோயினால் துன்புறுவோர், சிறை யில் வாடுவோர் இவர்கள் மட்டில் அன்பும் இரக்கமும் கரிசனையும் உள்ளவர்களாய் அவர் களின் துன்பத்தைத் துடைக்க முன்வருவோம். இதுவே உண்மையான உபவாசத்தின் பலா பலனாக மாறும். ஒவ்வொரு மனிதனும் என் நண்பன், ஒவ்வொரு மனிதனும் என் சகோ தரன் என்ற உணர்வுடன் எமக்கு அடுத்திருப் பவரிலே இயேசுவைக் காண இன்றே முற் படுவோம்.

மரியதி, கொழும்புத்துறை

# நிறைவேற்ற வேண்டியவை இன்னமும் நிறையவே உள்ளன

மைத்திரி - ரணில் அரசு பதவியேற்ற போது தமிழ் மற் றும் தமிழ் பேசும் மக்களுக்கு ஏராளமான எதிர்பார்ப் புகள் இருந்தன. தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கம், அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களிடமிருந்து இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட காணிகளை மீளப் பெறுதல் போன்றவற்றைஇவற்றில் குறிப்பிடத்தக் கவை. தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் சில முன் னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ள போதிலும் சிறிய எண்ணிக்கை யானோர் மட்டுமே பிணையில் வெளியே வந்துள்ள னர். ஏனையோர் இன்னமும் சிறைக்குள்தான் இருக்கிறார்கள். பிணையில் உள்ளோரும் நீதிமன்ற விசாரணைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இவர்கள் மீதான விசாரணையின் பின்னர் இவர்கள் மீண்டும் சிறையில் அடைக்கப்படக்கூடிய சாத்தி யங்கள் உள்ளன. ஆகவே தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் அரசு மேற்கொண் டிருப்பது ஒரு கண்துடைப்பு நட்வடிக்கையே.

போர்க் காலத்தில் இராணுவத்தால் கையகப்படுத் தப்பட்ட காணிகளை அவற்றின் உரிமையாளர்களி டம் ஒப்படைக்கும் நடவடிக்கைகளும் முழுமை பெறவில்லை. தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றுக்கு உட்பட்ட இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 700 ஏக்கர் காணி மற் றும் நடேஸ்வராக் கல்லூரி, நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம் ஆகியவை கடந்த சனிக்கிழமை ஜனா திபதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின்போது அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட் டன. வலி வடக்கில் இன்னமும் 4,700 ஏக்கர் காணி இராணுவத்தின் வசம் உள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் இந்த அரசு பதவி ஏற்ற நாளில் இருந்து விடுவிக்கப்பட்டு வருகிறது.

எந்தவித குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படாது முழுக்க முழுக்க சந்தேகத்தின் அடிப்படையில் தமிழ் இளைஞர்கள் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருப்பது பயரங்கரவாதத் தடைச்சட் டத்தின் கீழ்தான். ஜே.ஆர். ஜெயவர்த் தனவின் ஆட் சிக் காலத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட் டத்தை நசுக்கும் நோக்கத்துடன் 1978 ஆம் ஆண்டு இந்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. தற்பொழுது 38 வருடங்கள் கழிந்த நிலையில், போர் முடிவடைந்து ஏழு வருடங்கள் நிறைவடைய வுள்ள நிலையில் இந்தச் சட்டம் இன்னமும் நடை முறையில் இருப் பது எந்த வகையி லும் நியாயமான தாக இருக்கமுடி யாது.




பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு அரசசார்பற்ற நிறு வனங்களும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் கோரியுள்ளன. அப்படி இருந்தும் அரசுக்கு இதனை ரத்துச்செய்யும் நோக்கம் இல்லை. இதற்குப் பதி லாக பிரிட்டன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் போன்று அல்லது அமெரிக்காவில் நடைமுறையில் உள்ள தேசப் பற்றுச் சட்டம் போன்றதொரு சட்டத்தை உருவாக்குவதே ஆட்சியாளர்களின் நோக்கம். அதாவது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவது இவர்களின் நோக்கம் அல்ல. பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ன தேவைக்காகக் கொண்டு வரப்பட்டதோ, அந்தத் தேவை தற்பொழுது இல் லாமல் போன காரணத்தால் அந்தச் சட்டம் முற் றாக நீக்கப்படவேண்டும். இதனை முற்றாக நீக்குவதன் மூலம் தமிழ் மக்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் நல்லெண்ணத்தை அரசுபெற்றுக்கொள் ளக் கூடியதாக இருக்கும்.

கடந்த சனிக்கிழமை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் உரைநிகழ்த்திய வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பயங்காரவாதத் தடைச்சட்டத்தை தாமதமின்றி இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அரசு சாதகமாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபாரத்தில், தாராள வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். ஆரோக்கியம் பலம் பெறும்..

**இடபம்:** அடுத்தவர் விடயத்தில், கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், இடையூறு குறுக்கிடலாம். மிதமான இலாபம் கிடைக்கும். நண்பரின் ஆறுதல் வார்த்தைகள் நம்பிக்கைக்கு வழிவகுக்கும்.

**மிதுனம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில், தடையை முறியடிக்க புதிய அணுகுமுறையைப் பின்பற்றுவீர்கள். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்

**கடகம்:** கடந்த கால முயற்சிக்கான பயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், போட்டி குறுக்கிட்டாலும் இலாபம் குறையாது. பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது.

**சிங்கம்:** உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அமோக வளர்ச்சி உண்டாகும். இலாபம் உயரும். இயன்ற அளவில் தானதர்மம் செய்வீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கன்னி:** நற்செயலுக்கான நன்மை தேடி வரும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் படிப்படியாக உயரும். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். அக்கம்பக்கத்தினரின் உதவி கிடைக்கும்.

**துலாம்:** எதிலும் விடாமுயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில், போட்டி உருவாகும். இலாபம் சுமார். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடலாம்.

**விருச்சிகம்:** உங்களின் கவனக்குறைவால், பிரச்சினை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள், பணம், நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**தனுசு:** எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் மறைவர். தொழில், வியாபார இலக்கு, எளிதில் நிறைவேறும். வருமானம் படிப்படியாக உயரும். குடும்பத்தினருடன் விருந்து உண்டு மகிழ்வீர்கள்.

**மகரம்:** எதிரிகளின் கெடுசெயலை சமயோசிதமாக மாற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், பணவரவு திருப்திகரமாகும். உறவினர்களின் வருகையால், மகிழ்ச்சி கூடும். பெண்கள், கணவரின் அன்பைப் பெறுவர்.

**கும்பம்:** எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில், பணிச்சுமை அதிகரிக்கும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள், பெற்றோரின் அன்பைப் பெறுவர்.

**மீனம்:** உறவினர்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். விடாமுயற்சியால் தொழில், வியாபார இலக்கு பூர்த்தியாகும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

ஆங்கிலத்தில் Complete
இற்கும் Finished
இற்கும் உள்ள வித்தியாசம் என்ன ?
**பதில் :** நீங்கள் ஒரு பெண்ணை காதலித்தால்,
உங்கள் வாழ்க்கை COMPLETE
அதுவே, நீங்கள் அந்த பெண்ணை திருமணம் செய்தால்
உங்கள் வாழ்க்கை FINISHED
அதுவே, அந்தப் பெண், நீங்கள் இன்னொரு பெண்ணுடன் சிரித்து பேசுவதை பார்த்து விட்டால்
உங்கள் வாழ்க்கை Completely
Finished

WhatsApp





# முன்னிலையில் நயன்தாரா

சினிமாவில் ஆணாதிக்கம் தளர்ந்து, கதாநாயகர்களுக்கு இணையாக கதாநாயகிகளும் கொடி கட்டிப் பறக்கிறார்கள். அவர்களை முன்னிலைப் படுத்தும் கதை அம்சங்களுடன் நிறைய படங்கள் வருகின்றன. அந்தப் படங்களும் முன்னணி கதாநா யகர்கள் படங்களை வசூலில் வீழ்த்தி சக்கைபோடு போடுகின்றன. இதனால் கதாநாயகிகள் சம்பளத்தைக் கணிசமாக உயர்த்தி இருக்கிறார்கள். ஒரு காலத்தில் ஒரு கோடி ரூபா என்பது கதாநாயகிகளின் அதிகபட்சச் சம்பளமாக இருந்தது. ஆனால், தற்போது அது பல மடங்காக உயர்ந்து இருக்கிறது. அதிக சம்பளம் வாங்கும் கதாநாயகிகள் பட்டியலில் நயன்தாரா தொடர்ந்து முதல் இடத்தில் இருக்கிறார். தமிழ், தெலுங்கு இரண்டிலுமே இவரது படங்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதனால் நயன்தாரா தனது சம்பளத்தைக் குறைந்த பட்சம் ரூபா 3 கோடியாக நிர்ணயித்து இருக்கிறார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 8 | | | | |
| | | 4 | 7 | | | | | |
| 3 | | 8 | 5 | | | | | |
| | | 5 | | | 2 | | | 4 |
| 8 | | 9 | 6 | | | | | 2 |
| | 4 | | | 3 | | | | |
| | 8 | 1 | | | | | | 9 |
| | 2 | 3 | | 9 | | 6 | | |
| | | 7 | | | | 8 | 1 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 7 | 1 | 2 | 5 | 6 | 8 | 4 |
| 8 | 2 | 1 | 4 | 9 | 6 | 5 | 7 | 3 |
| 6 | 5 | 4 | 8 | 3 | 7 | 2 | 1 | 9 |
| 5 | 1 | 8 | 3 | 7 | 2 | 9 | 4 | 6 |
| 4 | 3 | 9 | 6 | 1 | 8 | 7 | 5 | 2 |
| 2 | 7 | 6 | 9 | 5 | 4 | 8 | 3 | 1 |
| 9 | 4 | 5 | 2 | 8 | 1 | 3 | 6 | 7 |
| 1 | 8 | 3 | 7 | 6 | 9 | 4 | 2 | 5 |
| 7 | 6 | 2 | 5 | 4 | 3 | 1 | 9 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



**நிலாக்காதலன்(vetu)** @sesavel12
கோபம் முட்டாளுக்குக் கூட வரும். அந்தக் கோபத்திலும் பதிலைத் தேடுபவன் ஞானியாகின்றான்.



**சிந்தனைவாதி** @PARITHITAM
ஆசைகளைத் துறந்தவன் மட்டுமே ஞானி அல்ல. எதுவும் இல்லாதவனும் கூட ஞானி தான்.










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 40 | 40 | 40 | 40 | 30 | 25 | 25 |
| கத்தரி | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 70 | 90 |
| கரட் | 100 | 100 | 200 | 100 | 120 | 160 | 70 | 130 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 40 | 60 | 35 | 45 |
| பயிற்றை | 40 | 80 | 50 | 50 | 60 | 60 | 40 | 50 |
| பாகல் | 150 | 120 | 140 | 140 | 100 | 120 | 100 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | 70 | 80 | – | 60 | 120 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 70 | 80 | 70 | 80 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 50 | 70 | 60 | 90 | 75 | 60 |
| பூசணி | 60 | 40 | 40 | 50 | 40 | 60 | 35 | 30 |
| தக்காளி | 20 | 40 | 30 | 50 | 30 | 40 | 25 | 30 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 30 |
| கீரை | 40 | 40 | 40 | 15 | 30 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 35 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 140 | 140 | 140 | 140 | 200 | 120 | 140 |
| புடோல் | 40 | 60 | 60 | 50 | 60 | 60 | 35 | 45 |
| கோவா | 50 | 50 | 60 | 50 | 50 | 60 | 35 | 45 |
| வெண்டி | 60 | 80 | 50 | 60 | 80 | 80 | 60 | 50 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 140 | 100 | 120 | 35 | 90 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 140 | 80 | 160 | 70 | 90 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 70 | 80 | 65 | 120 |
| தேசிக்காய் | 150 | 120 | 160 | 80 | 100 | 40 | 90 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 120 | 120 | 160 | 100 | 120 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 140 | 140 | 140 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 300 | 300 | 400 | 350 | 180 |
| பனங்கிழங்கு | 05 | 04 | 05 | 02 | 05 | – | 03 | – |




## குடைவெட்டு ரொப்

கொலர் வைத்த குடைவெட்டு ரொப்கள் அறிமுகமாகியுள்ளன. நீளக்கையுடன் நாகரிகமாக இவை இருப்பதுடன், பற்றிக் கொட்டன் துணியில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 1,800ரூபாவில் இருந்து 2,000 ரூபா ஆகும்.

# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 500 | 600 | 600 | 700 | 600 | 650 | 700 |
| நண்டு | 200 | 500 | 300 | 400 | 300 | 100 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 650 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 600 | 600 | 450 |
| சுறா | 500 | 500 | 600 | 800 | 700 | – | 700 |
| சீலா | 250 | 400 | 400 | 450 | 450 | 400 | 400 |
| விளை | 600 | 500 | 400 | 500 | 500 | 300 | 400 |
| முரல் | 250 | 350 | 350 | 400 | 300 | 300 | 350 |
| கும்பிளா | 300 | 350 | 300 | 400 | 450 | 500 | 300 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 400 | 400 | – |
| ஒரா | 300 | 350 | – | – | 300 | 400 | – |
| திரளி | 200 | 300 | 200 | 200 | 250 | 300 | 300 |
| நகரை | 150 | 300 | – | 200 | 300 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | 100 |
| ஒட்டி | 250 | 250 | 150 | 250 | 200 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | 200 | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | 300 | 250 | 300 | 220 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 120 | 100 | – |
| பாலை | 350 | 200 | 250 | 350 | 400 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | 350 | 350 | 250 | 350 |

# வாழைக்காய் பரோட்டா

**தேவையான பொருள்கள்:**

கோதுமை மா – 2 கப்
வாழைக்காய் – 1 பெரியது
உருளைக்கிழங்கு – 1 பெரியது
வெங்காயம் – 1
இஞ்சி – 1 துண்டு
பச்சை மிளகாய் – 4
மஞ்சள் தூள் – கால் கரண்டி
கொத்துமல்லித் தூள் – 1 கரண்டி
மசாலாத்தூள் – அரைக்கரண்டி
உப்பு – தேவையான அளவு
எண்ணெய் – 2 கரண்டி
நெய் – தேவையான அளவு

**செய்முறை:**

கோதுமை மாவில் சிறிது உப்புச் சேர்த்து எண்ணெய் விட்டுப் பிசறி தேவையான தண்ணீர் விட்டுப் பிசையவும்.
45 நிமிடங்கள் ஊற விடவும்.
வாழைக்காயையும், உருளைக் கிழங்கையும் வேகவிட்டு தோலுரித்து நன்கு மசிக்கவும்.
வெங்காயத்தை அரிந்து அதனுடன் பச்சை மிளகாய், இஞ்சி ஆகியவற்றை நன்கு அரைத்துக் கொள்ளவும்.
எண்ணெயைக் காயவைத்து அதில் அரைத்த விழுதையும், மற்றப் பொடிகளையும் நன்கு வதக்கி அத்துடன் மசித்த காய்கறிகளையும் உப்பையும் சேர்த்து நன்கு கிளறவும்.
மாவைஎலுமிச்சை அளவு உருண்டைகளாக்கி கை அளவில் ரொட்டிகளாகத் தட்டவும்.



ரொட்டிக்குள் ஆறிய வாழைக்காய், கிழங்கு விழுதை வைத்து ஓரங்களை ஒன்று சேர்த்து ஒட்டி, அதன் மீது மா தூவி சற்றுக் கனமான பரோட்டாவாக இடவும்.
சூடான தோசைக்கல்லில் பரோட்டோவைப் போட்டு இருபுறமும் வேக விடவும்.
பிறகு நெய் விட்டு நன்கு பொன்னிறமாகும்வரை வாட்டி எடுக்கவும்.

**நாளை**
பங்குனி -05
வெள்ளிக்கிழமை
18.03.2016
திதி: தசமி
பி.ப.01.44 வரை
நட்சத்திரம்: புனர்பூசம்
பி.ப.12.18 வரை
ராகுகாலம்:
10.48-012.18 வரை
சுபநேரம்:
06.18-07.48 வரை

## காய்கறிகளைப் பாதுகாக்க...

வாங்கிய காய்கறிகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு விதமாகப் பாதுகாக்க வேண்டும்.
அதுவும் குளிர்சாதனப் பெட்டிக்குள் வைப்பதாக இருந்தால் அனைத்துக் காய்கறிகளையும் ஒரே கூடை யில் கொட்டி மூடி வைக்கக் கூடாது.
காய்கறிகளுடன் தக்காளியை எப்போதும் வைக்காதீர்கள். தக்காளியை ஒரு பொலித்தீன் கவரில் போட்டுக் கட்டி அதனை ஒரு எவர்சில்வர் பாத்திரத்தில் வைத்து குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்தால் அதிக நாள்கள் பழுதடையாமல் இருக்கும். பொலித்தீன் கவரில் மட்டும் போட்டுவைத்தால் மற்றப் பொருள்களின் இடிபாடுகளில் தக்காளி பழுதாகிவிடும்.
பச்சை மிளகாயை அதன் காம்புகளை நீக்கிவிட்டு வைத்தால் அதிக நாள்கள் கெடாமல் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்.எல்.ரி. மொபிடெல் நிறுவனத்துடன் கைகோர்த்த இலங்கை சத்தோச நிறுவனம்



இலங்கையின் தேசிய கையடக்க தொலைப்பேசி சேவை வழங்குநரான எஸ்.எல்.ரி மொபிடெல் நிறுவனத்தின் mCash சேவை, வர்த்தக மற்றும் சில்லறை வர்த்தக வலையமைப்பை இலங்கை சதோச நிறுவனத்துடன் இணைந்து விஸ்தரித்துள்ளது.

இதன் மூலம் தமது வாடிக்கையாளர்களுக்கு பணம் வைப்பு, மீளம்பெறுதல் மட்டுமின்றி, சேவை கட்டணப்பட்டியல்களுக்கான பணம் செலுத்துதல், காப்புறுதிக் கட்டணம், குத்தகைக் கட்டணங்கள் மற்றும் பொருள்கள் சேவைகளைக் கொள்வனவு செய்தல் போன்ற பல சேவைகளை ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஒப்பந்தத்தின் விளைவாக mCash வாடிக்கையாளர்கள் மட்டுமின்றி எந்தவொரு வாடிக்கையாளரும் நாடுமுழுவதுமுள்ள சத்தோச நிலையத்தில் மேற்குறித்த சேவைகளை பெற்றுகொள்ள முடியும். இதன் மூலம் நாடு முழுவதும் பாதுகாப்பான வசதியான பணப்பரிமாற்றத்தினை SLT மொபிடெல் தமது வாடிக்கையாளர்களுக்கு உறுதி செய்துள்ளது.

இந்த வசதிகளை mCash சேவையானது மொபிடெல் மற்றும் எடிசலாட் வாடிக்கையாளரகளுக்கு வழங்குவதினால் நாடு முழுவதுமுள்ள பெரிய அளவிலான வாடிக்கையாளர்கள் இதன் மூலமான அனுகூலங்களை எந்தவொரு நேரத்திலும் மிக இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். வாடிக்கையாளர்கள் நாடு முழுவதுமுள்ள சதோச நிறுவனத்திற்கு செல்வதன் மூலம் இந்தச் சேவையைச் செயற்படுத்திக் கொள்ள முடியும். இந்தச் சேவையை இலங்கை சதோச மற்றும் ஏனைய பல்பொருள் அங்காடிகளில் அறிமுகப்படுத்தியதன் மூலம் mCash இன் சில்லறை வர்த்தக செயற்பாடுகளை வாடிக்கையாளர்கள் இலகுவாக பெற்றுகொள்ள கூடிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. அத்துடன் mCash சேவையின் மூலம் வாடிக்கையாளர் தமது கொடுக்கல் வாங்கல்கள் செயற்பாடுகளை கையடக்கத் தொலைப்பேசி சேவையினூடாக மேற்கொள்ளக் கூடிய புதியதொரு தொழில்நுட்ப மாற்றத்தினை அனுபவித்திட முடியும். mCash சேவையைப் பயன்படுத்தி இலங்கை சதோச மற்றும் ஏனைய பல்பொருள் அங்காடிகளில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு குறித்த நாள்களில் பல்வேறு பொருள்களுக்கான விலைக்கழிவுகள் வழங்கப்படும். கடந்த ஆண்டுகளில் வேகமான வாடிக்கையாளர் அதிகரிப்பைக் கொண்ட மொபிடெல் நிறுவனம் நாடு முழுவதும் தமது வாடிக்கையாளர்களுக்கான மிக சிறந்த சேவையை விஸ்தரித்துள்ளதுடன், mCash சேவையின் மூலம் பாதுகாப்பான மற்றும் விரைவான பணப்பரிமாற்று சேவையினையும் வழங்கிவருகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள mCash சேவையின் மூலம் பணவைப்பு, மீளம்பெறல்,பணப் பரிமாற்றம் சேவை, கட்டணப்பட்டியலுக்கான பணம் செலுத்துதல், காப்புறுதி கட்டணம், குத்தகைக் கட்டணங்கள் செலுத்துதல், அரச நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்துதல், தொண்டு நிறுவனங்களுக்கான நன்கொடைகளை செலுத்துதல் மற்றும் பொருள்கள் சேவைகளை கொள்வனவு செய்தல் போன்ற பல சேவைகளை பெற்றுகொள்ளக் கூடியமை விசேட அம்சமாகும்.

# 137 ஆவது நீலங்களுக்கிடையிலான சமருக்கு எலிபன்ட் ஹவுஸ், கீல்ஸ் ஃபுட்ஸ் அனுசரணை




இலங்கையின் பாடசாலைகளுக்கிடையிலான மிகவும் பிரபல்யமான கிரிக்கெட் போட்டித் தொடரான நீலங்களுக்கிடையிலான சமர் போட்டிகளுக்கான உத்தியோகபூர்வ உணவு மற்றும் பான வகைகளுக்கான அனுசரணையை வழங்க எலிபன்ட் ஹவுஸ் மற்றும் கீல்ஸ் ஃபுட்ஸ் ஆகியன முன்வந்துள்ளன. 137 ஆவது வருடமாக இந்த ஆண்டு இந்த போட்டித் தொடர் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உத்தியோகபூர்வ உணவு மற்றும் பான வகை அனுசரணையாளர் எனும் வகையில், இந்த போட்டிகளை பார்வையிடும் ரசிகர்களின் தாகம் மற்றும் பசியைத் தீர்க்கும் உணவுகளை போட்டித் தொடர் நடைபெறும் எஸ்எஸ்சி மைதானத்தில் வழங்க முன்வந்துள்ளது. கொழும்பிலுள்ள புகழ்பெற்ற ஆண்கள் பாடசாலைகளான றோயல் கல்லூரி மற்றும் சென்.தோமஸ் கல்லூரி அணி ஆகியன இந்த போட்டி களில் விளையாடவுள்ளன. இந்த அனுசரணையின் பிரகாரம், எலிபன்ட் ஹவுஸ் ரசிகர்களுக்கு பிடித்த மென் பானங்கள் மற்றும் ஐஸ் கிறீம் வகைகள் போன்றனவும் கீல்ஸ் ஃபுட்ஸ் நிறுவனத்தின் பதப்படுத்திய இறைச்சி வகைகளும் உணவுகளாகவும் பானங்களாகவும் விற்பனைக்கு வழங்கப்படவுள்ளன. சகல வயதினரையும் சேர்ந்தவர்கள் இந்த விளையாட்டை ரசித்து மகிழ்வதற்கு இந்த அனுசரணை பெரிதும் பயனுள்ளதாக அமைந்திருக்கும். (த)

**வணிகம்**

# நுட்பம்

## மோசில்லா அறிமுகம் செய்யும் அதிவேகமான இணைய உலாவி



மோசில்லா நிறுவனம் பயனாளர்களுக்கு உதவிடும் வகையில் அதி வேகமாக செயற்படக்கூடிய இணைய உலாவியினை அறிமுகம் செய்யவுள்ளது.

உலகின் முன்னணி இணைய உலாவிகளில் ஒன்றான Firefox உலாவியினை அறிமுகம் செய்த மோசில்லா (Mozilla) நிறுவனம் தற்போது Mozilla Servo எனும் அதி வேகமாக செயற்படக்கூடிய மற்றொரு இணைய உலாவியினை அறிமுகம் செய்யவுள்ளது.

இந்தப் புதிய உலாவியினை சம்சுங் நிறுவனத்துடன் இணைந்து மோசில்லா நிறுவனம் உருவாக்கி வருகிறது.

Rust எனப்படும் புதிய கணினி மொழியைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட இந்த உலாவியானது எதிர்வரும் ஜுன் மாதம் பரிசோதனை ரீதியாக அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இந்த இணைய உலாவியானது 64bit Linux, 64bit OSX, Android, மற்றும் Gonk (Firefox OS) ஆகிய இயங்குதளங்களில் செயற்படக்கூடியதாக இருக்கும் எனவும், இது பயனர்களுக்கு இணையத் தேடலில் புதிய அனுபவத்தினை வழங்கும் எனவும் மோசில்லா நிறுவனம் தெரிவித்துள்ளது. (த)

## பேஸ்புக்குக்கு சவாலாக மற்றுமொரு வலைத்தளம்



பேஸ்புக் சமூக வலைத்தளத்துக்கு போட்டியாக புதிய சமூக வலைத்தளத்தை உருவாக்கும் முயற்சியில் சம்சுங் நிறுவனம் ஈடுபட்டுள் ளது.

பேஸ்புக் சமூக வலைத்தளமானது அறிமுகம் செய்யப்பட்டு 12 வருடங்கள் கடந்துள்ளன.

எனினும் இதுவரை எந்தவொரு சமூக வலைத்தளத்தினாலும் இதனை அசைக்க முடியவில்லை. இவ்வாறிருக்கையில் தற்போது Waffle எனப்படும் சமூக வலைத்தளத்தினையும் அதற்கான மென்பொருளையும் உருவாக்கி வருவதாக சம்சுங் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஒளிப்படங்கள் உட்பட பல வகையான உள்ளடக்கங்களை (Contents) பகிரக்கூடியதாவும், சட் செய்யக்கூடியதாகவும் இருக்கும் இவ் வலைத் தளத்திற்கான பீட்டா மென்பொருளானது விரைவில் அன்ரோயிட் சாதனங்களுக்காக அறிமுகம் செய்யப்படவுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவுக்கு

ஆராய்ந்துள்ளார்.

இதுவரை காலமும் தென்பகுதியில் செயற்பட்டு வந்த சிங்கள – பௌத்த கடும்போக்கு அமைப்பான பொதுபல சேனாவினர், முதன் முறையாக வட பகுதியிலும் தமது செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பிரதேசத்துக்கு ஞானசார தேரர் தலைமையிலான குழுவினர் வந்துள்ளனர். கொக்கிளாய் தனியார் காணி ஒன்றில் அமைக்கப்பட்ட விகாரை தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் ஏற்கனவே இருந்து வருகின்றன. குறித்த விகாரையை அகற்றவேண்டும் என்று முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பணித்திருந்தார். இந்த நிலையில் அந்த விகாரை தொடர்பில் ஞானசார தேரர் ஆராய்ந்துள்ளார்.

இதன் பின்னர் முகத்துவாரம் பகுதிக்குச் சென்றுள்ளார். அங்கு 260 கிறிஸ்தவர்களும், 2 பௌத்தர்களும் வாழ்ந்து வருகின்றனர். அங்கு தனியார் காணி ஒன்றைச் சுவீகரித்து சிங்கள மக்களுக்கான வீட்டுத் திட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக அந்தக் காணியை சுவீகரிப்பதற்கு 4 தடவைகள் முயற்சி மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறானதொரு நிலையில் குறித்த பகுதியிலுள்ள சிங்கள மக்களுடனும் ஞானசார தேரர் கலந்துரையாடியுள்ளார்.

இந்தப் பயணம் தொடர்பில் ஞானசார தேரர் சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில்,

சிங்கள மக்கள் அரச அதிகாரிகளாலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினாலும் தவறாக வழிநடத்தப்படுவதாகக் கிடைத்த தகவலுக்கமைய அதனை ஆராய்வதற்காகவே அங்கு சென்றோம்.

அத்துடன், பாரம்பரியமாகக் குறித்த நிலங்களுக்கு உரிமையாளர்களான சிங்கள மக்களுக்கு அமைச்சர்களாலோ, அரச அதிகாரிகளாலோ இதுவரை எந்தவித உதவிகளும் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட கடத்தல் தொடர்பான வழக்கில் சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் நீதிமன்றை அவமதிப்புச் செய்தமை ஆகிய குற்றச் சாட்டுக்களில் ஞானசார தேரர் கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

## கிளிநொச்சியில்

இந்த சமாதிநிலைப் புத்தர் சிலையுடன் கூடிய பௌத்த வழிபாட்டு இடம், வெள்ளரச மரத்துக்கான சுற்றுச்சுவர் என்பனவற்றை இராணுவத்தின், கிளிநொச்சிப் படைகளின் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்தார்.

வடக்கில் இராணுவத்தினரும், கடற்படையினரும் தொடர்ச்சியாக பௌத்த விகாரைகளையும், வழிபாட்டு இடங்களையும் அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

## 'குருடீ'

வன்னியில் இறுதிப் போரின் போது, பொட்டு அம்மான் உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவர் இந்தியாவின் தமிழகத்தில் மறைந்து வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 'குருடீ' என்ற பெயரில் தமிழகத்தில் பொட்டு அம்மான் மனைவியுடன் மறைந்து வாழ்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறுதிப் போரில் நந்திக்கடல் பகுதியில் பொட்டு அம்மான் கொல்லப்பட்டார் என்று பாதுகாப்புப் படையினர் அறிவித்தபோதிலும் அவரது சடலம் மீட்கப்படவில்லை.

பொட்டு அம்மான் உயிரிழந்துள்ளார் என்பது பற்றிய உறுதியான சாட்சியங்களை முன்னைய அரசு இந்தியாவுக்கு வழங்கவில்லை என்றும் குறித்த சிங்கள ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப் பட்டுள்ளது.

இதேவேளை, பொட்டு அம்மான் இறுதிப் போரில் கொல்லப்பட்டார் என்று 2014ஆம் ஆண்டில் கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பொட்டு அம்மான் கொல்லப்பட்டார் எனவும், எனினும் அவரது சடலத்தை மீட்கவில்லை எனவும் 2009ஆம் ஆண்டில் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை விவகாரத்தில் முக்கிய சந்தேகநபராக பொட்டு அம்மான் காணப்படுகின்ற நிலையில், அவரது இறப்புச் சான்றிதழை வழங்குமாறு இலங்கை அரசிடம் இந்தியா கோரியிருந்த போதிலும், இதுவரை அந்த இறப்புச் சான்றிதழ் வழங்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(த-வ-சி)

## தெஹிவளை

ஹுசேன் மௌலானா (வயது-65), புட்டுவக மர்ஷானா (வயது-58), காமரேத உஷானா (வயது-14), வியானா (வயது-13) ஆகியோரின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள் ளன என்று தெஹிவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நச்சு வாயுக் கசிவினாலேயே இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என ஒரு விதத்திலும், இது கொலையாக இருக்கலாம் என இன்னொரு விதத்திலும் அப்பகுதி மக்கள் உடனே சந்தேகித்தனர். அதேவேளை, பொலிஸாரும் பலகோணங்களில் விசாரணைகளை முடுக்கிவிட்டிருந்தனர்.

எனினும், நேற்று மாலை நடைபெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையில் ஒருவகை நச்சுவாயுவை இவர்கள் சுவாசித்ததனால் குறித்த உயிரிழப்பு ஏற்பட்டது எனத்தெரியவந்துள்ளது.

இந்த நச்சுவாயு வீட்டிலிருந்த மின்னடுப்பிலிருந்து வெளியேறியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. ஆனால், பொலிஸார் இது தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தெஹிவளை – கவுடான வீதியில் மூன்று மாடி வீடொன்று இருக்கின்றது. அதில் முதலாம் மாடியும், மூன்றாம் மாடியும் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்கள் இரண்டாம் மாடியிலேயே வசித்து வந்துள்ளனர். சகல அறைகளும் குளிரூட்டப்பட்டுள்ளன.

குறித்த வீட்டிலிருந்து நேற்றுக் காலை சடலங்கள் மீட்கப்படும்போது, அவை கருகியிருக்கவில்லை. அத்துடன், எந்த வித காயங்களும் இருக்கவில்லை. ஆனால், சடலங்கள் நான்கும் கறுப்படைந்த நிலையில் இருந்தன.

மௌலானாவின் மகள் வழமையாக வான் ஒன்றிலேயே பாடசாலை செல்வார். நேற்றையதினம், தான் பாடசாலை வரப்போவதில்லை என அவர் ஏற்கனவே அறிவித்துவிட்டதால், காலையில் வான் சாரதியும் அவரது வீட்டுப்பக்கம் வரவில்லை.

எனினும், காலை 9.30 மணியளவில் வர்த்தகரான மௌலானாவை ஏற்றுவதற்கு வழமைபோல் வான் சாரதி வந்துள்ளார். அப்போது வீடு திறக்கப்படாமல் இருப்பதை அவதானித்த பின்னரே, அவர் சென்று பார்த்துள்ளார். அவர்கள் சடலங்களாகக் கிடந்துள்ளனர். இதையடுத்து தகவல் தெஹிவளைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலங்களை மீட்டனர்.

இந்த நிலையில் குறித்த நால்வரின் உயிரிழப்பு தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-வ-சி)

## 55 மில்லியன்

மக்கள் மற்றும் துறை சார்ந்தவர்களின் கருத்தையும் நேரடியாகப் பெற்று, குறித்த திட்ட அறிக்கையை முழுமைப்படுத்தும் நோக்கிலேயே உலக வங்கிப் பிரதிநிதிகள் நேரில் வருகை தந்தனர்.


இதன் பிரகாரம் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அவற்றையும் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டனர் – என்றார்.

(த-வ-101)

# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை யோண்பிள்ளை (இரத்தினராசா)

**(ஓய்வுபெற்ற கட்டட உயர் அதிகாரி)**



அன்னை மடியில் 25.09.1935 — ஆண்டவர் அடியில் 14.03.2016

'அருள்வில்லா' சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் சுவாட்ஸ் லேன் , சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை யோண்பிள்ளை (14.03.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப் பிள் ளை-அக்னேஸம்மா தம் பதியரின் மூத்த புதல்வரும் காலஞ் சென்ற மாசிலாமணி மற்றும் மேரி மெற்றில்டா பேளியின் அன்புக் கணவரும் அன்ரன் நோயல் ஜெயக்குமார், அன்ரன் நிமால் சுரேஷ்குமார், யூஜின் கல்பனா, அன்ரன் நிகால் சதீஷ்குமார், நொயலின் லஸ்மினி , செறின் டிலானி ஆகியோரின் நேசமிக்க தந் தையும் அஞ்சலின், நிர்மலாசின், ஸ்ரீபன், செறோன், கிறிஸ்ரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அதிரியான், கிறிஸ்ரியான், டானியல், றோகான், எரிக், கமிலா, பிறையன், சிடோனியா, யூலியா, ஜடன்ஸ்ரன், செறவீனா ஆகியோரின் பாசமுள்ள பேரனும் காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லாஸ் மற்றும் மேரி றீற்றா, புஸ்பம், அருட்திரு அருளானந்தம் (மட். மறை மாவட்டம்), யேம்ஸ், மேரி ஆன்கிறேஸ்.மலர், மேரி வெலிசிற்றஸ் லில்லி, மேரி யோஷேப்பின் யசிந்தா, மேரி குளோறியா, புளொசம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரனிஸ்லாஸ் பிறான்சிஸ்கா, S.P யேசுதாசன், லுட்சினி சாமினி யேம்ஸ், காலஞ்சென்ற மைக்கல் எலிஸ்டன் மற்றும் மார்சலின் சூசைநாதர், Dr. பெரிசல் நேரிஸ், பாக்கியநாதர், ஞானதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சென்யேம்ஸ் வீதி,**
**பண்டத்தரிப்பு.**

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

(68232) (12.18.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வீரகத்தியார் பாலசிங்கம்

(ஓய்வு பெற்ற தபால் ஊழியர், உபதபாற் கந்தோர் - வரணி)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1935 . 12 . 31 | 2016 . 03 . 15 |



வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தியார் பாலசிங்கம் (15.03.2016) செவ்வாய்க் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் வீரகத்தியார் - அபிராமி தம்பதியரின் அன்பு மகனும் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும் பாலாம்பிகை (ஆசிரியர் - யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பாலகுமாரி(கனடா), பாலதாஸ் (உதவி நிதியாளர், வவுனியா வளாகம், யாழ்.பல்கலைக் கழகம்), முரளீதரன்(விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி - கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன்(ஓய்வு பெற்ற ஆசிரியர்), ரவீந்திரன்(கனடா), அனுஷா (சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் வவுனியாவளாகம், யாழ்.பல்கலைக்கழகம்), கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சங்கவி, கௌரிபாலன், கௌதமன், மதூர்சன், மயூரிக்கா, சஞ்சீவன், அஷாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.03.2016) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக முற்பகல் 11.00 மணியளவில் ஐயங்கண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வரணி வடக்கு,**
**வரணி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 205 0888**

## திருமதி கிருபாதேவி செல்வரத்தினம்



சரவணையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருபாதேவி செல்வரத்தினம் 15.03.2016 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் தேவபாலன்(Uk), தேவதாசன்(Uk), தேவசீலன்(சுவிஸ்), தேவமலர்(கனடா) ஆகி யோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நல்லையா மற்றும் கனகரத்தினம் (கொழும்பு), குணரத்தினம், தெட்சணாமூர்த்தி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் அசோகமாலாதேவி(கொழும்பு), மகேந்திரராசா(Uk) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**61, சட்டநாதர் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**திருநெல்வேலி.**

(68232) (12.18.20)

தகவல்:
**குணம்**
**திலகம்** – சகோதரர்கள்

**077 467 1602**

## சுமந்திரனின்

பொதுநூலகத்தில் இடம் பெற்றபோது, அதில் வடக்கு மாகாண முதலமைச்சர் பங்கேற்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரனினால், கடற்றொழில் நீர் வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்) சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந் தது. இது தொடர்பில் மாகாண சபைகளின் கருத்தை அறிவதற்காக நாடாளுமன்றத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாண சபையின் கருத்து அறிவதற்கான அமர்வு கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது, சட்டவரைவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எமது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கொண்டு வந்த சட்டவரைவில் கண்டபடி விமர்சனம் செய்யக் கூடாது. அவருடன் கலந்துரையாடல் நடத்தி, அதனடிப்படையிலேயே திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மாகாண சபை உறுப்பினர்களால் அழைக்கப்பட்டுக் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் என்றும் மாகாண சபையில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதனடிப்படையில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை, யாழ்.பொதுநூலகத்தில் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பங்கேற்கவில்லை.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுவதற்கு முன்னர் இடம்பெற்ற மாகாண சபை தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்றுவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கலந்துரையாடல் ஆரம்பமாகும்போது, வெளியேறிச் சென்றிருந்தார். ஏனைய அமைச்சர்களும் இதில் பங்கெடுக்கவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இழுவைப் படகுகளினால் ஏற்படும் பிரச்சினை தொடர்பில் தெளிவுபடுத்தினார். இதன் பின்னர் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, தற்போது இழுவைப் படகு பயன்படுத்துபவர்களுக்கு மாற்று ஏற்பாடு தொடர்பிலும், நீண்ட கால நோக்கில் கடல் வளங்களை அழிக்காது எதிர்கால சந்ததிக்கும் கையளிக்கும் நோக்கிலும் சட்டவரைவில் மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் ஆராயலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த சட்டவரைவு தொடர்பில் வடக்கு மாகாண சபையில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## இ.போ.ச

செய்ய முடியாதுவிடின் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிடுங்கள், இல்லையேல் மேல் நீதிமன்று கடும் நவடிக்கை எடுக்கும் என்றும் கடுமையாக எச்சரிக்கப்பட்டு அனுப்பப்பட்டார்.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் இந்த விவகாரம் நேற்று வந்திருந்தது. சபையின் அதிகாரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றில் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் ஸ்ரீவர்த்தன, யாழ். சாலை முகாமையாளர் குலபாலச்செல்வம் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். இதன்போதே ஸ்ரீவர்த்தன கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கும், தனியார் பஸ் சங்கத்தினருக்கும் இடையில் ஒருங்கிணைந்த நேர அட்டவணை தயாரிப்பதற்கு இலங்கைப் போக்குவரத்தச் சபையினர் ஒத்துழைப்பு வழங்க மறுத்து வந்தனர். அது பற்றி யாழ்.மாவட்ட அரச அதிபர் விடுத்த அழைப்புக்களும் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் விடுத்த அழைப்புக்களும் சபையினரால் புறக்கணிக்கப்பட்டு வந்தன. திரும்பத் திரும்ப யாழ்.மாவட்ட செயலகத்தில் நடந்த கூட்டத்துக்கு பல முறை இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் அழைக்கப்பட்டபோதும் அவர்கள் சென்றிருக்கவில்லை. எனினும் பயணிகள் போக்குவரத்தில் இ.போ.சபையினருக்கும், தனியார் பஸ் சங்கத்தினருக்கும் , பெரும் குழப்பம் நீடித்து வந்தது.

மேலும், சபையினர் ஒத்துழைக்க மறுத்ததால் அது பற்றி வடமாகாண ஆளுநருக்கு அறிவித்தும் பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஜனாதிபதியின் கவனத்துக்கு குறித்த விடயத்தை வடக்கு போக்குவரத்து அமைச்சர் முன்வைத்தார்.

இந்தநிலையில் குறித்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கையைக் கோரி யாழ். அரச அதிபர் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதிக்கு பதிவுத் தபால் மூலமாக முறைப்பாடு செய்திருந்தார்.

போக்குவரத்து விவகாரம் இழுபறியில் உள்ள நிலையில், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலையின் அதிகாரிகளுக்கு எதிரான வழக்குக்காக குறித்த அதிகாரிகள் இருவரும் நேற்று நீதிமன்றுக்குச் சென்றிருந்தனர். இதன் போதே, திறந்த நீதிமன்றில் நிற்க வைத்து கேள்விமேல் கேள்வி கேட்டு மிகக் கடுமையாக ஸ்ரீவர்த்தன எச்சரிக்கப்பட்டார்.

மேலதிகாரியாக உள்ள நீங்கள், இவ்வாறாக மோசமாக செயற்பட்டால், கீழுள்ள அதிகாரிகள், பணியாளர்கள் எப்படி நேர்மையாகச் செயற்படுவார்கள்? வீதிகளில் போட்டிக்கு ஓடுவது இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இலாப நோக்கம் கருதித்தான் செயற்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. ஏன் அவ்வாறு செயற்படுகிறீர்கள்? இலாபம் ஈட்ட மட்டும் பயணிகள் சேவையில் ஈடுபடவேண்டிய தேவை இல்லை என்றும் நீதிபதி எச்சரித்தார்.

தவிர, பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்றும் நீதிபதி அவருக்குக் கூறினார். இதுதான் கடைசியும் முதலுமான செயற்பாடாக இருக்க வேண்டும். இனிமேல் குழப்பங்களில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கைதான் எடுக்கப்படும் எனவும் நீதிபதி எச்சரித்தார்.

யாழ்.மாவட்டத்தில் சகல திணைக்களங்களையும் கூட்டிணைக்கும் அதிகாரியாக, யாழ்.மாவட்ட அரச அதிபர் உள்ளார். அவருடன் இணைந்து செயற்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் நீதிமன்று சொல்வதனைச் செய்யுங்கள். செய்ய முடியாது விட்டால் இங்கிருந்து ஓடிவிடுங்கள். இடமாற்றம் பெற்றுச் சென்றுவிடுங்கள். குழப்பங்களில் ஈடுபடுவதற்கு - பிரச்சினைகளைத் தீர்க்க முற்படாது இழுத்தடிக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. நீங்களாக உணர்ந்து இனிமேல் இத்தகைய பிரச்சினைகள் எதுவுமே வராதவாறு செயற்படவும். தவறினால் மேல்நீதிமன்று உரிய கடும் நடவடிக்கையை எடுக்கும். அதில் மாற்றமிருக்காது என்று ஸ்ரீவர்த்தனவைக் கடுமையாக எச்சரித்த நீதிபதி.

யாழ்.சாலை முகாமையாளர், குலபாலச்செல்வத்தையும் எச்சரிக்கத் தவறவில்லை. ஸ்ரீவர்த்தன செய்யும் செயல்களுக்கு ஆமாம் போட்டுக்கொண்டு நீங்களும் சேர்ந்து உடந்தையாக இருக்கிறீர்களா என்று கண்டித்த நீதிபதி, இனிமேல் அத்தகைய செயல்களுக்கு இடமளிக்காதவாறு நடந்து கொள்ளுங்கள் என்று எச்சரித்தார்.

தவிர, இனிமேல் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்ஸினால் விபத்தை ஏற்படுத்தி உயிரிழப்பு நிகழுமாக இருந்தால், குறித்த இரண்டு பேரும் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு நடவடிக்கை கோரப்படும்.

அத்துடன், கைதடிப் பாலம், கோப்பாய் சந்தி, மானிப்பாய் சந்தி, கே.கே. எஸ். வீதி, பண்ணை ஆகிய இடங்களை அண்மித்ததும் பஸ்கள் 30 கிலோ மீற்றர் வேகத்தில் யாழ்.நகருக்குள் நுழைய வேண்டும். அது பற்றி அறிவுறுத்த வேண்டும். என்றும் நீதிபதி அவர்களுக்குக் கூறியுள்ளார். (வ-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தீர்வை எட்ட மனித உரிமைகள் சபை உதவி

## ஐ.நா. பொதுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

இலங்கை போன்ற நாடுகளின் மனித உரிமைகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபை உதவியுள்ளதாக ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை உருவாக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை முன்னிட்டு, நடந்த நிகழ்விலேயே ஐ.நா. பொதுச் செயலர் இவ்வாறு கூறியுள்ளார்.

மனித உரிமைகள் விவகாரங்களில், கடந்த 10 ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் சபை முக்கியமான முன்னேற்றங்களை அடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்தாண்டுகளாக மனித உரிமைகள் பொறிமுறைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. புரூண்டி, கினியா, தென்சூடான், இலங்கை, சிரியா உள்ளிட்ட பல நாடுகளில் மனித உரிமைகள் தொடர்பான அவசர நிலைமைகளின் போதும், பொறுப்புக்கூறலை நோக்கியும் செயற்பட, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பணிகள் சர்வதேச சமூகத்துக்கு உதவியுள்ளது என்றும் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (த-ஐ-5)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த இதுவே சரியான சந்தர்ப்பம்

## சொல்கிறார் சந்திரிகா

கொழும்பு, மார்ச் 17

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இதுவே சரியான தருணம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாடு தொடர்பான அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத்தைத் தோற்கடித்து நாட்டை வெற்றி கொண்ட போதிலும், சமாதானத்தை ஏற்படுத்த முடியாமல் போயுள்ளது. கடந்த ஆட்சியாளர் இனவாதம் மற்றும் மதவாதம் ஆகியவற்றுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி வந்தனர். எதிர்வரும் காலங்களில் அவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறாது.

நீண்ட காலத்தின் பின்னர் சமாதானம் ஏற்பட்டுள்ளது. நல்லிணக்கத்தை ஏற்படுத்த இது சரியான தருணம். நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் பிரதான இரு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படும் முதலாவது தருணம் இதுவாகும். நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் நாம் செயற்பட்டு வருகிறோம்-என்றார். (த-ஐ-5)

# ‘புல்டோஸ்’ பந்தையே அரசுக்கு வீசுகின்றது தமிழ்க் கூட்டமைப்பு

## இப்படிக் கூறுகின்றார் மகிந்த

கொழும்பு, மார்ச் 17

அரசு அடிக்கக் கூடிய 'புல்டோஸ்' பந்து களையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வீசுகின்றது என்று தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, இன்று கொழும்பில் இடம்பெறும் பேரணியில் பங்கேற்பேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடு கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாம் நாட்டை ஆட்சி செய்யும்போது, திருட்டுத்தனமாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டதாக குற்றம் சுமத்துகின்றனர். திருட்டுத்தனமாக நாம் கடன் பெற்றுக் கொண்டதாக இருந்தால், திருட்டுத்தனமாகப் பணத்தை வழங்கு வதற்கும் நாடுகள் இருக்கின்றனவா என்று கேட்க விரும்புகின்றேன்.

இவ்வாறான நகைச்சுவைகளினால் நாட்டை ஏமாற்ற முடியாது. நாடாளுமன்றத்தில் கூட்டு எதிர்க்கட்சியே, உண்மையான எதிர்க்கட்சியாகச் செயற்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும் தற்போதைய அரசைப் பதவிக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுத்த கட்சிகள். இதனால், இந்தக் கட்சிகள் தொடர்ந்தும் அரசைப் பாதுகாத்து வருகின்றன. நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பும்போது, இந்த கட்சிகள் பதிலளிக்க கூடிய இலகுவான கேள்விகளைக் கேட்கின்றனர். அரசு அடிக்கும் படியாக 'புல்டோஸ்' பந்துகளை வீசுகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைக் கோரும்போது, அவர்கள் விதித்துள்ள நிபந்தனைகள் கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டுள்ளன. அமைச்சர்கள் நிபந்தனைகளை எதிர்த்ததால், நிபந்தனைகளை மறைத்து வைத்துக் கொண்டு வெள்ளிக்கிழமை வரி களை அதிகரித்து அதற்கு ராஜபக்ச வரி எனப் பெயரிட்டுள்ளனர். எனினும் வரி யாருடையது என்பதை மக்கள் நன்றாக அறிவார்கள்-என்றார்.

(த-வ-5)

## மின்

சீராக்கப்பட்டது. இந்த நிலையில் திங்கட்கிழமை தொடக்கம் நாளொன்றுக்கு ஏழரை மணி நேரம் சுழற்சி முறை அடிப்படையில் தொடர்ச்சியான மின்வெட்டு நேற்று வரை நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

எனினும் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தி நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், மின்தடை பற்றிய அறிவித்தல் மீளப் பெறப்பட்டுள்ளதாக, மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திடீர் மின்தடை தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் ஆலோசனைகளுக்கு அமைய, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பிரச் சினைகளைத் தீர்ப்பதற்கும் இவற்றைச் சமாளிக்க முன்கூட்டியே நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் கையாளப்படும் என்று மின்சக்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (த-வ-5)


## மரண அறிவித்தல்கள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 30 . 07 . 1940 |  | 16 . 03 . 2016 |

### திருமதி விஜயநாயகி நடராஜா

யாழ்ப்பாணம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயநாயகி நடராஜா நேற்று (16.03.2016) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருமேனி நடராஜாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா-சரஸ்வதி தம்பதியினரியின் மகளும், தியாகமூர்த்தி (லண்டன்), சத்தியானந்தமூர்த்தி (லண்டன்), செல்வநாயகி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பாலமோகன் மற்றும் பாலமுரளி ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
077 7349990 ந. பாலமுரளி(மகன்)



### சுப்பிரமணியம் சண்முகானந்தன் (ஆனந்தன்)

(சிவன் ஹோட்டல் உரிமையாளர் பெருமாள் கோயிலடி)
(அத்தான் கடை)

பிறப்பு - 1964.01.26 இறப்பு - 2016.03.16

கரம்பொன் தெற்கு, ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும், இல.40/17, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகானந்தன் நேற்று (16.03.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நீலாட்சியம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான குணரத்தினம் (முன்னாள் உரிமையாளர் - சரஸ்வதி விலாஸ்) - பூங்காவனம் மற்றும் செல்வலட்சுமி தம்பதியினரின் மருமகனும் வினோதினியின் அன்புக் கணவரும் நிதர்ஷன், நிஷாந்தன், கஜீபன், கிரிஜா, திவ்வியா, நிருஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமிர்தகௌரி, கதிர்காமநாதன், சச்சிதானந்தன், ஆனந்தகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாந்தினி (கனடா), யசோதினி, காலஞ்சென்ற விஜியநந்தினி மற்றும் சிவாஜினி, சர்மிளா (அமெரிக்கா), சுதா (கொலண்ட்), துர்க்கா (கனடா), சிவசதீஸன், கார்த்திகா, செந்தூரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
40/17, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பார்வதி வைரவநாதன்



நகுலேஸ்வரா வீதி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி வைரவநாதன் 14.03.2016 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் கி.வைரவநாதனின் (முன்னாள் உரிமையாளர் - திருப்பதி ரெக்ஸ் நவீன சந்தை யாழ்ப்பாணம், உரிமையாளர் - பிரகலாத் பவன் கபே கீரிமலை) அன்பு மனைவியும் பிரகலாதன் (கண்ணன் - கனடா), அருண் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: [illegible] நாதன்
[illegible] 0773957583


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி சரஸ்வதி பெரும் ஆதிக்கம் வலிகாம கல்வி வலய வலைப்பந்தில்







வலிகாமம், மார்ச் 17

வலிகாம கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 15, 17வயதுப் பிரிவுகளில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இந்த இறுதியாட்டங்கள் நடைபெற்றன.

15வயதினருக் கான இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது. முடிவில் சரஸ்வதி அணி 24:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன்றாமிடத்தை மகாஜனக் கல்லூரி அணி பெற்றது.

17வயதுப் பிரிவிலும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது. இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 27:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை மகாஜனக் கல்லூரி அணி பெற்றது. (ம-422-23)

# கிண்ணம் வென்றது புதுக்குளம் ம.வி. வவுனியா வடக்கு எல்லே தொடரில்



வவுனியா, மார்ச் 17

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான எல்லே தொடரில் புதுக்குளம் மகா வித்தியாலய அணி கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

புளியங்குளம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் புதுக்குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஓமந்தை மத்திய கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய புதுக்குளம் மகா வித்தியாலய அணி நிர்ண யிக்கப்பட்ட 30பந்துகளில் 4ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓமந்தை மத்திய கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 30 பந்துகளில் 2 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதையடுத்து புதுக் குளம் மகா வித்தியாலய அணி 2 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கியது. (ம-422)

# வவுனியா கபடி

வவுனியா, மார்ச் 17

வவுனியா வடக்குக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான கபடித் தொடர் இன்று கல்மடு மகா வித்தியாலய மைதானத்தில் காலை 8.30மணி முதல் நடைபெறவுள்ளது. (ம-422)

# கிண்ணம் வென்றது முத்தமிழ் வித்தி.

வவுனியா, மார்ச் 17

வவுனியா வடக்குக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டத்தில் கோவில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலய அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலய அணி மோதியது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலய அணி 25:7, 25:17 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. (ம-422)

# விளாங்குளம் அ.த.க. பாடசாலை அசத்தியது கரப்பந்தாட்டத் தொடரில்





யாழ்ப்பாணம், மார்ச் 17

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளுக் கிடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் 15வயது, 17வயதுப் பிரிவுகளில் வன்னி விளாங்குளம் அ.த.க. பாடசாலை அணிகள் கிண்ணங்களை சுவீகரித்துள்ளன.

மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வாரம் இறுதியாட்டங்கள் நடைபெற்றன. 15வயதினருக்கான இறுதியாட்டத்தில் வன்னி விளாங்குளம்அ.த.க.பாடசாலைஅணியை எதிர்த்து தேறாங்கண்டல் வித்தியாலய அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 25:22, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய விளாங்குளம் அ.த.க. பாடசாலை அணி சம்பிய னாகியது. மூன்றாமிடத்தை முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய அணி பெற்றது.

17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் வன்னி விளாங்குளம் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை அணி மோதியது. 3 செற்க ளைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்க ளையும் முறையே 25:19, 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய விளாங்குளம் அ.த.க. பாடசாலை அணி இந் தப் பிரிவிலும் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை மாங்குளம் மகா வித்தியாலய அணி பெற்றது. (ம-422)

## சென்.அன்ரனிஸ் - சென்.மேரிஸ் இறுதியில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 17

ஈ.கே.குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சென்.அன்ரனிஸை எதிர்த்து சென்.மேரிஸ் மோதவுள்ளது.

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்திய ஈ.கே.குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை அரியாலையில் அமைந்துள்ள கால்பந்ததாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த இறுதியாட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் சந்திரனும் செயலாளர் எட்வின் குணரெட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

# கிண்ணம் ஓமந்தை மத்தியிடம்

வவுனியா, மார்ச் 17

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே தொடரில் ஓமந்தை மத்திய கல்லூரி அணி கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. புளியங்குளம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங் கட்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஓமந்தை மத்திய கல்லூரி அணியை எதிர்த்து புதுக்குளம் மகா வித்தியாலய அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஓமந்தை மத்திய கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 30பந்துகளில் 6 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுபெடுத்தாடிய புதுக்குளம் மகா வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 30 பந்துகளில் 3 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதையடுத்து 3 ஓட்டங்களால் ஓமந்தை மத்திய கல்லூரி அணி கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

## லெய்செஸ்டர் சிற்றிக்கு வெற்றி

இங்கிலாந்து பிறிமியர் லீக்கில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்ட மொன்றில் லெய்செஸ்டர் சிற்றி அணி வெற்றிபெற்றுள்ளது. லெய்செஸ்டர் சிற்றி, நியூகாசில் யுனைற்றெட் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி வெற்றி பெற்றுள்ளது. இப்போட்டியில் பெறப்பட்ட கோலை, ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் ஒகஸாகி பெற்றிருந்தார். இந்த வெற்றியையடுத்து இங்கிலாந்து பிறிமியர் லீக் தரவரிசையில் 63 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலுள்ள லெய்செஸ்டர் சிற்றி, தனக்கும் புள்ளிகள் தரவரிசையில் இரண்டாமிடத்திலிருக்கும் டொடேன்ஹாம் ஹொட்ஸ்பேர் அணிக்குமிடையிலான புள்ளிகள் வித்தியாசத்தை ஐந்தாக அதிகரித்துக் கொண்டது. (ம)

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் தென்றல் அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் 'பி' அணி மோதவுள்ளது. (ம-23)



# பங்களாதேஷை பழிதீர்த்தது பாகிஸ்தான் ஆசியக் கிண்ணத் தோல்விக்குப் பதிலடி

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 55 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக சர்ஜீல் கான் மற்றும் செசாட். தொடக்கமே அமர்க்களமாக அமைந்தது. அடுத்தடுத்து சிக்சர்களை விளாசினார் சர்ஜீல். 18 ஓட்டங்களுடன் சர்ஜீலை வீழ்த்தினார் அராபட். செசாட், கபீஸ் இணைய பாகிஸ்தான் 200 ஓட்டங்களை எட்டக்கூடிய சராசரியில் பயணமாகியது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் நூறு ஓட்டங்களை தொட்டது பாகிஸ்தான். 52 ஓட்டங்களுடன் செசாட்டும், 64 ஓட்டங்களுடன் கபீஸும் ஆட்டமிழந்தனர். உமார் அக்மல் ஓர் ஓட்டத்தைத் தானும் பெறவில்லை. வேடிக்கையை ஆரம்பித் தார் அப்ரிடி. ஆசியக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷின் துள்ளல்கள் எல்லாம் நேற்று வட்டியுடன் திருப்பி கொடுக்கப்பட்டது. சீரான இடைவெளியில் சிக்சர்களையும் பவுண்டரிகளையும் பறக்கவிட்டு 19 பந்துகளில் 49 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் அப்ரிடி. முடிவில் பாகிஸ்தான் 201-5. பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக அகமட், சணி இருவரும் தலா இரு இலக்குகளையும் ரகுமான் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது பங்களாதேஷ். ஆரம்ப வீரராக இக்பாலுடன் சர்கர். முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே சர்கரை போல்ட் செய்தார் ஆமிர். சிறிது அச்சுறுத்திய இக்பாலையும், ரகுமானையும் அனுப்பினார் அப்ரிடி. சகிப் அல் கசன் ஒரு முனையில் நிலைத்து நிற்க மறுமுனை பரிதாபமாகவே அமைந்தது. பின்வரிசை வீரர்களிடையே வேகப்பந்துவீச்சு எடுபட 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும் பங்களாதேஷால் 6 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்த சகிப் அல் கசன் 50 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக அப்ரிடி, ஆமிர் இருவரும் தலா இரு இலக்குகளையும், இர்பான், வசீம் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்ட அப்ரிடி ஆட்டநாயகனானார். (ம)

# குரோவை நினைத்து கண்கலங்கிய மாட்டின் குப்தில், றொஸ் ரெயிலர்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற நியூசிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில், ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் நியூசிலாந்தின் வீரர்களான குப்தில், ரெய்லர் இருவரும் கண்கலங்கியமை அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர், கடந்த 3ஆம் திகதி புற்று நோயால் சாவடைந்த முன்னாள் நியூசிலாந்து அணித் தலைவர் மார்ட்டின் குரோவ்வுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. நியூசிலாந்து வீரர்களும் அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கறுப்புப் பட்டி அணிந்து விளையாடினர். இந்த அஞ்சலி நிகழ்விலேயே அவர்கள் இருவரும் கண்கலங்கினர்.

குப்தில், ரெய்லர் இருவரும் மார்ட்டின் குரோவ்வுக்கு மிகவும் பிடித்த வீரர்கள். ஒரு பேட்டியில் கூட மார்ட்டின் குரோவ், 'குப்தில், ரெய்லரை தன் குழந்தைகள்' என்று குறிப்பிட்டிருந்தார். (ம)




# இது சச்சினின் ரி– 20 கணிப்பு

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதிக்குள் நுழையப் போகும் அணிகளை இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின் கணித்துள்ளார். இதன்படி அரையிறுதியில் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் இடம்பெறும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு அணிகளையும் பற்றித் தெரிவிக்கையில்: -ஆஸ்திரேலிய அணியை பொறுத்தவரை பந்துவீச்சு வலுவாக இல்லை. இருப்பினும் சரியான அளவில் உள்ளது. அந்த அணிக்குத் துடுப்பாட்டம் தான் சிறந்த பலம். தென்னாபிரிக்கா முக்கிய ஆட்டங்களில் சரியாக ஆடுவதில்லை. ஆனால் அவர்களிடம் வில்லியர்ஸ் உள்ளார். இங்கிலாந்து அணியில் சில சிறந்த ரி-20 வீரர்கள் உள்ளனர். அவர்களது பந்துவீச்சு என்னைக் கவர்கிறது. மொயீன் அலி போன்ற மூளையைப் பயன்படுத்தும் பந்து வீச்சாளர்கள் உள்ளனர். அவர் ஒரு திறமையான உத்தியை கையாள்கிறார். இந்திய அணி, எந்த அணியைக் கண்டும் அஞ்சவில்லை என்றாலும், இங்கிலாந்துக்கு எதிராக எச்சரிக்கை தேவை என்றே கருத வேண்டியுள்ளது -என்று குறிப்பிட்டுள்ளார். (ம)



## இளவாலை மத்தி, கணேசானந்தா வி.கழகங்கள் சம்பியனாகின தெல்லிப்பழை கரப்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 17

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான இரு பாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடர்களில் ஆண்கள் பிரிவில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணியும் பெண்கள் பிரிவில் பன்னாலை கணேசானந்தா விளையாட்டுக்கழக அணியும் சம்பியனாகின.

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலாவதாக இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பன்னாலை கணேசானந்த விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் கணேசானந்தா விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் சம்பியனானது. (ம-23)

## டோனி படத்தின் டீசர் வெளியீடு

இந்திய அணித்தலைவர் டோனியின் வாழ்க்கையை மையமாக கொண்டு எடுக்கப்பட்ட 'எம்.எஸ்.டோனி தி அன்ரோல்ட் ஸ்டோரி' படத்தின் டீசர் வெளியிடப்பட்டுள்ளது.

கரஹ்பூர் ரயில் நிலையத்தில் நீண்ட முடியோடு அமர்ந்திருக்கும் டோனியுடன் ஆரம்பிக்கும் டீசர், அரங் கத்தில் எதிரொலிக்கும் ரசிகர்களின் குரல், அதோடு பின்னணியில் ரவிசாஸ்திரியின் 2011 உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தின் அறிவிப்பு கேட்பதுடன் முடிகிறது. இந்தப் படம் செப்ரெம்பர் 2ஆம் திகதி வெளியாகவுள்ளது. இது ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கெயிலின் முரட்டுத்தனமான விளாசலில் வெற்றியைத் தொலைத்தது இங்கிலாந்து



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆரம்ப வீரரான றோயின் ஆட்டத்தில் பெரிதான தாக்கம் ஏதும் இல்லை. கேல்ஸ், ரூட் இணை இங்கிலாந்தின் அடித்தளத்தைப் பலமாக்கி இலக்குச் சரிவையும் சில பந்துப்பரிமாற்றங்களுக்குத் தள்ளிப் போட்டது. அவ்வப் பொழுது சிக்சர்களையும் விளாசினார் ரூட். 28 ஓட்டங்களுடன் கேல்ஸை போல்ட் செய்தார் பென். சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் பட்லர். இரண்டு ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் ரூட். பட்லரை வெளியேற்றினார் பிராவோ. களத்தில் மோர்கனும் ஸ்ரோக்ஸும். மூன்று பந்துப்பரிமாற்றங்களே மீதமிருந்தன. அதையும் கச்சிதமாகப் பயன்படுத்தினார் ஸ்ரோக்ஸ். 7 பந்துகளில் 15 ஓட்டங்களுடன் ஸ்ரோக்ஸ் ஆட்டமிழக்க வந்த வேகத்தில் தான் எதிர் கொண்ட முதல் பந்திலேயே சிக்சர் விளாசினார் மொயின் அலி. முடிவில் இங்கிலாந்து 182-6.

பதிலுக்கு களமிறங்கியது மேற்கிந்தியத் தீவுகள். ஆரம்ப வீரர்களாக சாள்ஸ்ஸும் கெயிலும். முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே ஓட்டமெதனையும் பெறாது வெளியேறினார் சாள்ஸ். இங்கிலாந்தின் பக்கம் அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக்கருதப்பட்டது. கெயிலும் சாமுவேல்ஸும் இணைய தீவுகளின் பக்கம் திசைமாறியது ஆட்டம். சிக்சர்களாக நொறுக்கித் தள்ளினார் கெயில். அவர், 27 பந்துகளில் அரைச்சதம் கடந்து 47 பந்துகளில் சதத்தையும் நிறைவு செய்தார். சுழல், வேகம் என எந்தவொரு பந்துவீச்சாளரும் மிச்சமில்லை. இங்கிலாந்தின் அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிவடைய முடிவில் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தார் ரசல். இங்கிலாந்தின் இமாலய இலக்கை 6 இலக்குகள் மீதமிருக்க ஊதித்தள்ளியது தீவுகள். கெயில் 100 ஓட்டங்களுடன் இறுதிவரை களத்தில் இருந்தார். சாமுவேல்ஸ் 37 ஓட்டங்களையும், ரசல் ஆட்டமிழக்காது 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக வில்லி, ரொப்லி, ரசிட், மொயின் அலி நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். கெயில் ஆட்டநாயகனானார்.

(ம)




# தீவுகளுக்கு திரில் வெற்றி

பெண்களுக்கான ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தீவுகள் ஆரம்பத்தில் சிறிது தாக்குப் பிடித்தாலும் மத்திய வரிசை வீராங்கனைகளின் தடுமாற்றத்தால் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரெய்லர் 40 ஓட்டங்களையும், அகுலிரியா 15 ஓட்டங்களையும், மத்தியூஸ் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக அமின் 4 இலக்குகளையும், யூசுப் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை முழுமையாகத் தாக்குப் பிடித்த போதிலும் அந்த அணியால் 5 இலக்குகள் இழப்புக்கு 99 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. முடிவில் 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகளின் அணி. அதிகபட்சமாக மரூப் 22 ஓட்டங்களையும் அமீன் 20 ஓட்டங்களையும் மிர் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தீவுகள் சார்பாக மொகமட் 3 இலக்குகளையும், குயின்ரின், டொட்ரின் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

(ம)



# இந்தியாவை பாகிஸ்தான் வீழ்த்தினால் பாகிஸ்தானுக்காக நிர்வாண நடனம்

## குவான்டீல் பலூச் சர்ச்சைக் கருத்து

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா-பாகிஸ்தான் ஆட்டத்தில் இந்தியாவை பாகிஸ்தான் வீழ்த்தினால் நிர்வாணமாக நடனமாடுவதாக பாகிஸ்தான் நடிகையான குவான்டீல் பலூச் தெரிவித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்.

இவர் அடிக்கடி அதிரடியாக ஏதாவது செய்வார். ஆசியக் கிண்ணத் தொடரில் இந்தியாவிடம் பாகிஸ்தான் தோற்றதால் பாகிஸ்தான் அணியின் தலைவரான அப்ரிடியை பைத்தியம் என்று வர்ணித்து 'இந்த மாதிரி பைத்தியத்தை தலைவராக வைத்துக் கொண்டு நாம் எதையுமே வெல்ல முடியாது' எனத் தெரிவித்திருந்தார். இதற்கு முன் இந்தியப் பிரதமர் மோடியை அவமரியாதையாகப் பேசி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். இந்த வரிசையில் தற்பொழுது நிர்வாண நடனம் பற்றி தெரிவித்துள்ளார்.

(ம)

# ஐ.நா. தூதுவர் பதவியை பறிகொடுத்தார் செரபோவா

தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துப் பாவனை காரணமாக இடைக்காலத் தடைக்குள்ளாக்கப்பட்டுள்ள ரஷ்யாவைச் சேர்ந்த ரென்னிஸ் வீராங்கனையான மரியா செரபோவாவின், ஐக்கிய நாடுகளின் நல்லெண்ணத் தூதுவர் பதவி, இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மெல்டோனியம் என்ற ஒரு வகையான ஊக்கமருந்துப் பதார்த்தத்தை உட்கொண்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டே மரியா செரபோவாவுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அவ்விடயம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. 2007ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு அவர் நல்லெண்ணத் தூதுவராக இருந்து வந்த நிலையில், அப்பதவியே இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.